ாவேரி

வியய - மாசி

February - 1947

As. 8

வழக்கப்படி எமது முன்னேற்றம்

1946ல்

முற்றுப் பெற்ற வியாபாரம்

5·70 கோடிக்குமேல்

1945ல்

5·50 கோடிகள்

நாஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, COUNCIL HOUSE STREET, CALCUTTA

மதராஸ் பிராஞ்சு

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்

362, சைனாபஜார் ரோட்

ஸப் ஆபீஸ்

பெங்களூர் & மதுரை

N.I.F-TA5

சென்னை 600 028

PLEASE
DON'T MISS

Your
Favourite —
in a New Cover

KERALA SOAP INSTITUTE, CALICUT

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவருமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி. நகர் . . . . மதராஸ்.

EASTERNS 376.



அகில இந்திய பொருட்காட்சிகளிலும், பற்பல பெரிய பிரமுகர்களாலும் குணத்திலும், மணத்திலும் மிகச் சிறந்தது என்று நன்மதிப்பைப் பெற்ற வாசனைத் திரவியங்கள்

K. T. R. கிருஷ்ண அகர்பத்தி, பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், பற்பொடி முதலியன.

விபரங்களுக்கு :—

K. T. R. வாசனாதி திரவியசாலை,

விஜயபுரம், (திருவாரூர்.)

திலக் மார்க் மிஸ்கி பெருங்காயத்தையே உபயோகியுங்கள்

ஹெட் ஆபிஸ் பம்பாய்



பிராஞ்சு: மதுரை

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

கோபால்ஜி சாம்ஷி & கோ., 30, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ்

விரைவில் வெளி வருகிறது!

★

தஞ்சை ஜில்லாவிற்கு
- உரிமையாளர் -

விர்கோ பிலிம்ஸ்

தெப்பக்குளம் P.O. திருச்சி

சிறு குடிசையோ
அல்லது பெரிய
ஆலையோ

•

குடிசை, அரண்மனை, ஆலை ஏதானாலும் சரி இவைகளின் நிர்மாணத்தில் எஃகு இன்றியமையாதது.

•

டாடா எஃகு



டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102A, கிளைவ் தெரு, கல்கத்தா.

மற்ற மருந்துகளால் குணப்படுத்த முடியாதென அபிப்பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வுயர்ந்த மருந்தினால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

சிறந்த டாக்டர்கள் இதை வைத்திய சாஸ்திரத்திற்கே ஒரு நன்கொடையெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் [illegible]
ஹம்பி வெங்கட்ரமணய்யா அண்ட் சன்ஸ்.
[illegible] ரோட், மயிலாப்பூர், மதுரை,
[illegible], கல்கத்தா, [illegible],
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.

லோத்ரா
கர்ப்பாசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவைபுரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோக நிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

EASTERNS 378

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள்:-
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பெர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

மார்க்கெட்டுகளில் பிரசித்திபெற்றது



குணம், மணம், ருசி இவைகளில் இணையற்றது
வி. எச். ஆர். பெருங்காயம்தான்

வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜி & Co.,
194, கோவிந்தப்பநாயகன் தெரு, — ஜி. டி. மதராஸ்.

கற்பனா சக்தி

கர்னாடக சங்கீதத்தில் சுருதி லய சுத்தி இருக்க வேண்டியது அவசியமென்றாலும், கற்பனை இல்லாவிட்டால் 'சப்' என்றுதானிருக்கும். நல்ல சாரீரத்துடனும் ஞானத்துடனும் விசேஷ கற்பனை கூடியிருப்பதால்தான் ஒரு வித்வானுடைய சங்கீதம் பிரபலமாக விளங்குவது.

இக் கற்பனா சக்தி இளம் வித்வானான இசைஒளி கும்பகோணம் **A. D. ஸுல்தானின்** சங்கீதத்தில் அபாரமாக இருப்பதால்தான் அவருக்கு விசேஷ ஆதரவு. நீங்கள் இவர் இசையைக் கேட்டு ஆனந்திக்காமலிருந்தால் இங்கே குறிப்பிட்டிருக்கும் இடங்களில் கேட்டு அனுபவிக்கலாம்.

1—3—47 ஆலப்புழை
8—3—47 வளையபட்டி
12—3—47 சோளிங்கபுரம்
15—3—47 திருச்சி
23—3—47 அருப்புக்கோட்டை

AS-338
இன்றியமையாதது
Plan
அழகு, சவுகரியம், சிக்கனம் இவைகளை மனதில் இருத்திக்கொண்டேதான் நாம் வீடு கட்டுகிறோம். ஆனால் எண்ணங்கள் மட்டும் பயன்படாது. இதைக்கொண்டு நாம் வகுக்கும் திட்டம், பிளான்தான் இவ் வம்சங்களை நமக்கு அளிக்கிறது. சிற்பி, கொத்தன், எஞ்சினியர், ஆகிய அனைவரும் பிளானை ஒட்டியே நடந்து நாம் கற்பனை செய்த இல்லத்தை எழுப்புகிறார்கள்.
அழகிய சருமத்தையுடைய அணங்கின் முக்கிய சாதனம் நல்ல மறுதளிக்க முடியாத குணம் படைத்த ஸோப்—ஆம், அத்தகைய கட்டி மலபார் லிம்டா ஸோப்தான்
MALABAR
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரோப்ரைடர்ஸ்: சேட். N.P. & கோ. கள்ளிக்கோட்டை..பம்பாய்..சென்னை...



தாய்மார்கள் அறிவர்

— உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின் —
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-III? W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street — G. T. MADRAS.

வீகம்ஸீயின்

டிரேட் மார்க்

V. C.

(ஸ்தாபிதம் 1893)

★

குறிபோட்ட நகைகளெல்லாம்

சவரன் பொன்னுக்கும்

முதல்தரமான

வைரங்களுக்கும்

மேன்மையான கைதேர்ந்த

வேலைப்பாட்டுக்கும்

உத்தரவாதமுள்ளவை

VEECUMSEE
CHABILDOSS & SONS

Renowned Diamond Merchants,

China Bazaar :: MADRAS.

பொருளடக்கம்

விய மலர் 6 — மாசி இதழ் 7

சென்னை மந்திரிசபை நெருக்கடி 11

மேல் வகுப்பு ஒழிக்கப்பட வேண்டும் 14

உங்களுக்குத் தெரியுமா? 16

கதம்பம் 17

மஹாபலிபுரம் 19
கே. எஸ். நாகராசன்

தெய்வம் உண்டு 21
சுவை

சுசேதா கிருபளானி 25
யோகி சுத்தானந்த பாரதியார்

சாயம் 29
ஆர். கே. விசுவநாதன்

கோபுவின் தாய் 33
எஸ். கிருஷ்ணன்

நமாஸ் 39
டி, சேஷாத்திரி

விமானக் குறிப்புகள் 44
எஸ். ஆர். பாலசுப்ரமணியன்

குழந்தையின் கேள்வி 47
நா. கி. நாகராஜன்

சொற்காத்துச் சோர்விலாள் பெண் 51
சாரி

சித்ரா 57
கே. சுந்தரம்மாள்

கூழும் குடியும் 65
வே. சாரநாதன்

ஆலயப் பிரவேசம் 67
ஜி. எஸ். மணி

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

Grams : ASVAMS. Estd : 1946.

198029

ASVAMS

Radios, Electricals Etc :
Sales & Service.

105, Big Street, :: KUMBAKONAM.

EXCLUSIVE DISTRIBUTORS FOR EKCO (BRITISH) RADIOS

for the Districts of Tanjore & South Arcot,
and the French Territories of Karaikkal & Pondicherry.

To our Patrons!

Friday, the 14th February, 1947, marks the first milestone in the proud and solid progress of ASVAMS, in its services to the Public, through its various lines; and we can assure YOU of our still more efficient service during the second year of our onward march. We thank YOU for your kind patronage in the past, and look forward to the pleasure of having your continued and increased patronage in our second year of progressive service to YOU.

An Apology!!

We deeply regret our inability to offer YOU anymore of the EKCO 5-Valve AC & AC/DC Models, the craze of the Market, as our entire quota of 100 sets of these Models has been sold out well within six months!!!

Happy News!!!

We have great pleasure in offering YOU the following Superfine EKCO Models, to suit your taste and needs; write to us now; or contact your nearest Dealer, for an EKCO, and avoid disappointment :—

Model A24, a 6-Valve AC Bandspread Deluxe listed as Rs. 660/- ;
Model A22T, a 4 Valve AC All-Wave Superhet listed at Rs. 475/- ;
Model BV43, a 4 Valve Battery All-Wave Superhet listed at Rs. 560/- ; &
Model U29T, a tiny Deluxe Transportable, at an astoundingly low price of Rs. 360/-

• • •

We have great pleasure in introducing to YOU

RADIONICS

our sister organisation, dealing in Radios Etc., which has commenced functioning from the 14th February 1947, in our premises.

காவேரி

விய மலர் 6	“சென்றிடுவீ ரெட்டுத்திக்தும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்த சேர்ப்பீர்—” பாரதியார்	மாசி இதழ் 7

சென்னை மந்திரிசபை நெருக்கடி

பிரகாசம் மந்திரி சபை இன்று தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்ற விஷயம் வியக்கத்தக்கதல்ல. மந்திரி சபை அமைத்த பொழுதே இன்னும் எத்தனை நாள் இதற்கு ஆயுள் என்று கேட்காதவர் சிலரே. ராஜாஜியை அபாண்டமாகப் பழிசுமத்தி விரட்டி அடித்த உடனே பிரகாசம்—காமராஜ் கூட்டுறவு தளர்ந்து விட்டது. தலைவர் தேர்ந்தெடுப்பதிலும் சரி, மந்திரி சபை அமைப்பதிலும் சரி, இவர்களிடையே தீவிர அபிப்பிராய பேதம் ஏற்பட்டு விட்டது. பிரகாசத்தைக் காலைவாரி விடத் தருணம் அன்றே தேட ஆரம்பித்து விட்டார்கள்.

ராஜாஜியைக் காங்கிரஸிலிருந்தே விரட்டிவிட வேண்டும் என்ற இயக்கத்தில் பிரகாசம்காரு வெறுக்கத்தக்க முறையில் காரணமின்றி அக்ஷதை போட்டுக் கொண்டு, பங்கு எடுத்துக் கொண்டது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். அப்பொழுது தீவிர காரியவாதியான பிரகாசம் காமராஜ் நாடாரின் திறமையைப் பற்றியும் அவர் தொண்டைப் பற்றியும் அவருடைய சீல ஒழுக்கத்தைப் பற்றியும் ஓர் அறிக்கை மூலம் சர்ட்டிபிகேட் கொடுத்தார். அப்படித் தட்டிக் கொடுத்த காமராஜைப் பற்றி இப்பொழுது பிரகாசம் என்ன நினைக்கிறார் என்று தெரிந்தால் ரஸமாயிருக்கும்.

பொதுவில் பிரகாசம் அன்று விதைத்த விதையை இன்று தாமே அனுபவிக்க நேரிட்டு விட்டது என்பதை உணர்வார் என்று நம்புகிறோம்.

தாம் பிரதமராக வரவேண்டுமென்று படாதபாடுபட்டு, ராஜாஜியை ஒழிக்க வேண்டுமென்று எண்ணினார் பிரகாசம். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் வாக்கை மறுத்துப் பதவி ஏற்றார். அதே ஆசையினால் தூண்டப்பட்டு, கட்சியிலுள்ள மற்றும் சிலர் இன்று கிளர்ச்சி செய்து பதவி வேட்டையில் ஈடுபட்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. பிரகாசம் செய்த பதவி வேட்டையைப் பின்பற்றி, அவருடன் அன்று உடுக்கடித்த பலர் கிளர்ச்சி செய்கிறார்கள்.

பிரகாசம் மந்திரிசபை என்ன குற்றம் செய்துவிட்டது என்ற பிரச்னையைச் சிலர் எழுப்புகிறார்கள். இதைக் காட்டிலும் அது என்ன நன்மையைச் செய்திருக்கிறது என்று கேட்பதுதான் பொருத்தமாயிருக்கும். பொதுமக்கள் எவ்வகையில் இப்பொழுது ஜனநாயக மந்திரிசபையினால் நன்மை அடைந்திருக்கிறார்கள் என்று பரிசிலனை செய்வது அவசியம். யுத்தகாலத்தைக் காட்டிலும் இப்பொழுது உணவு, துணி, விலைவாசிகள் இப்பிரச்னைகள் மிகவும் மக்களைப் பாதிக்கின்றன. அதைத் தீர்ப்பதில் மந்திரிசபை எத்தகைய சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றது என்று பார்க்கவேண்டும். மந்திரிசபை ஆரம்பித்த காலத்தில் 16-அவுன்ஸ் ரேஷன். இப்பொழுது 12-அவுன்ஸ். அதிலும் அரிசி 10-அவுன்ஸ். சாப்பிடமுடியாத ரகம். மக்களின் தொல்லைகளுக்கு அளவே இல்லை. விமோசனம் ஏற்பட மந்திரிகள் பங்கீடு விதிகளை அதிகரித்தார்களே ஒழிய உணவுப்பொருள்களை அதிகரிக்கச் செய்யத் தீவிர முயற்சி ஒன்றும் மேற்கொள்ளவில்லை.

உடை விஷயத்தில் பிரகாசம் மந்திரி சபை குழப்பிய குழப்பம் எந்த நாட்டிலும் எந்த மாகாணத்திலும் இருந்திருக்காது.

துணிப்பஞ்சம் தலை விரித்தாடும் காலத்தில்தான் துணி உற்பத்திக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்த முயற்சித்தார்கள். வீடு பற்றி எரிந்து கொண்டிருக்கும் பொழுது கூரை வீடுகள் கட்டக்கூடாது என்ற கட்டளை விதித்து, தீயை அணைக்க உதவாது கட்டுப்பாட்டை வற்புறுத்தினால் மக்களுக்கு ஏன் ஆத்திரம் மூளாது? குடிக்கத் தண்ணீரின்றி வதங்கும் மக்களைக் கிணற்று நீரைக் குடிக்கக் கூடாது, ஆற்று ஜலத்தை எடுக்கக் கூடாது என்றெல்லாம் தடை செய்தால் எப்படிச் சாத்தியப் படும்? வறண்டு கிடக்கும் மக்களுக்குக் குழாய் ஜலத்தின் மஹிமையை உபதேசித்து, கைக்கெட்டிய நீரைப் பருகலாகாது என்று வற்புறுத்துவது மதியீனத்தைத் தவிர வேறென்ன? பிரகாசத்தின் கதர் திட்டம் நல்லது, காங்கிரஸ் கொள்கைக்கு உகந்தது, என்று ஒத்துக்கொண்டாலும், அதை இப் பஞ்சகாலத்திலா அமுலுக்குக் கொண்டு வருவது? அப்படியே கிடைத்த மில் ஜவுளியை வினியோகிப்பதில் எவ்வளவு அபத்தங்கள்?

விலைவாசிகளைப் பொறுத்த வரையில் மந்திரி சபை வந்தபொழுது இருந்ததை விட இப்பொழுது எல்லாச் சாமான்களும் பன் மடங்கு அதிகமாய் விற்கின்றன. கவர்மெண்ட் உத்யோகஸ்தர்களுக்குச் சம்பள உயர்வு அதிகமென்றாலும் அது எவ்வகையிலும் அவர்களுக்கு நன்மை பயக்கவில்லை என்று கூறலாம். விலைவாசிகள் உச்சாணிக்கேறி விட்டன. எதற்கும் கட்டுப்பாடு, ஆனால் அதன் பயனாக மக்கள் அடைந்ததென்ன? அதிக விலையானாலும் கிடைத்துக் கொண்டிருந்த சாமான்கள் மாயமாய் மறைந்து விட்டன. எல்லாச் சாமான்களுக்கும் பஞ்சம்தான்.

பிரகாசம் மந்திரி சபையின் பலனாக பொதுமக்கள் அடைந்தது என்ன? சில ஜில்லாக்களில் மது விலக்கு. இது எந்த மந்திரிசபை வந்தாலும், ஜஸ்டிஸ் கட்சி பதவி ஏற்றாலும், செய்யப்படும் சீர்திருத்தம். இன்னும் சில வழ வழ குழ குழ என்ற சட்டங்கள், பல புதிய பதவிகள் சிருஷ்டி. மந்திரிகளின் சுற்றுப் பிரயாணம், சாரமற்ற பேச்சுகள். இவர்களின் ஆட்சியின் பலனாகக் கம்யூனிஸ்டுகள் தலை விரித்தாட ஆரம்பித்தார்கள்; தேச ஐக்கியத்தைச் சீர்குலையச் செய்தார்கள். அவர்கள் செய்த துஷ்பிரசாரத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்ய, காங்கிரஸில் இன்று இம்மாகாணத்தில் ஆள் கிடையாது. மாகாணத்திலுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்கள் தேர்தலில் ஈடுபடுவதிலும், பதவிவேட்டை ஆடுவதிலும், மந்திரிகளுக்கு மாலை போட்டு, காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தி வருகின்றனவே ஒழிய, தீவிர காங்கிரஸ் பிரசாரம் செய்வதிலோ, கம்யூனிஸ்டு பிரசாரத்தைத் தைரியமாக எதிர்த்துப் போராடுவதிலோ அக்கரை கொள்ளவில்லை. திறன் அற்ற ஸ்தாபனங்களாகவும், ஜீவனற்ற கிளைகளாகவும் ஆய்விட்டன ஆங்காங்கேயுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்கள். மக்களுக்கும் காங்கிரஸ்காரர்களிடத்தே மதிப்புக் குறைந்து விட்டது. காங்கிரஸ் மந்திரி சபையும் இதற்குப் பொறுப்பாளி என்பது நமது அபிப்பிராயம். ஸ்ரீ காமராஜ் நாடார் மந்திரிசபையில் வைத்திருக்கும் கவனத்தில் பாதி தாம் தலைமை வகிக்கும் ஸ்தாபனத்தில் செலுத்துவாரானால் அது சீர்திருந்திவிடும்.

இங்நிலையில் பிரகாசம் மந்திரிசபை அவசரச் சட்டங்கள்மூலம் கம்யூனிஸ்டுகளை அடக்க முற்பட்டுவிட்டது. பிரசாரம் செய்து மக்கள் மனதை மாற்றிவந்த காங்கிரஸ்காரர்களுக்குப் பலாத்கார அடக்குமுறை வியப்பை உண்டு பண்ணி விட்டது. அதுவும் தாங்கள் இதுவரை அடிப்படையான உரிமைகள் என்று கருதிவந்தவை அவசரச் சட்டம் மூலம் பறிக்கப்படவே, மனம்தளர்ந்து தள்ளாடி நிற்கின்றனர். காங்கிரஸுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யும் கம்யூனிஸ்டுகளைக் குறித்து அவை பிரயோகப்படுத்தியிருப்பினும் மனச்சாக்ஷியைச் சமாதானப் படுத்திக் கொள்ளக் கஷ்டப்படுகிறார்கள் பல காங்கிரஸ்காரர்கள். காலாகாலத்தில் கம்யூனிஸ்ட் பிரசாரத்தை எதிர்ப் பிரசாரத்தின்மூலம் சமாளிக்காதிருந்ததால் இன்று அவசரச் சட்டம் அவசியமாகி வீட்டது. காங்கிரஸ் கமிட்டிகள் ஜீவனற்ற ஸ்தாபனங்களாக ஆக்கப்பட்டதுதான் இதற்குக் காரணம். அவை எதற்கும் மந்திரிசபையை எதிர்

பார்த்து நிற்கின்றன. மக்களுடன் நெடு நாளாக ஏற்படுத்திக்கொண்ட தொடர்பை மறந்து விட்டன.

பொதுஜன மந்திரிசபை ஏற்பட்டதினுல் விளைந்த நன்மைகள் என்ன என்று தெளிவாக எடுத்துக்காட்டக்கூடியது அதிகம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டிவருகிறது. எனவே பிரகாசம் மந்திரிசபை திறமையற்ற மந்திரிசபை என்பது கண்கூடு. மந்திரிகளில் அனேகர் மாகாண நிர்வாகம் வகிக்கும் பொறுப்புக்கு முற்றும் லாயக்கற்றவர்கள். ஓரிரண்டு நபர்களைத்தவிர, மந்திரிகள் பொம்மைகள் மாதிரிதான் இருந்து வருகிறுர்கள். தெளிவான திட்டங்கள் கிடையாது. திடச்சித்தம் இல்லை. பொது மக்களிடையே மந்திரி சபையைப்பற்றி மதிப்பில்லை. லஞ்சப் பேயை ஒழித்தே தீருவோம் என்று கர்ஜித்தார் பிரதமர் பிரகாசம் பதவிக்கு வந்தவுடன். ஆனுல் இன்று எங்கும் அப்பேய் தாண்டவமாடுகிறது. அவதூறு மந்திரிமார்களை விட்டபாடில்லை.

எனவே பிரகாசம் மந்திரி சபையைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதில் ஏகோபித்த அபிப்பிராயம் மாகாணத்தில் இருப்பது உண்மைதான். ஆனுல் ஸ்ரீ பிரகாசத்தைத் துரத்தி விட்டு வேறு பிரதமர் ஏற்படுத்த மாகாணத்தில் திறமைவாய்ந்தவர்கள் உளரா என்று யோசிக்கவேண்டியது அவசியம். தியாகி என்ற காரணத்திற்காக மந்திரிகளைப் பொறுக்கி எடுத்ததின் பயன்தான் இன்று நாம் காணும் உதவாக்கரை மந்திரிசபை. பன்முறை சத்தியாக்கிரஹம் செய்தவர்களோ சிறை சென்றவர்களோ மந்திரிப் பதவி வகிக்க லாயக்குள்ளவர்கள் என்ற மனப்பான்மை அகல வேண்டும். தன்னலமற்ற பொதுஜன ஊழியத்தில் ஈடுபட்டவர்கள் பொறுக்கப்படவேண்டும் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அதற்காகத் திறமையற்றவர்களைப் பொறுக்கி நிர்வாகத்தை அவர்கள் கையில் ஒப்படைத்தால் நாம் சென்ற பத்து மாதங்களாகக் கண்ட குழப்பங்கள் தான் விளையும். திடச்சித்தமும், நுண்ணறிவு படைத்த விசால மனப்பான்மையும் கொண்ட மேதைகளைக்கொண்ட மந்திரி சபை அமைத்தாலன்றி மாகாணம் சீர்திருந்தாது; மக்களின் நெருக்கடி தீராது. தற்போது சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கும் நபர்களில் இத்தகைய பதின்மூன்று நபர்கள் கிடைப்பது துர்லபமாக இருக்கலாம். பொதுத்தேர்தலின் பொழுது மிகத் திறமைசாலிகளான பல பிரபல காங்கிரஸ்காரர்கள் மனுச் செய்து கொள்ளாமலோ, அல்லது காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டாரினுல் தேர்ந்தெடுக்கப்படாமலோ இருக்கின்றனர். அவர்களுள் மிகச் சிறந்தவர்களை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டு மந்திரி சபையைத் திருத்தி அமைத்துக் கொள்வதுதான் மாகாண நன்மைக்குகந்தது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி விஷயங்களில் மறுபடியும் தலையிட்டால் மேற்கூறியபடி அவர்கள் செய்வது அவசியம். பிரகாசம் மந்திரி சபை ஒரு நெருக்கடியான காலத்தில் பல எண்ணங்களைக் கொண்டு அமைக்கப் பெற்றது. கட்சி பலத்திற்காகவும் பலரைத் திருப்தி செய்யவும் இயற்றப்பட்ட சபை. எனவேதான் அது மக்களைத் திருப்தி செய்யவில்லை. இனியாவது பிரகாசம் மந்திரி சபையைத் திருத்தி அமைப்பதில் திறமை, சுயநலமற்ற தன்மை இவைகளைச் சிரமேற் கொண்டு பொறுக்கப்பட்டால் மாகாண ஆட்சி செவ்வனே நடைபெறும். இல்லையேல் மறுபடியும் இதே அநித்தியம் தான் வரவிருக்கும் மந்திரி சபைக்கும். பொது மக்களின் நலன்தான் பாதிக்கப்படும். செஸ் ஆட்டம் தான் இனி மாகாண ஆட்சி.

அனுபவம் நிறைந்த பிரகாசத்தை வைத்துக்கொண்டே நல்ல மந்திரிசபை அமைக்கக்கூடும் என்பதும் பரிசீலனைக்குரியது. ஆனுல் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்தத் தற்கால மந்திரிசபை உதவாக்கரை, உடனே உதறித்தள்ள வேண்டியது என்பதில் பொதுமக்களுக்குச் சந்தேகமில்லை. காங்கிரசின் கௌரவத்தையே அது குலைத்துவிட்டது, மாகாணத்தின் பெயரைக் குறைத்துவிட்டது என்பதே அதை ஒழித்துக்கட்டப் போதிய காரணமாகும்.

மேல் வகுப்பு ஒழிக்கப்பட வேண்டும்

மத்திய சட்டசபையில் ரெயில்வே வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பிக்கையில், ரயில்வே மெம்பர் டாக்டர் ஜான் மத்தாய் ரூபாய்க்கு ஒரு அணா விகிதம் ரயில்வே பிரயாணக் கட்டணம் உயர்த்த நேரிடும் என்று அறிவித்தார்.

இத்தருணத்தில் நமது இந்திய ரயில்வேக்களைப் பற்றிய சில விஷயங்களை இக்கட்டுரையின்மூலம் மக்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறார் **க. சந்தானம்.** *அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கம் இது.*

இந்திய ரெயில்வேயில் மூன்றும்வகுப்புப்பிரயாணி தன்னை ஏற்றிச்செல்லக் கொடுக்கவேண்டிய கட்டணத்தோடு இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்புப் பிரயாணிகளுக்காகவும் கொஞ்சம் தொகை செலுத்த வேண்டியிருக்கிறது. இதுதான் உண்மை. ஆனால் இரண்டாம் வகுப்புப் பிரயாணி மூன்றும் வகுப்புக் கட்டணத்தில் மூன்று மடங்கு அதிகம் கொடுப்பதால், தான் ரயிலில் அனுபவிக்கும் சவுகர்யங்களுக்குப் பாத்யதையுள்ளவன் என்று நினைக்கிறான். முதல் வகுப்புப் பிரயாணி இரண்டாம் வகுப்புக் கட்டணத்தில் இரண்டு மடங்கு அதிகம் கட்டுவதால் தன் ஸீட்டுக்கு மேல் பர்த்தை யாராவது உபயோகித்தால் மனம் நொந்து கொள்ளுகிறான். ஆனால் கணக்கைப் புரட்டிப் பார்த்தால் ஒரு மூன்றும் வகுப்புப் பிரயாணியை ஒரு மைல் இழுத்துச் செல்ல என்னவாகிறதோ அதைவிடப் பத்து மடங்கு செலவு ஆகிறது ஒரு இரண்டாம் வகுப்புப் பிரயாணியை இழுத்துச் செல்ல என்று தெரியவரும். இதை ஸீட்-மைல் என்று சுருக்கிக் கூறுவார்கள். முதல் கிளாஸ் ஸீட்—மைலுக்கு அதே விகிதத்தில் ஜாஸ்திதொகை செலவு. இத்துடன் ரெயில்வே ஸ்டேஷன்களில் மேல் வகுப்புப் பாஸஞ்சர்களுக்கென்று தனியே அமைத்துள்ள வசதிகளுக்காகும் செலவுகளேயும் கூட்டிப்பார்த்தால், மேல் வகுப்புப் பிரயாணிகள் தங்களுக்காகச் செலவிடப்படும் தொகையில் ஒரு சிறிய பகுதியைத்தான் கட்டணமாகக் கொடுக்கிறார்கள் என்று தெளிவாகும். அப்படியானால் இந்த மீதித்தொகையை யார் கொடுக்கிறார்கள்? இந்திய ரெயில்வே நிர்வாகம் வியாபார முறையில் நடத்தப்படுவது எல்லோரும் அறிந்த விஷயமே. அதன் வருவாயைக் கொண்டேதான் ரெயில்வே நடத்தப்படுகிறது. எனவே மூன்றும் வகுப்பு ஏழைப் பிரயாணிகள் தங்கள் சகோதர பணக்காரர்கள் சுகித்துப் பிரயாணம் செய்யவேண்டி, தாங்கள் செலுத்த வேண்டிய தொகையைக் காட்டிலும் அதிகக் கட்டணம் தங்களை அறியாது அளிக்கிறார்கள். ஜமீன்தார்களை ஒழிக்கவேண்டும்என்ற கிளர்ச்சி நாடெங்கும் ஓங்கி நிற்கிறது. ஜமீன்தார்கள் ஒரு சில குறிப்பிட்ட பாகங்களில் ஒரு சில குடியானவர்களைக் கொள்ளையடிக்கிறார்கள். ஆனால் நமது இந்திய ரெயில்வேக்களில், இன்று ஜமீன்தாரி முறையைக் காட்டிலும் கொடிய முறை இருந்து வருகிறது. மேல் வகுப்புப் பிரயாணிகள் எல்லாத் தேச மக்களையும் கொள்ளை அடித்துக் கொண்டே வருகிறார்கள்.

மேலும் எல்லா மூன்றும் வகுப்புப் பிரயாணிகளும் பணம் கொடுத்துப் பிரயாணம் செய்பவர்கள். ஆனால் மேல் வகுப்புப் பிரயாணிகளில் பெரும்பாலோர் ரெயில்வே பாஸ் உள்ளவர்களாகவோ, அல்லது கவர்மெண்டு செலவில் பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்களாகவோ இருப்பார்கள். யுத்தகாலத்தில் பொதுஜனங்கள் மேல் வகுப்பில் பெருவாரியாகப் பிரயாணம் செய்ய நேரிட்டது என்பது வாஸ்தவம். எனினும் மூன்றும் வகுப்பு வருமானந்தான் இந்தியன்ரெயில்வேக்களின் ஏராள யுத்த லாபத்திற்குக் காரணம். 1939—40-ல் ரெயில்வேக்களின் மொத்த வருவாயான 29-கோடியில், முதல், இரண்டாம் வகுப்புக்களிலிருந்து வருவாய் 2-கோடி. மூன்றும் வகுப்பு, இண்டர் வகுப்பு 27-கோடி. 1944—45-ல் மொத்த வருவாய் 73½-கோடி. இதில் மூன்றும் வகுப்பு, இண்டர் வகுப்பின் வருவாய் 61½-கோடி; முதல் இரண்டாம் வகுப்பு 12–கோடி. இதிலும் முதல் இரண்டாம் வகுப்பில் பாதி வருவாய்க்குமேல் கவர்மெண்ட் உத்யோகஸ்தர்களின் போக்குவரத்தினால் ஏற்பட்ட வருவாயாகத்தானிருக்கும்.

வெட்ஜ்வுட் கமிட்டி முதல் வகுப்பை எடுத்துவிடலாம் என்று சிபார்சு செய்தது. ஆனால் அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இன்று பொது ஜனங்களின் நன்மைக்காகவாவது இச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுவது அவசியம்.

வகுப்பு வித்யாசங்களை ஒழித்து ஒரு வகுப்புத்தான் என்று ஏற்படுத்தினால் மிகவும் நலமாயிருக்கும். மூன்றாம் வகுப்பை இன்றுள்ள இண்டர் வகுப்பைப் போல் செய்து, நெடுந்தூரம் செல்லும் பிரயாணிகளுக்குப் படுக்கும் வண்டிகள் தனியாக அமைத்தால் நேர்மையாக இருக்கும். இன்று ரயில்வே சிப்பந்திகள் அனைவரும் மேல் வகுப்புப் பிரயாணிகளின் தாஸர்களாக இருக்கிறார்களே ஒழிய எல்லா வரிப்பளுவையும் சுமக்கும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளின் நலனைக் கவனிப்பதில்லை.

இதனால் பணக்காரர்கள் மிகவும் பாதிக்கப்படலாம் என்று கருதலாம். ஆனால் மோட்டார்கார்களும், டாக்ஸிகளும் வசதியளிக்கையில் ரயிலில் சிறிய தூரம் செல்லும் வகுப்புப் பிரயாணிகள் இனிமேல் குறைந்து கொண்டேதான் வருவார்கள். நெடுந்தூரம் செல்ல ஆகாய விமானங்கள் வந்து விட்டன. மேல் வகுப்புப் பிரயாணிகள் இனி ரயிலைச் சீந்தமாட்டார்கள். வெகு சீக்கிரத்தில் ஆகாய விமானக் கட்டணங்கள் குறைந்தவுடன் மேல் வகுப்பு வண்டிகள் ரயிலில் காலியாகத்தான் செல்ல நேரிடும்.

இந்த மேல் வகுப்பு எடுத்து விடப்பட்டால் நாம் வகுப்பு வித்யாசத்தை ஒழிப்பதாகும். சமூகத்திலும், குடும்ப வாழ்க்கையிலும் இவ் வித்யாசங்கள் எஞ்சி நிற்கின்றன என்ற காரணத்தைக் கொண்டு பொதுஜன மூல ஸ்தாபனங்களில் இவ்வித்யாசங்களுக்கு நாம் இடமளிப்பது தவறு. ரெயில்வே, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, இங்கெல்லாம் பரமஏழையான எந்த இந்தியனும் பணக்காரனைப் போல் சமமாகப் பாவிக்கப்படவேண்டுவது அவன் உரிமையாகும். ரெயில்வேயில் ஒரே வகுப்பு என்ற சீர்திருத்தத்தைக் காங்கிரசும் முஸ்லீம்லீகும் ஒன்றுசேர்ந்து செய்து வைத்தால் பொது மக்களுக்கு அவர்கள் பெருத்த சேவை செய்தவர்களாவார்கள். இத்தகைய சீர்திருத்தம் மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களிலும் வரவேற்கப்பட்டு, தேசீய அரசாங்கம் வந்துவிட்டது என்று அவர்கள் மனப் பூரணமாக உணர வசதியளிக்கும்.

கவலை வேண்டாம்?

ஜலக் கஷ்டத்தைப் போக்க **மயர்ஸ் பம்புகள்**

★



இப்பொழுது வருவதற்கு
- ஆரம்பித்துவிட்டன -

தேவையானவற்றிற்கு
விவரங்களுடன் கீழ்
கண்ட அட்ரஸுக்கு
எழுதவும்:-

★

Water Supply Specialists Ltd.,

Sole Agents for MYERS PUMPS

Thiagarayanagar — MADRAS.

உங்களுக்குத் தெரியுமா?

இன்று தென் ஆப்ரிக்காவில் வெட்டி எடுக்கப்பட்ட ஒரு குகையிலிருந்து ஆஸ்டிரலோபிதிகஸ் (Australopithecus) என்ற வகை மனித வர்க்கத்தினர் பத்தாயிரம் வருஷங்களுக்கு முன் உயிர் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் நம்மைப்போல் அங்க அவயவங்கள் கொண்டு, துணி உடுத்தி மனிதர் போல் தோள்பட்டைகள் பின் தள்ளி நிமிர்ந்து நடந்து, பயிர் செய்து வாழ்ந்தார்கள் என்றும் தெரியவருகிறது. இக்காலத்தில் நாகரிகம் பரவாத பூமியின் பல பாகங்களின் காடுகளில் வசிக்கும் கூட்டத்தார் மாதிரியே அவர்களும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதைக்கண்டு பிடித்தவர் ஆக்ஸ்போர்ட் கலாசாலை ஆசிரியர் W. E. கிராஸ்கிளார்க்.

இதுவரை மனிதன் ஏப் என்னும் ஒரு வகை மனிதக் குரங்கின் அம்சம், அதிலிருந்து முதிர்ந்து வந்தவன் என்று கருதி வரப்பட்டது. தென் ஆப்ரிக்காவில் கிடைத்துள்ள சாக்ஷியம் இதைத் தெளிவாகப் பொய்ப்பித்து விட்டது.

○ ● ○

இங்கிலாந்தில் வீட்டு வசதி மிகக் குறைவு. செங்கற்களால் வீடுகள் கட்டப்படவேண்டுமென்றால் அதிக தாமதமாகிறது. எனவே பெரிய சிமிண்ட் பிளாக்குகள் தயாரித்து அவைகளை அடுக்கிப் பெரிய வீடுகளைச் சில தினங்களில் கட்டிவிடுகிறார்கள். இம்முறை இந்நாட்டிலும் கையாளக் கூடியதே.

○ ● ○

நிலக்கடலைப் பிண்ணாக்கிலிருந்து கம்பளி போன்ற ஒருவகை நூலைச் செய்யலாமென டில்லியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். விவசாயிகள் இனிமேல் தம் கால் நடைகளுக்கு வேறு தீனி தேடவேண்டியதுதான் போலும்!

○ ● ○

பிளைவுட் என்னும் ஒட்டுப் பலகை நாலாயிரம் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் எகிப்து மக்களின் உபயோகத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது.

பயிர்களுக்குப் பெருஞ்சேதம் விளைவிக்கும் புல், பூண்டுகளுக்கு மின்சார அதிர்ச்சி (Eletric shock) யினால் இனி அழிவுகிட்டும். இம்முறையில் களைகளை விரைவில் வேரோடு அழித்துவிட ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

○ ● ○

லண்டன் என்னும் பட்டணம் 29 பெரிய நகரங்கள் கொண்டது—28 க்குப் பரோக்கள் என்று பெயர். 29 ஆவது மிகச்சிறியது; அதற்குத்தான் ஸிடி (லண்டன் ஸிடி) என்று பெயர்.

○ ● ○

சில நாட்களுக்கு முன் நுணுக்கமான கருவிகளைக்கொண்டு செய்யப்பட்டவொரு சோதனையில் காட்டு மிருகங்களில் யானையே சிறிதும் ஓசையின்றி நடக்க வல்லது என்பது வெளியாயிற்று,

○ ● ○

நமது அணு நாணயங்கள் தயாரிக்கப்படும் நிக்கல் ஒரே தேசத்தில்தான் உற்பத்தியாகிறதாம்—அதுதான் கானடா தேசம்.

○ ● ○

ஒவ்வொரு வாரமும் உலகத்தில் 235,000,000 ஜனங்கள் ஸினிமா பார்க்கிறார்கள்.

அட்டைப் படம்

அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றிப் பிரசாரம் செய்யப் பண்டித நேருவின் இளைய சகோதரி, **மிஸஸ் கிருஷ்ணா ஹதீஸிங்** நியூ யார்க் வந்துசேர்ந்தார். அங்குள்ள டிரேக் ஹோட்டலில் அவர் வீற்றிருக்கும் காட்சி.

கதம்பம்

வேலையற்ற...........!

வேலையற்ற.........பூனையை ஏதோ செய்ததாகச் சொல்வார்கள். நமது மாகாண மதியூக மந்திரிகள் உருப்படியாக, உபயோகமாக ஒன்றும் செய்யாவிட்டாலும் பிரசாரம் செய்ய அளவில்லா ஆசை கொண்டுள்ளார்கள்.

மந்திரிகளின் உல்லாசப் பிரயாணம், சம்பந்தமில்லாப்பேச்சுகள், விஷப்பரீட்சைகள் இவைகளைப் பரவச்செய்யப் பத்திரிகைகளை ஆரம்பித்தார்கள். யாராவது அந்தக் குப்பைகளைக் கவனிக்கின்றார்களா என்பதில் அக்கரையில்லை.

பத்திரிகைகள் போதாதென்று விளம்பரம் செய்யக் கூலியாட்களை வேறு அமர்த்தப் போகிறார்களாம். மாதம் ரூ 60 லிருந்து ரூ 500 வரை கூலியாட்களுக்கு ஊதியம். எந்தப் பாட்டன் வீட்டுப் பணத்தை இப்படி விரயம் செய்கிறீர்கள் என்று கேட்பதற்கு ஆளில்லை.

பார்லிமெண்டரி சிகரெட்டரிகள் என்று சொல்லி மாதம் ரூ. 500 சொளையாகப் பொதுமக்கள் பணத்தை ஏப்பமிட்டு உறங்கும் தூங்குமூஞ்சிகளுக்கு ஏதாவது வேலை கொடுத்து, ஊதியம் ஜீரணமாகச் செய்யக்கூடாதா என்பதைச் சிந்திப்பாரில்லை. இன்னும் வேலையே இல்லாமல் சம்பளம் வாங்கி நேரத்தைப்போக்க வகையறியாமல் திண்டாடும் அரசாங்கச்சிப்பந்திகள் பலர் இருக்கப் புதிதாகத் தனியாகப் பிரசாரம் செய்யக் கூலியாட்கள் எதற்கு அமர்த்தவேண்டும்? காங்கிரஸ் ஸ்தாபனங்கள் ஊருக்கு ஊர் பல உள்ளனவே? ஏன், சட்டசடையைச் சோம்பேறி மடமாக உபயோகிக்கும் காங்கிரஸ் அங்கத்தினர் பலர் இல்லையா?

"பொதுமக்கள் வரிப்பணத்தை ஒரு சிலருக்கு அள்ளிக்கொடுத்து விரயம் செய்வதைவிடப் பிரசாரம் பலனளிக்கத் தனிப்பட்டவர்கள் நடத்தும் பத்திரிகைகளே போதும். மக்களை ஏமாற்றும் எண்ணமிருந்தால் அது கூலியாட்களால் முடியாது: மக்களுக்கு நலமான காரியங்களைச் செய்தலே சிறந்த பிரசாரமாகும்" இவ்வாறாக ஒரு அறிஞர் எழுதுகிறார்.

பொதுமக்கள் அபிப்பிராயமும் அதுவே என்பதில் சந்தேகமுண்டா?

இனி ரகசியமில்லை!

அணுகுண்டு செய்யும் முறையை ரகசியமாக வைத்துக்கொண்டு அமெரிக்கா தன் சகோதர வல்லரசுகளையும் கலக்கிவிட்டது. நேச தேச சங்கத்தின் வாயிலாக ருஷ்யா எவ்வளவோ மன்றாடியும் ரகசியத்தை வெளியிட மறுத்து விட்டது. மலிந்தால் கடைக்கு வருமென்று பிரிட்டன் மௌனம் சாதித்தது. ஆனால் ரகசியத்தை அறிய மற்ற வல்லரசுகள் நயத்தாலும் பயத்தாலும் முயற்சிசெய்தன. மாட்டவே மாட்டேன் என்று அமெரிக்கா கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டது. வல்லரசுகளுக்குள் சந்தேகப்பேய் குடிகொண்டது.

கனடாவிலிருந்து ஒரு அணுகுண்டு கிளம்பி அமெரிக்காவைச் சஞ்சலத்தில் ஆழ்த்தியது. அணுகுண்டு ரகசியத்தை சில ருஷ்யர்கள் அறிந்து கொண்டு ஓடிப்போய் விட்டனர் என்று வெளியாயிற்று. ரகசியம் முற்றிலும் அம்பலமாகியிருக்காது என்று அமெரிக்கமாமா மனக்கோட்டை கட்டினார். ஆனால் இந்த மனக்கோட்டையை மாஜி வர்த்தக மந்திரி வாலஸ் இப்பொழுது தகர்த்தெறிந்து விட்டார். "அணுகுண்டு உற்பத்தி செய்யும் யந்திரசாலைகள் பிரிட்டன், பிரான்ஸ், மற்றொரு நாடு" இம்மூன்றும் அமைத்துக்கொண்டிருக்கின்றன." என்பதாக வெளியிட்டு விட்டார்.

அதோடு நில்லாமல் உலக நன்மையையொட்டி, அரிய புத்திமதியையும் மாமாவுக்குப் புகட்டியுள்ளார். "உலகப்பாதுகாப்புக்காகவும் ஆயுத பரிகரணத்தை அந்தரங்க சுத்தியுடன் அமல் நடத்தவும் மற்ற நாடுகளுடன் சமதையாக ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாக அமெரிக்கா பழைய 'ஜபர்தஸ்தை' உதறித்தள்ளி விளக்க வேண்டும். இன்றேல் சுயநலமும் சச்சரவும் ஏற்பட்டு மற்றொரு பயங்கர யுத்தத்தில் மக்கள் அவதிப்பட நேரிடும். அணுகுண்டு செய்யும் முறை ரகசியமென்பது இனி இல்லை. இந்த உண்மையை இப்பொழுதாவது அமெரிக்கா உணர வேண்டும்."

வேறு வழியில்லை!

ஊரைச் சுற்றிச் சுற்றி அல்லல்பட்டு, ஆண்டிகடைசியில் மடத்துக்குவந்துசேர்ந்த கதையாகப் பாலஸ்தீன பிரச்னை விஷயமாய்,

பிரிட்டன் வீணான தொல்லைகளுக்குள்ளாகி முடிவில் பொறுப்பை ஐக்ய தேச சங்கத்தின் தலையில் கட்டிவிட்டது. வேறு வழியில்லை.

ஐரோப்பாவில் யுத்தம் முடிந்ததும் பாலஸ்தீனத்தில் யூதர்கள் பயங்கர ஒரு குட்டி யுத்தத்தைத் தொடங்கி விட்டனர். அந்தக் குட்டியுத்தம் பிரிட்டனுக்கு மட்டுமல்லாமல் வல்லரசுகளுக்கே பெருத்த சோதனையாகி விட்டது.

பிரிட்டன் தன்னால் ஆனமட்டும் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் சமரசம் உண்டு பண்ணப் பாடுபடுவதுபோல் பிரசார பிரயத்தனங்கள் செய்துபார்த்தது. லண்டனில் மகாநாடு ஒன்றைக் கூட்டுவித்தது. இரு சாரரும் அந்த முயற்சியை மதிக்கவில்லை. நிலைமை மோசமாகி விட்டது.

''எங்கள்நாடு எங்களுக்கே'' என்று இரு சாராரும் கோஷித்தனர். பணம், செல்வாக்கு, அன்னியர் உதவி இன்னும் எல்லாம் நிறைந்துள்ள யூதர்கள் ரகசியமாகவும், பலாத்காரமாகவும் குடியேறத் தொடங்கி விட்டனர், அதைத் தடை செய்ய ராணுவபலமும் போதவில்லை.

பாலஸ்தீன் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று பிரிட்டன் சும்மா இருந்து விடலாமல்லவா? அதுதான் இல்லை. கேந்திர ஸ்தாபனங்களைக் காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டுமென்பது பிரிட்டனின் தலைவிதி! போதக்குறைக்கு ருஷ்யா வேறு சமயம் பார்த்துப் பதுங்கி யிருக்கிறது அல்லவா? இப்படிப்பட்ட நெருக்கடி சமயத்தில் அராபிய நாடுகளைவேறு பகைத்துக் கொள்ளுதல் புத்திசாலித்தனமா? ஆகவே பிரிட்டன் அராபியக்கட்சியைச் சற்று ஆதரிப்பது போல் நடந்து கொண்டது.

ஆனால் ஆதிமுதல் யூதர்கள் குடியேறுவதிலும் பிரிட்டன் அக்கரை காட்டாமலில்லை. சிறுபான்மையோராக இருந்துவந்த யூதர்கள் மள மளவெனப் பெருகிவிட்டனர். எல்லாம்இந்தியாவில் நடிக்கப்படும் ஹிந்து-முஸ்லீம் பிரச்னை சம்பந்தப்பட்ட ராஜதந்திர நாடகம்தான்! பிரிட்டனின் ஆதரவினால் 1918-ஆம்வருஷத்தில் 85,000யூதர்கள் இருந்தவர்கள் 1939-ல் 5-லட்சத்துக்கு அதிகமாகி விட்டார்கள், சமய சந்தர்ப்பத்துக்கேற்றவாறு யூதர்களுக்கும் அராபியர்களுக்குமிடையே கலகம், கலக்கம், குழப்பம், ஒற்றுமை யின்மை எல்லாவற்றையும் பிரிட்டன் சிருஷ்டித்து நல்லவன்போல் நடித்து வந்தது.

பாகிஸ்தான் பிரச்னையை இந்தியாவில் கிளப்பி விட்டதுபோல் பாலஸ்தீனத்திலும் ஒரு பாகிஸ்தான் வெடி குண்டைப் பிரிட்டிஷ் சர்க்காரின் குடியேற்றநாட்டு இலாகா வீசிப்பார்த்தது. இருசாராரும் முடிவில் பிரிட்டனின் சுயநலச் சூழ்ச்சியைக் கண்டு கொண்டார்கள்.

உடும்பு வேண்டாம் கை வந்தால் போதும் என்ற கதையாகி விட்டது. ஆகவே சங்கடம் தீர, ஐக்ய தேச சங்கத்தின் பொறுப்பில் விட்டுவிடப் பிரிட்டன் துணிந்ததில் ஆச்சரியமில்லை. சங்கத்தில் பிரிட்டனுக்குச்செல்வாக்கு அதிகமானதால் கேந்திர ஸ்தானம் கைவிட்டுத் தொலையாது என்ற நம்பிக்கையும் பிரிட்டனுக்கு இருக்கலாம்.

இந்தியா விஷயத்திலும் பிரிட்டனுக்குத் தொல்லை வேண்டாம் என்று யோசனை கூறுகிறோம். தன் பொறுப்பை உதறித் தள்ளி விடலாம். ஐக்ய தேச சங்கத்தின் தீர்ப்புக்கே விட்டு விடலாம். ஆனால் பாலஸ்தீன் விஷயத்தில் சங்கம் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளுகிறதா என்பதை அறிந்தே இந்த யோசனையை வற்புறுத்த வேண்டும். ஒரு கூடை செங்கல்லும் பிடாரியாக இருந்தால்!

வீண் கலாட்டா!

துணி மில்தடை கொள்கையை ஆரம்பித்து அவமானத்துக்கும் மக்களது வெறுப்புக்கும் உள்ளாகிய பிரகாசம் சர்க்கார் இனி நெல் அறைக்கும் புதிய மில்களுக்கும் தடை விதித்துள்ளார்கள். எல்லோரும் கைக் குத்தல் அரிசி சாப்பிட வேண்டுமாம்.

கைக் குத்தல் அரிசியின் மேன்மையை விளக்க மாதம் ரூபாய் 1500 சம்பளம் வாங்கித் திரியும் மந்திரிமார்களின் ஆலோசனை தேவையில்லை. இன்றைய நிலைமையில் இது சாத்யமா என்பதை மந்திரிகள் கவனித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுதுள்ள மில்கள் எல்லா நெல்லையும் அறைக்கப் போதுமானதாக இல்லை என்று சொல்லி நெல்லாகவே பல இடங்களில் ரேஷன் படியளக்கப்பட்டது. மக்கள் திண்டாடினார்கள். நெருக்கடியும், ரேஷனும் மிகுதியாயுள்ள இந்தச்சமயத்தில் தானா இந்த விஷப் பரீட்சை வேண்டும்? நல்ல காலம் வரும்வரை இந்தப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டால் குடி முழுகி விடுமோ?

மஹாபலிபுரம்

கே. எஸ். நாகராஜன்

சரித்திர வரலாறு

பல்லவர்கள் காலத்து இவ்வூர் 'மாமல்லபுரம்' என வழங்கப்பட்டு வந்தது. இதற்குக் காரணம், அக்காலத்தில் இவ்வூர் முதலாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ வேந்தனால் பிரசித்தி யடைந்தமையும் அவ்வரசனுக்கு மாமல்லன் என்ற பட்டப் பெயர் இருந்தமையுமே யெனலாம். வைணவ ஆசாரியர்களுள் சிறந்த திருமங்கை யாழ்வார் இவ்வூரைத் தம் பாசுரங்களில் பெரிதும் போற்றியுள்ளார். ஆனால் அவர் 'கடல்மல்லை' எனும் பெயராலேயே இவ்வூரைக் குறித்துள்ளார் என்பது இங்கே கவனிக்கத் தகுந்தது. பின்வரும் பெரிய திருமொழிப் பாசுரம் மல்லையின் சிறப்பைக் கூறுமாற்றான் அமைந்துள்ளது.

சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
  சுவை ஊறு ஒலிநாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நான்முகன் நாரணனுக்கு இடந்தான்
  தடம்சூழ்ந்து அழகாயகச்சி
பல்லவன் வில்லவனென்று உலகில்
  பலராய்ப் பலவேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
  பரமேச்சுர விண்ணகரமதுவே.

மாமல்லன் என்பது முதலாம் நரசிம்மவர்மன் என்ற புகழ்வேந்தனது சிறப்புப் பெயர் என்பது ஆராய்ச்சியாளர்களால் ஐயத்திற்கிடமின்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் .கி பி. 691 லிருந்து கி. பி. 726 வரை அரசாண்ட மானவர்மன் என்பானுக்குதவ இரண்டு கடற்படைகளையனுப்பி அவனுக்குதவியவனும் இந்த மாமல்லனே என்பது தெளிவு.

பல்லவர்களுக்கு முக்கிய துறைமுகப் பட்டினம் எதுவாய் இருந்திருத்தல் வேண்டும்? நரசிம்மவர்மனுக்குத் தலைநகர் காஞ்சி. மாமல்லபுரத்திலுள்ள குகைக் கோவில்களிலும் ரதங்களிலும் நரசிம்மனது இயற்கைப் பெயரோ பட்டப்பெயரோ இன்றும் காணப்படுகிறது. 'மஹாபலிபுரம்' பல்லவர்களுக்கு முக்கிய துறைமுகப் பட்டினமாக விருந்தது என்பதும், குகைக் கோயில்களையும் கற்சித்திரங்களையும் அமைத்து அவ்வூரைப் பெருமைப் படுத்தியவன் மாமல்லன் ஆதலின், பிற்காலத்தே அது 'மாமல்லபுரம்' என வழங்கலாயிற்று என்பதும் இதனால் நாம் அறியக்கிடக்கும் செய்திகள். இதற்கேற்ப யுவான் சுவாங் என்ற சீனயாத்திரீகரும் 'காஞ்சிபுரம் தென் கடற்கரையிலிருந்த முக்கியமான ஒரு துறைமுகப் பட்டினமென்றும் அது சிம்மளத்திலிருந்து மூன்று நாள் பிரயாண தூரத்தில் இருக்கிறது' என்றும் கூறியுள்ளார். ஆகவே அவரால் குறிப்பிடப்பட்டுள்ள காஞ்சித் துறைமுகம் தற்காலத்து மாமல்லபுரம் அன்றி வேறல்ல என்பது துணிவு. வாட்டர் (Watter) என்னும் சரித்திரப் பேராராய்ச்சியாளர் எழுதியுள்ள 'யுவான்சுவாங்' என்ற புத்தகத்திலும் (Vol II, pp. 227) இதே போன்று, 'காஞ்சிபுரம் தென்னிந்தியாவிலிருந்து சிம்மளஞ் செல்வதற்கு வாயில் போன்றுள்ளதென் தென்றும் காஞ்சியிலிருந்து சிம்மளஞ் செல்ல மூன்று நாள் செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வூரிலேயே பிறந்து வளர்ந்த பூதத்தாழ்வாரும் தம் பாசுரங்களில் இதை மல்லையென்றே குறிப்பிட்டுள்ளார். மாமல்ல புரத்தின் பண்டைச் சிறப்பைத் தெரிவிக்கும் பின்வரும் பாசுரத்தோடு இப்பகுதியை முற்றுவிப்போம்.

புலன்கொள் நிதிக்குவையோடு
    புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும்
    சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும் மல்லைக்கடன்
    மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை
    வலங்கொள்ளென் மடநெஞ்சே

(திருமங்கை ஆழ்வார்)

ஊரும் கலைக்களஞ்சியமும்

செங்கற்பட்டிலிருந்து கிழக்கு நோக்கிய பாதையில் ஒன்பது மைல் தூரத்தில் உள்ளது 'திருக்கழுக்குன்றம்' என்ற க்ஷேத்திரம். இங்கே வேதகிரீசுவரர் கோயிலும் அக்கோயிலை யடுத்துள்ள பாறைமீது நாள் தவறாமல் நடுப்பகல் பன்னிரண்டு மணிக்கு வந்து நிவேதித்த உணவை அருந்திச் செல்லும் இரு பறவைகளும், மலை யடிவாரத்திலுள்ள மூவர் கோயிலும் இவ்வூருக்குத் தனிச்சிறப்பை யளிக்கின்றன. இவ்வூரிலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் கடற்கரை யோரத்தில் அமைந்திருக்கிறது மாமல்லபுரம் எனும் சிற்றூர். சென்னையிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாகப் படகுகளிலேறிச் செல்லுவதற்கும் வசதியுண்டு, அது முன் கூறப்பட்டவாறு

பல்லவர்கள் காலத்திலே சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியது. ஆரம்பத்தில், பல்லவ அரசர்களெல்லாம் ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். முதல் முதலாக ஜைன மதத்தை விட்டு இந்துமதத்தைப் பின்பற்றிய பல்லவன் மகேந்திரன் (600—625) என்பவன். அப்பர்சுவாமிகளின் போதனையால்தான் மகேந்திரன் இந்து மதத்தைத் தழுவலானான் என்பது காஞ்சிபுரத்திலும் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள (சிவகாமியின் சபதத்தில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்த) மண்டகப்பட்டு என்னும் கிராமத்திலும் காணப்படும் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. தென்னிந்தியாவில் முதன் முதலாகக் குகைக்கோயில்களைக் கட்ட ஆரம்பித்தது மகேந்திரன் காலத்தில் தான். அதற்குமுன், இங்ஙனம் குகைக் கோயில் அமைக்கும்முறை கோதாவரி, கிருஷ்ணா பள்ளத்தாக்குகளில் பழக்கத்திலிருந்ததென்றும், அங்கிருந்துதான் பல்லவர்கள் இக்கலையைக் அறிந்து வந்தார்களென்றும் கூறப்படுகிறது. மாமல்ல புரத்தில் கடற்கரை யோரத்தில் எண்ணிறந்த கற்பாறைகள் கிடக்கின்றன. அவற்றில் எங்குப் பார்த்தாலும் குகைக் கோயில்கள், ஒரே கல்லில் செதுக்கிய கோயில்கள், புடைப்புச் சித்திரங்கள். சிற்பங்கள் இங்கே காணப்படும் ரதங்கள் எண்ணில் ஐந்தேயாயினும் 'ஏழு பகோடாக்கள்' என்று அழைக்கப்படுகின்றன. பல்லவர்கள் காலத்து இங்கு ஏழு ரதங்கள் இருந்தனவென்றும், பிற்காலத்தே அவற்றில் இரண்டு கடலால் கொள்ளப்பட்டனவென்றும் கூறப்படுகிறது.

பஞ்சபாண்டவ ரதங்கள்

இங்கே நாம் காணக்கிடப்பன ஐந்து கற்கோயில்கள். இவற்றில் ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. இவை முறையே தருமன், பீமன், அருச்சுனன், சகாதேவன், திரௌபதி ஆகியோர் பெயரால் அழைக்கப்படுகின்றன. நகுலனும் சகாதேவனும் இரட்டைப்பிள்ளைகளாதலின் அவர்களிருவருக்கும் சேர்ந்து ஒரே கோயில் அமைத்தனர்போலும். இவற்றுள் 'திரௌபதி ரதம்' தனியழகுடன் விளங்குகிறது. அதன் மேற்பரப்பு மிகவும் சிறியது. கிராமங்களில் குடிசைகளின் மேல் ஓடுகளுக்குப் பதிலாக வைக்கோல் போட்டு மூடப்பட்டிருக்குமல்லவா! அதே போன்று அமைந்துள்ளது இந்த ரதத்தின் மேல்தளம். இந்த ரதத்தின் நாற்சதுர வடிவமான கீழ்ப்பரப்பும், கோயிலும், வளைந்த மேல்தளமும் சேர்ந்து காண்போரைப் பிரமிக்கச் செய்கின்றன. திரௌபதி ரதத்திற்கு அடுத்தாற்போல் தென் திசையில் அமைந்துள்ளது 'தருமன் ரதம்'. இதன் உச்சியில் அறுபக்க (hexagonal) வடிவமான மண்டபம் ஒன்று இருக்கிறது. இந்த ரதத்தில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இந்த ரதங்களுக்கான வேலை நரசிம்மவர்மன் காலத்துத் தொடங்கப் பட்டதென்பதும் அவனுக்குப் பின் வந்த முதலாம் பரமேசுவர வர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன், ராஜசிம்மன் ஆகியோர் காலத்து இவ்வேலை நடந்து வந்ததென்பதும் இவர்களுக்குப் பின் வந்த நந்திவர்மன் பல்லவ மல்லன் என்பான் காலத்தும் இவ்வேலை முடிவு பெறவில்லையென்பதும் இக் கல்வெட்டுக்களால் அறியவேண்டிய சில முக்கியமான செய்திகள். மேலே கூறிய அரசர்களில் நந்திவர்மன் ஒழிய மற்றெல்லாருடைய பெயர்களும் இந்த ரதத்தில் காணப்படுகின்றன. தருமர் ரதத்திற்கு அடுத்தாற்போல், தென் திசையிலுள்ளது 'பீமன் ரதம்' இதன்மேல் கோபுரம் வளைந்து நீண்ட உருளை வடிவிலிருக்கிறது. இதன் விமானத்தை உற்று நோக்குவார்க்கு, அது புத்தவிஹாரங்களின் விமானத்தையொத்திருப்பது தெரியும். பீமன் ரதத்திற்கு அடுத்தது 'அருச்சுனன் ரதம்.' இதன் கோபுரம் உச்சியொழிந்த கூருருளை (Cone) வடிவமானது. இந்த ரதம் பிற்காலத்துத் திராவிடக் கோயில்களைப் போன்று அமைந்துள்ளது. இத் தனிச்சிறப்பு மற்ற ரதங்களுக்கு உரியதன்று. இவ்வாறாக நான்கு ரதங்கள் வடக்கிலிருந்து தெற்காக ஒரே வரிசையில் அமைந்துள்ளன. இவற்றிற்கு மேற்கே தனியாக அமைந்துள்ளது 'சகாதேவன் ரதம்'. இதுவும் பீமன் ரதத்தைப் போன்று பழங்காலத்துப் புத்த விஹாரங்களைப் போல அமைந்துள்ளது. திரௌபதி ரதத்திற்கும் தருமன் ரதத்திற்குமிடையே சற்றுக் கிழக்கில் அமைந்துள்ளது ஒரு பெரிய சிங்கம். சகாதேவன் ரதத்திற்கும் தருமன் ரதத்திற்குமிடையே நிற்கிறது ஒரு பெரிய யானை. இதைப் போல, திரௌபதி ரதத்திற்குப் பின்னே ஒரு பெரிய நந்தி. இவ்வாறாக மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பங்களில் தனிச் சிறப்புடன் பொலியும் ஐந்து ரதங்கள் திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீசுவரர் கோயிலில் நிற்போருக்கே தெரியும்படி அமைந்துள்ளன.

[அருச்சுனன் தவம், குகைக் கோயில்கள், கடற்கரைக் கோயில் ஆகிய இவற்றைப் பற்றிய குறிப்புகள் பின்வரும் இதழ்களில் வெளிவரும்.]

தெய்வம் உண்டு

சுவை

தெருவில் ஏதோ சப்தம் கேட்டது. ஜன்னல் பக்கம் சென்று எட்டிப் பார்த்தேன். ஒரு பைத்தியம் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்தது. உடம்பெல்லாம் ஒரே அழுக்கு. தலையில் பழுப்பு நிறமடைந்த சடைகள். முகத்தில் விகாரமான தாடியும் மீசையும். இடுப்பிலோ ஒரு கோவணம் மட்டும். அதுகூடச் சரியாகக் கட்டப்பட வில்லை. இந்தப் பைத்தியத்தைச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு பல சிறுவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பைத்தியம், திடீரென்று 'தெய்வம் உண்டு, உண்டு. நீங்களும் சொல்லுங்கள்' என்று கத்திற்று. சிறுவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு,' இல்லை, இல்லவே இல்லை' என்று கூச்சலிட்டனர். பைத்தியம் ஆத்திரத்துடன் அவர்களை யடிக்க ஓடியது. சிறுவர்கள் எல்லாரும் சிட்டாகப் பறந்துவிட்டனர், சிரித்துக் கொண்டு.

இந்தப் பைத்தியத்திற்கு எங்களூரில் 'சாமிப் பைத்தியம்' என்று பெயர். சாமிப் பைத்தியம் என்றால் சகலருக்கும் தெரியும். 'நல்ல நிலைமையில் இருந்த மனுஷன் இப்படி நாய்போலத் தெருத் தெருவாக அலைய வேண்டும் என்று எழுதி இருக்கிறதே. எல்லாம் விதி' என்று பைத்தியத்தைப் பார்த்துப் பரிதாபப் படாதவர்களே கிடையாது. நல்ல நிலைமையில் இருந்த மனுஷன் இப்படிப் பைத்தியமாகி விட்டகதையைக் கேட்க இன்னும் பரிதாபமாயிருக்கும்.

* * *

நல்ல சித்திரை மாதத்து வெய்யில். தெருவில் ஜன நடமாட்டமே இல்லை. தெரு நாய்கள்கூட வெய்யிலுக்குப் பயந்து கொண்டு, ஓட்டு நிழலில் ஒண்டிப் படுத்துறங்கின. ஒரு வீட்டுத் திண்ணையிலிருந்து தெருவை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வயதான கிழவி, 'தெருக்கோடியிலே தர்மாநல்லூர் அவதூத சுவாமிகள் வராப்போலே யிருக்கு. எனக்குக் கண் கூசறது. நீ கொஞ்சம் பார்த்துச் சொல்லு, சரிதானுன்னு,' என்று தன் பிள்ளையிடம் சொன்னாள். 'நிஜமாவா' என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே எழுந்து தெருவிற்கு வந்து விசிறியை முகத்திற்கு மேலாகப் பிடித்து நன்றாகப் பார்த்து விட்டு, 'அம்மா, அவரேதான். தர்மாநல்லூர் சாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளே தான்' என்று கூறினான் பிள்ளையாண்டான்.

இதற்குள்ளாக எதிர்வீட்டுத் திண்ணையிலிருந்து, 'என்ன பாட்டி, பார்க்கிறேள், அப்பவே பிடிச்சு,' என்று கேட்டது ஒரு குரல். 'அதோ தர்மாநல்லூர் அவதூத சுவாமிகள் தெருக்கோடியிலே வரார். அவரைத்தான் இத்தனை நாழியாகப் பார்க்கிறோம்,' என்றாள் பாட்டி. குரல் கொடுத்த ஆசாமி பரபரப்புடன் வாசலில் வந்து பார்த்தார், உடனே அவர் உள்ளே ஓடினார், இந்தச் செய்தியை வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரிவிக்க. சற்று நேரத்திற்கெல்லாம் தெரு கலகலப்புடன் காணப்பட்டது. அவதூத சுவாமிகளைக் கண்டு குரைத்த நாய்கள் கல்லடி வாங்கிக்கொண்டு ஓடிவிட்டன. உண்ட களைப்புத் தீரப் புரண்டு புரண்டு தூங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்பி, இச் சமாசாரத்தைச் சொல்லச் சிறுவரும் சிறுமியரும் தெருவில் குறுக்கும் நெடுக்குமாக வீட்டிற்கு ஓடினர்.

ஆண்கள் எல்லோரும் இடுப்பில் மேல் துண்டை எடுத்துக் கட்டிக்கொண்டு சுவாமிகளுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். பெண்களும் அடக்க ஒடுக்கமாகச் சுவாமிகளுக்கு நமஸ்காரம் செய்தனர். சுவாமிகள் இதையெல்லாம் ஊனக்கண்ணால் மட்டும் பார்த்துக்கொண்டு போய்க் கொண்டே யிருந்தார்.

தர்மாநல்லூர் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் என்றால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை யாவரும் மதிப்பார்கள். அவரைக் கண்ட மாத்திரத்திலேயே கைகூப்பித் தொழுவார்கள். சுவாமிகளுக்கு அத்தனை செல்வாக்கு. சுவாமிகள் ஒரு வரப்பிரஸாதி. நினைத்த காரியம் உடனே நடைபெறும். 'சம்போசிவம்' என்று கூறி வெறுங்கையை ஒருமுறை மூடித்திறந்தாரானால், கைநிரம்ப மணங்கமழும் விபூதி இருக்கும். அந்த விபூதிக்கு அபாரசக்தி உண்டு. அதை அனுபவபூர்வமாக அநேகர் கண்டிருக்கின்றனர். அவ்விபூதியை வாயில் போட்டுக்கொண்டவுடன் பிறவி ஊமை ஸ்பஷ்டமாகப் பேசத் தொடங்கியிருக்கி

ருன். விபூதியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு தீராத கர்ம வியாதிகளைப் பலர் சொஸ்தப்படுத்திக் கொண்டிருக்கின்றனர், மலடிகளுக்கு மக்கட்பேறு கிடைத்திருக்கிறது, அவ்விபூதியினால். இன்னும்விபூதியின் விளையாடல்கள் காரணமாக விளைந்த நன்மைகள் பல. சுவாமிகள் 'சம்போசிவம்' என்று சொல்லும் நேரத்தைத் தவிர மற்ற நேரமெல்லாம் மௌனம்தான். எக்காரணங்கொண்டும் யாருடனும் பேசவே மாட்டார்.

தெருவழியே போய்க் கொண்டிருந்த சுவாமிகள் சட்டென்று ஒரு வீட்டுவாசலில் நின்றுவிட்டார். உடனே அவரைச் சுற்றி, கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் சேர ஆரம்பித்தது, அடிக்கும் அந்தக் கடுமையான வெய்யிலைக்கூடப் பொருட்படுத்தாமல், வீட்டினுள்ளேயிருந்து ஒரு அம்மாள் கொஞ்சம் சாதத்தை ஒரு கிண்ணத்தில் பிசைந்து கொண்டுவந்து, கையைப்பிடியுங்கோ என்று பணிவாகக் கூறினாள். சுவாமிகளும் இருகைகளை ஏந்தி, கைகொள்ளும்வரையில் மட்டும் சாதத்தை ஏற்றுக்கொண்டு, அப்படியே அதைச் சாப்பிடத் தொடங்கினார். கூட்டம் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதற்குள்ளாக அந்த அம்மாள் உள்ளே சென்று குடிப்பதற்கு ஜலம் வெள்ளிச் செம்பிலும், கை கழுவுவதற்கு ஜலம் ஒரு பித்தளைச் செம்பிலுமாகக் கொண்டு வந்து தயாராக இருந்தாள்.

தெருவின் மற்றொரு கோடியில் ஆஜானுபாகுவான ஒரு ஆசாமி சைக்கிளில் அதிவேகமாக வந்து கொண்டிருந்தார். அவர் வேறுயாருமில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாமிநாத சர்மா. அவர் வீட்டுவாசலில்தான் சுவாமிகள் பிக்ஷை, கூட்டம் எல்லாம். தம் வீட்டுவாசலில் ஏதோ கூட்டம் நிற்பதைக்கண்டுதான் அவர் அவ்வளவு வேகமாக வந்தார், சைக்கிளில்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குப் பெயர் என்னவோ சாமிநாதசர்மாதான். ஆனால் அவர் கடைப்பிடிப்பது எல்லாம் அப்பட்டமான நாஸ்திகக்கொள்கைதான். தெய்வம் இல்லையென்று கூசாமல்கூறுவார். தம் பெயரில் தெய்வ சம்பந்தம் இருப்பதைக் கூட விரும்பாமல், பெயரைச் சுருக்கி என். எஸ். சர்மா என்று வைத்துக் கொண்டவர். கோவில்களையெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டு, அவ்விடங்களிலெல்லாம் நல்ல நவநாகரிக 'கிளப்புகள்' கட்ட வேண்டுமென்ற விருப்பமுடையவர். தமக்கு மாத்திரம் 'மதபரிபாலனமந்திரி' பதவி கிட்டிவிட்டால் மறுநாளே தம்மிஷ்டம் போலக் காரியங்களைச்செய்து விடுவதாகச் சில சமயங்களில் மார்தட்டுவார்.

இப்படிப்பட்ட ஒருவரின் வீட்டுவாசலில் நிர்வாணமாக ஒரு பைத்தியம் (அவர் கருத்துப்படி) நின்று அருவருக்கத் தக்க முறையில் உணவு அருந்திக்கொண்டு நிற்பது, அதைப்பார்க்க ஐம்பது பைத்தியங்கள், நிர்வாணப் பைத்தியத்திற்கு அவர் மனைவியே கொஞ்சம்கூட வெட்கம் இல்லாமல் சிசுருஷைகளுக்காகத் தயாராய்க் காத்துக்கொண்டு நிற்பது, இதையெல்லாம் பார்க்கச் சர்மா சஹிப்பாரா? பார்த்த மாத்திரத்தில் சம்ஹார மூர்த்தி அவதாரம் எடுத்து விடமாட்டாரா?

வீட்டுவாசலில் நடப்பதைக் கொஞ்ச தூரத்திற்கு முன்னாலிருந்தே சைக்கிளிலிருந்தவண்ணமே சர்மா பார்த்துக் கொண்டுவந்தார். அவர் முகம் கோபத்தினால் சிவந்து விட்டது. வீட்டுவாசலையடைந்ததும் சைக்கிளைவிட்டு இறங்கி, அதைத் திண்ணைக் கம்பத்தின் மீது சார்த்தி வைத்தார். சர்மாவின் வருகையை அறிந்த கூட்டம் அவருக்கு வழிவிட்டுநின்றது. சாதம் போட்ட அம்மாள் மாத்திரம் சர்மாவைப் பார்த்தவுடன், திண்ணையிலிருந்த சர்மாவின் தாயாரிடம் 'நீங்கபார்த்துக் கோங்கோ, நான் உள்ளே போறேன், என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

அங்கிருந்தவர்களில் பலர் சர்மா அப்படியே போலீஸ் யூனிபார்முடன் அவதூத சுவாமிகளுக்கு ஒரு சாஷ்டாங்கம் நமஸ்காரம் செய்வார் என்று எதிர் பார்த்தனர். சர்மாவைப்பற்றி அறிந்தசிலர், இந்தநாஸ்திகன் இவரை லட்சியம் பண்ணாமல் போய் விடுவான் என்று நினைத்தார்கள். சிலர் நினைத்தபடி சர்மா செய்திருந்தாரானால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்.

ஆனால்.........சர்மா செய்தது எல்லாரையும் திகைப்பிலும், துக்கத்திலும் ஆழ்த்தியது. மிடுக்கான நடையுடன் அவதூத சுவாமிகளை நெருங்கி, கைத்தடியால் பளிச்சென்று முதுகில் ஒருஅடி பலமாகப் போட்டார். அபசாரம், அபசாரம் என்றகுரல்கள் அடித்தொண்டையிலிருந்து வெளிவந்தன. 'கொலைகாரப் பாவி, குடியைக் கெடுத்துட்டயேடா, மகா பாவி, இது அடுக்காதுடா உனக்கு,' என்று சர்மாவின் தாயார் ஓடிவந்து சர்மாவைத் தடுத்தாள், மேலும் அவர் சுவாமிகளை அடிக்காமலிருக்க வேண்டுமே என்று. தடுத்ததின் பலன் தடியால் அவளுக்கு இரண்டடி கிடைத்தது.

வலி பொறுக்கமாட்டாமல் குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டு சுவாமிகளின் காலில் விழுந்து அவள், 'பொறுத்துக்கோங்கோ, ஏதோ தெரியாமல் நடந்துவிட்டது' என்று கெஞ்சினுள்.

எல்லாம் கணநேரத்தில்தான் நடந்தது. சுவாமிகளின் முகத்தில் திரிபுரமெரிவதற்குக் காரணமாயிருந்த சிவானந்தப் புன்முறுவலின் சாயல் தென்பட்டது. சர்மாவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். விடுவிடென்று அப்பால் நடந்து சென்றுவிட்டார்.

சர்மாவின் தாயாரோ, 'குடி கெட்டுதே. விநாசகாலே விபரீத புத்தீன்னு பெரியவா சொன்னது சரியாப்போச்சே, நான் என்ன பண்ணுவேன்' என்று தவியாய்த்தவித்தாள். 'கொலைகாரப்பாவி, உண்டவாய்க்குத் தண்ணீர்கூட அவருக்குக் கிடைக்காமல் அடித்துவிட்டானே. அத்தோடே ஒரு அடி. அந்த மகான் எப்படித் தவிக்கிருரோ அதைவிடப் பத்து பங்கு இவன் குடும்பம் தவித்துப் போகும்' என்று யாரோ ஒருவர் கூறிக்கொண்டு சென்ருர்.

இதையெல்லாம் பொருட்படுத்தாமல் சர்மா வீட்டினுள் சென்ருர். சற்று நேரத்திற்கெல்லாம், 'ஐயோ, நான் செத்தேன்' என்ற ஒரு பெண்குரல் ஓலமிட்டது. பலரும் ஓடி வீட்டினுள் சென்றுபார்த்தனர். சர்மாவின் மனைவி பொட்டில் இரத்தம் வழியக் குற்றுயிராகக் கீழே கிடந்தாள். சர்மா கழற்றிய பெல்ட்டைக்கையில்பிடித்த வண்ணம் யமகிங்கரனைப் போலக் காட்சியளித்தார். கிழவியோ மயக்கம்போட்டுக் கீழே விழுந்தவள், இந்தக் காட்சியைக் காணச் சகியாமல் அப்புறம் எழுந்திருக்கவே இல்லை. சர்மாவின் மனைவியும் கிழவியைப் பின்பற்றிவிட்டாள், சற்று நேரத்திற்கெல்லாம்.

'ஒரே சமயத்தில் இரட்டைச் சாவு. இனிமேல் இவன் குடும்பம் உருப்பட்டாப் போலத்தான்' என்றனர் சிலர். 'போருத காலத்தினுல்தான் புத்தி அவனுக்கு அப்படி போச்சு. கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்பது சரியாப்போச்சு. சொன்னவன் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும்,' என்றிப்படிப் பலர் பலவாருகப் பேசிக்கொண்டனர்.

அப்புறம் மேலே நடக்கவேண்டிய காரியங்கள் எப்படியோ நடந்தேறின. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சர்மாவின்மீது மனைவியைக் கொன்றதாகக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விசாரணையின் போது சர்மா முன்னுக்குப்பின் முரணுக உளறியது மன்றி, அடிக்கடி தெய்வம் உண்டு, உண்டு, என்று கோர்ட்டில் உரக்கக் கத்த ஆரம்பித்தார். கோர்ட்டார் சர்மாவிற்குச் சித்த ஸ்வாதீனம் இல்லை என்று தீர்மானித்து, அவரை விடுதலை செய்துவிட்டனர்.

சர்மா பைத்தியமாகி விட்டார். சர்மா தான் முன் சொன்ன சாமிப்பைத்தியம்.

* * *

சர்மாவின் வீட்டை விட்டு அப்பால் சென்ற அவதூத சுவாமிகள் ஒரு கிணற்றண்டை சென்று, வைக்கோல் துரும்பைக் கிள்ளி அக்கிணற்றினுள் போட்டதைப் பார்த்ததாகச் சிலர் சொல்லுகின்றனர். 'கிணற்றினுள் போட்டவைக்கோல் துரும்பு நசித்துப் போவது போல் சர்மாவின் குடும்பமும் நசித்துப்போய் விட வேண்டும் என்பதே அவதூத சுவாமிகளின் எண்ணமாகும். அதனுல் தான் அவர் அப்படிச் செய்தார். அவர் எண்ணிச் செய்தது நடந்து விட்டது' என்று ஊர் ஜனங்கள் அபிப்ராயப் படுகின்றனர்.

எல்லையில்லாத நாஸ்திகம் தோன்றிவிட்ட இந்தக் காலத்திலும்கூட நம் கண்முன் நடக்கும் அநேக அதிசய சம்பவங்களை நாம் பார்த்தும் தெய்வம் உண்டு என்று நம்புவதில்லை. வேண்டாத காரணங்களைக் கற்பித்து, வீண் வாதம் செய்கிறோம். எல்லாம் அறியாமையினுல் தான். அறியாமையிலும் அடக்கமாக இருக்கலாம். அதனுல் நன்மையுண்டு. இல்லையேல் அனர்த்தம்தான்.

ராஷ்டிரபதியின் மனைவி சுஜ்தா கிருபளானி
(இவரைப் பற்றிய கட்டுரையை மறுபக்கத்தில் காண்க)



இந்தியாவின் முதல் ராஜதந்திர தூதராக அமெரிக்காவுக்குச் செல்கிறார் அஸப்ஆலி. விமான நிலயத்தில் நேரு, அருணா அஸபாலி, ஸர்தார் டல்தேவ்ஸிங், ஆகியோர் இவரை வழியனுப்புகின்றனர்.

சுசேதா கிருபளானி

யோகி சுத்தானந்த பாரதியார்

"அரசனைவிட ராஷ்ட்ரபதி மேல்" அரசன் மகன் அரசனாய்விடலாம்; உரிமையுண்டு; ஆனால் ராஷ்ட்ரபதி ஜனநாயகன்; அவன் அரியணை பொதுஜன உள்ளம்; செங்கோல் அன்பு; மகுடம் தியாகம். தியாக மகுடம் பொன் முடியன்று, முள் முடி; தியாகியின் பாதை பூமெத்தையன்று, வாட்புதர்; உலக சரித்திரத்தில் பரிபூரணமான தியாகதீரர் ஒருவரைச் சொல்லவேண்டுமானால் மஹாத்மா காந்தியைத்தான் குறிப்பிடலாம்.

மஹாத்மாவுடன் கரடுமுரடான கொடிய தியாகப் பாதையில் நடந்த தீரருள் படேல், நேரு, ராஜன்பாபு, ராஜாஜி, அஜாத், சுபாஷ், கிருபளானி ஆகிய எழுவரும் முதன்மையானவர்கள். இவர்களை மஹாத்மாஜியின் "ஸப்தப் யாராக்கள்" (ஏழு அன்பர்) என்னலாம்.

இவருள் ஆசாரியா கிருபளானி மஹாத்மாவின் உள்ளமே உருவான கர்மவீரர்; மெல்லிய உடல், வல்லிய உள்ளம், சிறியகண், பெரிய நோக்கம், எளிய வாழ்க்கை, உயர்ந்த எண்ணம், சாதாரண தோற்றம், அசாதாரண உழைப்பு, சாந்தமான நடை, சலியாத சுறுசுறுப்புக்கொண்ட தீரர் கிருபளானி. தற்பெருமை என்பதே இல்லாத ஒரு பொதுநலத் தொண்டரைக் குறிக்க வேண்டுமானால் ஆசாரிய கிருபளானியைத்தான் குறிக்கவேண்டும். பெயர் புகழ் வேட்டையில் அவருக்குச் சிறிதும் விருப்பமில்லை. அவர் எங்கிருந்தாலும் எங்கே சென்றாலும் மேடை மாலைக்கு ஆசைப்பட்டோ ஜே கோஷங்களை விரும்பியோ செல்வதில்லை. மேடைமேல் ஜோராக நின்று சொல்மாரி பொழிந்து கரகோஷம் வாங்குவதுடன் தேசத் தொண்டு செய்துவிட்டதாக மார்தட்டும் பேர்வழியல்ல கிருபளானி. அவரை ஒரு தரம் காசி மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க அழைத்தனர். தலைவருக்காகப் பெரிய பெரிய மாலைகளும், வரவேற்புகளும் வழங்க, ஊர்ப்பிரமுகர்கள் அணிவகுத்து நின்றார்கள். கிருபளானி புகைவண்டியை விட்டு இறங்கியதும் மாலைக்குக் கழுத்தை நீட்டவில்லை. ஒரு பெரிய கதர் மூட்டையைத் தோளில் சுமந்துகொண்டு, "மஹாத்மாகாந்திக்கு ஜே—வாங்குங்கள் கதர்—" என்று கதர் விற்றுக்கொண்டே தம் ஜாகைக்குச் சென்றார். செல்லும் வழியிலேயே கதர் மூட்டை விற்பனையாய்விட்டது—சரி—இதைத்தான் நான் உங்களுக்குப் பேச லாயக்கு என்றார். கிருபளானிக்குச் செயலே இன்பம். அதிலும் கடினமான செயலையே அவர் விரும்புவார், மெலுக்கான நாகரிக வாழ்வை வெறுப்பார். அவர் அற்பாகாரமே செய்வார்; உணவும் மிகவும் எளியது. இரண்டு சப்பாத்தியும் தர்காரியும் ஒரு கோப்பை தேயிலையும் அவருக்குப் போதும். உண்ணும்போதுகூடத் தேச நன்மையையே அவர் நினைப்பார்.

கிருபளானி சரித்திர, பொருளாதார நிபுணர்; ஆங்கிலப் புலவர்; கிராம்ய இந்திதான் பேசுவார். அவர் ஆங்கிலம் சாணைபிடித்த மணிக்கோவை போன்று அழகாகவும் நெருப்புப் பிடித்த தணல் போல் பிரகாசமானதாகவும் இருக்கும். அவரிடம் வழவழாப்பேச்சே கிடையாது; வெட்டொன்று துண்டு இரண்டாகவே பேசுவார். அவர்பேச்சு ஜனங்களின் உள்ளத்தில் மின்சாரம் போலப் பாய்ந்து செயலெழுச்சி தரும். ஜவஹர்லாலுக்குப் பிறகு சிறிய கூரிய வீறுமிக்க சொல்லுடையவர் கிருபளானியே.

கிருபளானி சிந்து மாகாணத்திற் பிறந்தவர். அவருடன் பிறந்தவர் எழுவர். இருவர் இஸ்லாமியரானார். இது கிருபளானியின் உள்ளத்தில் பகீரெனப் பற்றியது. அவர் தீவிரமான ஹிந்து தர்மத்தையே அனுஷ்டித்தார். நமது தேசியக்கல்வி, கலை, நாகரிகங்களில் அவருக்குப் பெரும் பற்று

தலுண்டு. ஆசாரிய கிருபளானி நிரம்பப் படித்த புலவர்; அவர் மாணவரின்தோழர். அவர் நல்ல சம்பளத்தில் சரித்திர ஆசிரியராக வேலைபார்த்தார். பீஹார் மாணவர் அவரை உயிர் போல நேசித்தனர். அக்காலம் அவர் புரட்சி இயக்கத்தில் சேர்ந்திருந்தார்; கனல் பறக்கத் துப்பாக்கிப் பேச்சுப் பேசினார்.

ஆனால் மஹாத்மா காந்தியைக் கண்டதும் அவர் உள்ளம் மாறியது. சம்பாரானில் மஹாத்மா ஏழைக் குடியானவர்களுக்குத் தொண்டு செய்ததை நேரே கண்ட கிருபளானி, புதிய உணர்ச்சி பெற்றார். தம் இருப்பிடம் கல்லூரி நாற்காலி யன்று, தேசத்தின் பலிபீடமே தம் இருக்கை என்றறிந்தார். வேலையை உதறித் தள்ளினார்; மஹாத்மாவின் அன்புக்குப் பாத்திரமானார்; மஹாத்மாவினால் ஆவேசம் பெற்ற கர்மவீரர் அணியில் நின்று தேசசேவையே வாழ்வானார். காங்கிரஸுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு அதே நினைவானார்.

அலாஹபாது சுராஜ்ய பவனம் என்றால் கிருபளானிதான். அவர் அங்கே தாமே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு பிர்ம்மசாரியாகவே 1936-ஆம் ஆண்டுமட்டும் ஏகாங்கியாயிருந்தார். அவருக்குக் கலியாண நினைப்புக்கூட இல்லை.

கண்டதும் காதல்

ஒரு சமயம் அவர் காசிக்குச் சென்றார்; கதர் விற்றார்; காங்கிரஸ் தொண்டு செய்தார்; பொதுக் கூட்டத்தில் பேசினார். அவரது தீவிரமான பேச்சும் சொல்லும், தியாகவாழ்வும் ஒரு பெண்ணுள்ளத்தைக் கவர்ந்தன. காசி சர்வகலாசாலைக்குக் கிருபளானி செல்ல நேர்ந்தது. அங்கே ஆசிரியருடனும் மாணவ மாணவிகளுடனும் அளவளாவும் போது ஒரு புன்னகை முகம் அவரை வசீகரித்தது. களங்கமற்ற உள்ளம், நகைபூத்த உதடுகள், சரளமான பேச்சு, கவலையற்ற நெஞ்சம், தேசபக்தியும், தியாகக்கனலும் வீறிட்டெரியும் மனம், சிறந்த கல்வியறிவு, அன்புமயமான பெண்சக்தி—அவளே சுசேதா கிருபளானி.

இருவரும் கண்டதும் காதல் கொண்டனர். அந்தக் காதல் ஆத்மாவில் ஊறிப் பொங்கும் தெய்வீகக் காதல்! கிருபளானி ஏழை, தியாகி, தேசசேவை செய்யும் இன்பமே அவர் பொருள். வேறெதையும் அவர் தேடவில்லை.

சுசேதா? வங்காளத்தில் நாதியாவில் புகழ்பெற்ற பிரம்ம சமாஜக் குடும்பத்திற் பிறந்த செல்வி. அவள் பாட்டனார் பிரம்மானந்த கேசவசந்திரசேனரின் அரிய நண்பரும், சீடரும், பிரம்ம சமாஜ உபதேசகருமான ஸ்ரீ தீனநாதமுஜூம்தார். அவர் நிரம்பக் கல்வி கற்றவர்; தெய்வ பக்தர், தியாகி, உலகப்பிரசித்தி பெற்ற பிரம்மப் பிரசாரகர். சுசேதாவின் தந்தை டாக்டர் சுரேந்தர நாதமுஜூம்தார் பஞ்சாபில் சர்க்கார் வைத்தியராக வேலைபார்த்து, ஸிவில் சர்ஜனாகப் புகழ் பெற்றார். அவர் ஏழைகளுக்குக் கருணையுடன் சிகிச்சை செய்து தமது செலவிலேயே பாதுகாப்பும் அளித்தார்.

அவர் சுயநலமற்ற தீன சேவகர். தாயார் மகாஉத்தமி, தெய்வபக்தை, சுசீலை. சுசேதா பாட்டனாரின் அறிவும் கடவுளன்பும், தாயாரின் கற்பும், தந்தையின் பரோபகாரமும் ஒருங்கே சேர்ந்த வீர லக்ஷ்மியாக விளங்கினாள். தகப்பனார் அவளை நன்றாகப் படிக்கவைத்து டில்லி சர்வகலாசாலையில் சேர்த்தார். சுசேதா சரித்திர, பொருளாதார M. A. யானாள். இலக்கியம், சரித்திரம், பொருளாதாரம் இம்மூன்றிலும் அவளுக்கு நிகரற்ற புலமை யுண்டு. அவளுடன் பேசுவதே பல விஷயங்களை அறிவதாகும். பட்டம் பெற்றதுமே அவளுக்குக் காசி சர்வகலாசாலைப் பெண்கள் பகுதியில் சரித்திர-பொருளாதாரப்புலவர் வேலை கிடைத்தது. சுசேதா மாணவிகளுக்கு ஆசிரியை மட்டுமன்று; சகோதரி போலும் தாய்போலும் உதவினாள். ஏழை மாணவிகளுக்குப் பணவுதவி செய்தாள்; சுசேதா நகை நட்டுகள் போடுவதில்லை. தூய கதராடையே அணிவாள். பக்தி பரவசமுடன் பாடுவாள்; தெய்வ நம்பிக்கை அதிகம். சமையலில் கெட்டிக்காரி. எளியவாழ்வும் இந்தியச் சிந்தனையும் கொண்ட இச்செல்வி தனக்கேற்ற நாயகனுக்காகவே காத்திருந்தாள். உறவினர் பெரிய செல்வக் குடும்பங்களில் மாப்பிள்ளை தீர்மானித்தனர். சுசேதாவை

மணந்து கொள்ள ஐ. ஸி. எஸ். களும் பாரிஸ்டர்களும், ஆவலாக முன் வந்தனர். அவள் ஒரு ஐ ஸி. எஸ். மனைவியாகி, செல்வச் சீமாட்டியாக மூன்றும்—மாடியில் தோகைமயில் போல் உலாவலாம். ஆனால் செல்வவாழ்வை அவள் தூசிபோல் உதறித் தள்ளித் தியாகவாழ்வையே அணிந்தாள். கிருபளானி, சிந்தியர், அன்னியர், ஏழை, அவரை மணந்தால் காலட்சேபத்திற்கே கஷ்டப்பட நேரிடும் என்று உறவினர் தடுத்தனர்.

"இந்த ஏழையே என் செல்வன்; அவர் தியாகமே என் போகம்" என்று, சுசேதா கிருபளானிக்குத் தன் அல்லிக் கரத்தை அளித்தாள். இருவரும் மஹாத்மாவின் ஆசியைப் பெற்றனர்! பிறகு என்ன வேண்டும். 21—4—1936-ல் அல்லாஹபாது சுராஜ்ய பவனத்தில் இருவருக்கும் திருமணம் நடந்தது. அன்று முதல் இருவரும் தேசசேவைக்கே வாழ்கிறார்கள்.

வள்ளுவருக்கு வாசுகி போல், கிருபளானிக்குச் சுசேதா வாய்த்தாள். சுராஜ்ய பவனத்தை அவளே சுத்தமாகக் கூட்டி மெழுகி அணி செய்து வைத்துக் கொண்டாள். கணவன் ஆடைகளையும் அவளே வெளுப்பது. சுசிருசியாகச் சமையல் செய்து கணவனுக்கு அவள் ஊட்டினாள். கட்டிக்காத்து அவன் பணிசெய்வதே தன் தவமெனக் கருதினாள். கணவன் உடம்பைத் தினம் பரிசோதித்து நோய் தீர்த்துத் தாய் போலும், வைத்தியன்போலும் உதவினாள். கணவன் கடுமையான தேசசேவை செய்து வந்ததும், அவள் புன்னகையுடன் வரவேற்று உபசரித்துத் தமாஷாகப்பேசி அவனைச் சிரிக்கவைத்து உற்சாகப்படுத்துவாள். கிருபளானி—படேல் இருவரும் நகை ததும்பப் பேசுவதில் சமர்த்தர். கிருபளானி—சுசேதா பேசுவதே தனி ரகம். நகைச்சுவையுடன் இலக்கியம், சரித்திரம், பொருளாதாரம், தேசஉணர்ச்சி எல்லாம்அவர்கள் பேச்சில் கலந்துவரும்.

சுசேதா அலகபாதில் பெண்கள் பள்ளிக்கூடம் நடத்தினாள். மஹாத்மாஜி, கஸ்தூரிபாய் பேரால் நடக்கும் சேவைகளில் அவளுக்கு முக்கியமான பங்கு தந்திருக்கிறார். கணவன் எந்தத் தேசசேவையை மேற்கொண்டாலும், சுசேதா முன் சென்று அவரை உற்சாகப் படுத்தி உடனிருந்து தொண்டு செய்வாள்.

அபுல்கலாம் அஜாது ராஷ்ட்ரபதி பதவியை நீத்ததுமே அடுத்த ராஷ்ட்ரபதி கிருபளானிதான் என்று எல்லோருக்கும் தெரியும். பத்திரிகையிலும் பெயர் வந்துவிட்டது. மகோன்னதமான பதவி பெற்ற கணவனைச் சுசேதா வாரும் வங்காளத்திற்கு என்று அழைத்தாள். கிழக்கு வங்காளத்தில் நவகாளி திப்பரா ஜில்லாக்களில் நடந்த அட்டூழியங்களுக்குப் பரிகாரம் தேட இருவரும் சென்றனர். கணவன் அங்கே நடந்த பயங்கரக்கொலை களவுகளைக் கணக்கெடுக்கும் போது சுசேதா கற்பழிக்கப்பட்ட பெண்களுக்கு ஆறுதல் கூறிப் பலருக்குச் சங்குவளையும் குங்குமமும் துளசியும் அளித்து, ஹிந்து தர்மத்திற்குத் திருப்பும் வேலையில் ஈடுபட்டாள்.

அங்கே படுபாவிகள் செய்த கொடுமைகளை இருவரும் உலகிற்கு நன்கு வெளிப்படையாக விளக்கினர், ஒருதரம் அவளையும் அவள் தொண்டரையும் தூக்கிச் செல்லவும் முரடர் முயன்றனர். சுசேதா தைரியமாக நின்று அந்தப் படுபாவ நரகத்தில் பத்தினிக் கனலுடன், சிறந்த சேவை செய்தாள். தாம் ராஷ்ட்ரபதி என்றசெருக்கே கணவனிடம் இல்லை. தம் வேலை காங்கிரஸ் அரியணைமேல் அமர்வதன்று, பொது ஜனங்களுக்குத் தொண்டு செய்து மூவர்ணக் கொடியைப் பிடித்து, ராட்டைச் சுதந்திரத்திற்கு அழைத்துச் செல்லுவதே என்று ஆசார்யாவும் உணர்ந்தார். அவர் தர்மபத்தினியும் அதே உணர்ச்சியுடன் தேசக் கொடி பிடித்துச் சேவை செய்கிறாள். இவ்வளவு கடுமையான சேவையூடும் சுசேதாவின் முகம் மங்களப் புன்னகை குலுங்கும். இருவரும் நகை ததும்பப் பேசுவார்கள்; அந்தக் கல கலச் சிரிப்பில் வாழ்வின்பம் சல சலத்தோடும். கிருபளானி சென்னைக்கு வரப் போகிறார், சுசேதாவும் வருவாள். பாருங்கள் இந்தத் தியாக தம்பதிகளை. தமிழ்நாட்டுச் சதிபதிகள் அவர்களைப் போல வாழப் பழகுங்கள்.

வாழ்க்கைத் துணையும் வகையும் விரிநலனும்
ஆக்கமும் பெண்சக்தி யாம்.

குமுதம்

முதலிய கதைகள்

★

வை. சுப்ரமண்யன்
நா. ராமச்சந்திரன்
சாமி

எழுதியது

விலை ரூ. 1/-

★

க. நா. சுப்ரமண்யம் இப் புத்தகத்தின் முகவுரையில் எழுதுகிறார்: "தமிழில் ஒரு தலைமுறையாகவே ஏராளமான படிக்கக்கூடிய கதைகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதற்குப் புதியதோர் சாக்ஷியாக இந்தக் 'குமுதம்' மலருகிறது.........ஒன்பது கதைகளிலும் நவரஸங்களும் இருக்கின்றன—அதற்கு மேற்பட்ட இந்தக் காலத்துக்கே உரித்தான பல ரஸங்களும் இருக்கின்றன........"

ஒரு ரூபாய் மணியார்டர் அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி ஒரு பிரதி அனுப்பப்படும். ஏஜண்டுகளுக்கு — வி. பி. பி. மூலம் அனுப்பப்படும். —

சந்திரிகா பதிப்பகம்

31, A, குப்பைய செட்டித்தெரு

பழைய மாம்பலம் — சென்னை 17.

சாயம்

ஆர். கே. விசுவநாதன்

நெசவுத் தொழிலைப்போலச் சாயம் போடும் தொழிலும் மிகவும் பழமையானது. படத்தின் மீது வர்ணத்தைப் பூசுவது போல, துணிகளின் மீது சாயத்தை ஏன் பூசக்கூடாது என்று முதன் முதலில் நினைத்தார்கள். அவ்வாறு பூசிய வர்ணம் நிலைக்காமல் இருப்பது தெரிய வந்தது. துணியைத் தண்ணீரில் நனைத்தவுடன் சாயம் போய்விடுவதைப் பார்த்தார்கள். சாயச்சரக்குகளைத் தண்ணீரில் கரைத்து அதில் துணிகளைப் போட்டுக் கொதிக்க வைத்தால் சாயம் ஏறுகிறதா என்று பார்த்தார்கள். இது எல்லாச் சாயங்கள் விஷயத்திலும் திருப்தி அளிக்கவில்லை. வர்ணத்துக்குக் காரணமாயுள்ள பொருளுக்கும் துணிகளின் நூல் இழைக்கும் இடையே கவர்ச்சி, இருந்தாலன்றி, சாயம் கெட்டியாக இராமல் போவது தெரியவந்தது. கரியைச் சன்னமாகப் பொடிசெய்து கொண்டு, தண்ணீரில் அதைக் கரைத்து, அதில் துணியைபோட்டுக் கொதிக்கவிட்டால் துணி அழுக்காவதைத் தவிர துணிக்குக் கறுப்புச் சாயம் ஏறாது; அழுக்காக்கிய கரியையும் துணியை நன்றாகக் கல்லில் தோய்த்து நீக்கிவிடலாம். எனவே துணிகளிடம் கவர்ச்சியுள்ள சாயப் பொருள்களைக் கொண்டுதான் அவற்றுக்குச் சாயம் போடமுடியும் என்று நெடுநாள் முன்பே அறிந்தார்கள்.

இத்தகைய கவர்ச்சியைப் பெற்ற சாயங்களை கண்டு பிடித்தவர்கள் நம்முன்னோர்கள் இவர்கள் அவுரிச் சாயமும் (Indigo) நுணாச்சாயமும் (Madder Root) துணிகளுக்கு ஏற்ற சாயங்களாக இருப்பதைச் சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பே கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் எஜிப்த் மக்கள் நம்மிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்று தெரிகிறது. அவர்கள் நாட்டுக் கற்சிலைகளில் அந்நாளில் அவுரிச் சாயத்தில் தோய்த்த துணிகள் இன்னும் காணப்படுகின்றனவாம். அவர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் இவ்விரண்டு சாயங்களையும் தெரிந்து கொண்டார்கள் என்று கூறுகிறார்கள். அவுரிச் செடி நஞ்சை வயலில் நன்றாகப் பயிராகும். இச்செடியைத் தண்ணீரில் ஊறப்போட்டு அழுகவிட்டால் தண்ணீர் நீலமாக மாறிவிடும். பெரிய தொட்டிகளில் இச்செடிகளை நன்றாக ஊறவைத்து அவற்றில் சாயம் போடவேண்டிய துணிகளைப் போட்டு எடுப்பார்கள். அவற்றுக்கு அவுரியின் நீல நிறம் சுலபமாக ஏறிவிடும். இதைப்போல நுணாச்சாயமும் கெட்டியானது. ஆனால் இச்செடியின் வேர்தான் சாயத்துக்குக் காரணமாயுள்ள பொருள். வேரை நறுக்கித் தண்ணீரில் போட்டுக் காய்ச்சினால் தண்ணீர் சிகப்பாக மாறிவிடும். இச்சாயத்தையும் துணிகளுக்குச் சுலபமாக ஏற்றிவிடலாம். ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆளத் தொடங்கியவுடன் நாட்டில் அவுரியை ஏராளமாகச் சாகுபடி செய்யச்செய்து அதை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து விற்று வந்தார்கள். வேண்டுகிற அளவுக்கு அவுரியும், நுணாவேரும் கிடைக்கவில்லை. எனவே விஞ்ஞானத்தின் துணைகொண்டு இவற்றைச் செயற்கையாகத் தயாரிக்க முடியுமா என்று சோதனை செய்து பார்க்கலானார்கள். இதன் பயனாக ஆயிரக்கணக்கான செயற்கைச் சாயங்கள் தற்காலம் உபயோகப்பட்டு வருகின்றன.

இச்செயற்கைச்சாயங்களெல்லாம் தார் எண்ணெயிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. எல்லா நாடுகளிலும் சாயம் போடும் தொழில் பெருத்த அளவில் நடைபெற்று வருகின்றது. வெய்யில், மழையினால் கெடாதவாறு சாயம் கெட்டியாக இருக்கும்படி அனேக சீர்திருத்தங்களைக் கையாண்டு வருகின்றார்கள். சாயம் கெட்டியாக இருப்பதற்கு முன் கூறியது போல, சாயப் பொருளுக்கும் நூல் இழைக்கும் இடையே கவர்ச்சி இருக்க வேண்டும். சாதாரணமாக இத்தகைய கவர்ச்சி எல்லாச்சாயங்களுக்கும் இருப்ப

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், மதராஸ்.

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 71,10,900
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 51,67,608
ரிஸர்வ் நிதி - - ரூ. 61,50,000
டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

பதில்லை. இக்கவர்ச்சியை உண்டுபண்ணுவதற்கு அனேக வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேலும் சிலசாயங்கள் தண்ணீரில் கரையமாட்டா. அவற்றைச் சுலபமாகக் கரைப்பதற்குச் சாதனங்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். சாயம் போடும் முறைகளில் மூன்று பிரபலமானவை. முதல் முறைக்கு நேர்முறை(Direct Dyeing) என்று பெயர். இம்முறையில் தண்ணீரில் சுலபமாகக் கரையக்கூடிய சாயங்கள் தான் எடுத்துக்கொள்ளப்படும். இம்முறை மிகவும் எளிது. நாம் வீடுகளில் இதை உபயோகிக்கலாம். மற்ற இரண்டு முறைகளுக்கும் காடி கலந்து சாயமிடுமுறை (Mordant Dyeing) காரம் கலந்து சாயமிடுமுறை (Vat Dyeing) என்று பெயர். இவற்றை ஆலைகளில் தான் உபயோகிக்க முடியும். முதலில் சாயப் பொருள்களைத் தண்ணீரில் கொதிக்கவைத்து, பின்னர் காடியையோ (Acid) அல்லது காரத்தையோ (Alkali) சிறிது கலப்பார்கள். காடியின் உதவியால் சாயப்பொருள் ஆடை இழைகளால் நன்றாகக் கவரப்படும். தண்ணீரில் கரையாத சாயப்பொருள்களை ஸோடியம் ஸல்பைட் (Sodium Sulphide) என்னும் காரத்தில் கரைத்துப் பின்னர் துணிகளுக்குச்சாயம் ஏற்றுவார்கள். இத்தகைய சாயப் பொருள்களைக் கந்தகச் சாயங்கள் (Sulphur Dyes) என்றும் கூறுவதுண்டு.

பொதுவாக, கம்பளி, பட்டு ஆடைகளுக்குத்தான் பருத்தி ஆடைகளைக் காட்டிலும் சுலபமாகச் சாயம் போடலாம். ஆடைகளுக்குப் போடாமல் நூலுக்குச் சாயம் போடுவதும் உண்டு. இது அவ்வளவு லாபகரமில்லை. சாயம் ஏற்றிய பின்னர் நூலை ஆடைகளாக நெய்வார்கள். இம்முறைகளில் போட்ட சாயம் எப்பொழுதும் கெட்டியாக இருக்கும். துணிகளின்மீது பல வர்ணங்களில் அச்சடித்த கரைகள், பேட்டுகள், சித்திரங்கள், எல்லாம் அழியாமல் நெடுநாள்வரை இருக்கும்.

செயற்கைச் சாயங்களைக் கண்டுபிடிக்க வழிகாட்டியவர் பெர்க்கின் (Perkin) என்னும் விஞ்ஞானி. சுமார் நூறு வருஷத்துக்குமுன் இவர் லண்டன் கலாசாலையில் வாசித்துக் கொண்டிருக்கும்

போது விடுமுறை நாட்களில் கொயினைவை (Quinine) செயற்கையாகத் தயாரிக்க முடியுமா என்று சோதனை செய்து பார்க்கலானார். அப்போது மங்கல் ஊதா (Mauve) நிறம் இவர் சோதனைகளில் குறுக்கிட்டது. கொயினைவை விட்டு விட்டு இந் நிறத்தைப் பற்றிய சோதனையில் இறங்கினார். இந்நிறம் வந்த விதத்தை அறிந்து இதை எவ்வாறு பெருத்த அளவில் தயாரிக்கலாம் என்றும் கண்டு பிடித்தார். இதுமட்டுமல்ல, வேறு நிறங்களையும் செயற்கையாகப் பெறுவதற்கு வழியையும் காட்டினார். இவருக்கு அப்பொழுது வயது பதினெட்டு. இவர் கண்டுபிடித்ததின் பயனாக வியாபார முறையில் சாயத்தொழில்கள் ஆங்காங்கே ஏற்படலாயின. நிலக்கரியிலிருந்து கிடைத்த தார் எண்ணெயை மறுபடியும் கொதிக்கவைத்துக் காய்ச்சி வடித்தல் (Distillation) முறையினால் பென்ஜின், ஸைலீன், நாப்தலீன், ஆந்திரஸீன் முதலிய பொருள்களைப்பெற்று அவற்றைச் செயற்கைச் சாயங்களுக்கு மூலப்பொருள்களாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். இவற்றுக்கு நிறம் கிடையாது. இவற்றிலிருந்து சிலஇரசாயனச் சேர்க்கைகளினால் அனேக தினுசு சாயங்களைத் தயாரிக்கின்றார்கள். முதன் முதலில் பெர்க்கின் கண்டுபிடித்த மங்கல் ஊதா (Mauve) சாயத்திலிருந்து இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சாய தினுசுகளின் எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூறு. இயற்கைச் சாயங்களான அவுரிச்சாயமும், நுணாச்சாயமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. அவற்றுக்குப் பதிலாகச் செயற்கை அவுரிச்சாயமும், செயற்கைச் சிகப்புச் (Turkeyred) சாயமும்தான் உபயோகப்பட்டு வருகின்றன. இதனால் வீணாக ரோட்டில் கொட்டிவந்த தார் எண்ணெய்க்கும் உபயோகம் உண்டாயிற்று.

குயவன் பண்டங்களைச் செய்வதற்கு முன் எவ்வாறு மண்ணைத் தேர்ந்தெடுப்பதிலும் அதைப் பக்குவப்படுத்துவதிலும் அதிக நேரத்தைச் செலவழிப்பானோ அதைப்போல, சாயவிஞ்ஞானி செயற்கைச்சாயங்களைத் தயாரிப்பதற்குமுன் அவற்றுக்குத் தகுந்தபொருள்களைத்தேர்ந்தெடுப்பதில் தான் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுவான். ஒவ்வொரு பொருளும் அதன் மீது விழும் ஒளியைச் சிதறச் செய்வதால் தான் அது நமக்குப் புலனாகிறது. சூரிய வொளி வெண்மையானது. இதில் சிவப்பு முதல் ஊதாவரை உள்ள பல நிறங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து நமது கண்ணுக்கு வெள்ளொளி உணர்ச்சியைக் கொடுக்கிறது. இவ்வெள்ளொளி ஒருபொருளின்மீது விழும்போது சிதறி வெளிவரும் ஒளியில் சில பகுதிகள் நீக்கப்படுகின்றன. அதாவது அப்பொருள் சில நிற ஒளிகளை மட்டும் உறிஞ்சி விடுகின்றது. அவ்வாறு உறிஞ்சப்படாத நிறம் மட்டும்தான் அப்பொருளை நமக்குத் தோற்றுவிக்கிறது. ஒரு சிவப்புக் கண்ணாடியின்மீது சூரிய வெளிச்சம் விழும்போது அதில் சிவப்பு நீங்கலாக மற்ற எல்லா நிறங்களும் விழுங்கப்படுகின்றன. எனவே நமக்குக் கண்ணாடி சிவப்பாகத் தோன்றுகிறது. இதைப்போலவே நுணாவேர்ச்சத்து கலந்த தண்ணீர் சிவப்பு நிறம் நீங்கலாக மற்ற எல்லா நிறங்களையும் உறிஞ்சி விடுகிறது. அதனால்தான் அது சிவப்புச் சாயமாக இருக்கிறது. நுணாவேர்ச்சத்து எவ்வாறு மற்ற நிறங்களை உறிஞ்சிற்று என்பதைப் பற்றிய விவரங்களை இப்போது கூறுவோம்.

ஒவ்வொரு பொருளும் கோடிக்கணக்கான மிகச்சிறிய துகள்களின் கூட்டங்களே என்று தெரிய வந்தது. ஒரு தனிப்பொருளினுள் (Element) அடங்கியுள்ள சிறிய துகள்களுக்கு அணுக்கள் (Atoms) என்று பெயர். இரண்டு மூன்று தனிப்பொருள்கள் சேர்ந்த கலப்புப் பொருளின் சிறிய துகள்களுக்கு மூலகங்கள் (Molecules) என்று பெயர். உலகத்தில் தொண்ணூற்றிரண்டு தனிப்பொருள்கள்தான் உண்டு. இவற்றுக்கு உதாரணம் செம்பு, பிராணவாயு, வெள்ளி முதலியவை. நாம் காணும் மற்ற எல்லாப் பொருள்களும், தனிப்பொருள்கள் பல வகைகளில் கலந்த கலப்புப் பொருள்கள்தான். ஒவ்வொரு பொருளும் ஒரு நிறமாகத் தோன்றுவதற்கு அதன் மூலகங்கள்தான் முக்கிய காரணம். அவை தான் ஒளியை உறிஞ்சி விடுகின்றன என்று தெரிய வந்தது. மரம், செடி, கொடி இவற்றின் இலைகள் பச்சை நிற

மாகத் தோன்றுவதற்குக் காரணம் அவற்றில் உள்ள குளோரேபில் (Chlrophyll) மூலகங்கள். அம்மூலகங்களின் தன்மை பச்சைநிறம் நீங்கலாக மற்ற நிறப்பகுதிகளை உறிஞ்சி விடுவதுதான் என்று அறிந்தார்கள்.

இதைப்போலவே எல்லா நிறங்களும் பொருள்களின் மூலகங்கள் ஒளியை உறிஞ்சுவதனால் உண்டாகின்றன என்று தெரிய வந்தது. மூலகங்கள்தான் நிறத்துக்குக் காரணம் என்று அறிந்தபின் மூலகங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளில் இறங்கினார்கள். ஒவ்வொரு மூலகத்திலும் அக்கலவைப் பொருளில் அடங்கியுள்ள தனிப் பொருள்களின் அணுக்கள் இருக்கவேண்டும். உதாரணமாகத் தண்ணீரை எடுத்துக் கொண்டால் அதன் ஒவ்வொரு மூலகத்திலும் பிராணவாயு அணுவும், நீரகவாயு அணுவும் சேர்ந்து இருக்கும். இரண்டு நீரக அணுக்களும் ஒரு பிராண வாயு அணுவும் பிணைக்கப்பட்டு அம்மூலகத்தில் கட்டுண்டு இருக்கும். சாயப்பொருள்களின் மூலகங்களைச் சோதித்துப் பார்க்கும் போது அவை ஒவ்வொன்றிலும் இருபது முப்பது அணுக்கள் சேர்ந்து இருப்பது தெரிய வந்தது. முக்கியமாக, கரி (Carbon) பிராணவாயு, நீரகவாயு, காலகவாயு (Nitrogen) இவற்றின் அணுக்கள்தான் அதிகம் காணப்படுகின்றன. ஒரு மூலகத்தின் தன்மை அதில் அடங்கியுள்ள அணுக்களைப் பொறுத்து இருப்பதுடன் அதில் அவ்வணுக்கள் அமைந்துள்ள விதத்தையும் பொறுத்து இருப்பதை விஞ்ஞானிகளின் கண்டார்கள். சாயத்துக்குக் காரணம் இவ்வணுக்களின் அமைப்புத்தான் என்ற இரகசியம் வெளிப்பட்டது. மரத்தையும் ஆணியையும் வைத்துக் கொண்டு விதம் விதமாகப் பெட்டிகளும், மேஜைகளும், பீரோக்களும் செய்வது போல, மூலகத்தில் இவ்வணுக்களைத் தக்கவாறு அமையச்செய்து விதம் விதமாகச் சாயங்களைத்தயாரிக்கலாம் என்றுஉணர்ந்தார்கள். அவுரிச் சாயத்தின் மூலகத்தில் கரி, நீரகவாயு, பிராணவாயு இவற்றின் அணுக்கள் சேர்ந்திருப்பது போலவே இரசாயன முறையில் அணுக்களை வரிசை வரிசையாகத் தொடர்ந்து அமைத்து, அவுரிச் சாயத்துக்கு மாற்றான செயற்கை அவுரிச் சாயத்தைப் பெற்றார்கள். இதைப்போலவே நுணைச்சாய மூலகத்தில் உள்ளவாறு அணுக்களைச் சேரச் செய்து நுணைச் சாயத்தைச் செயற்கையாகத் தயாரித்தார்கள். இவ்வாறு ஆயிரக் கணக்கான சாய தினுசுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எல்லாம் மூலகங்களைத் தக்கவாறு அமைப்பதினால் பெற்றவைகளே ஆகும். இயற்கையில் தோன்றும் எந்த நிறத்துக்கும் மாற்றாக செயற்கைச் சாயத்தைத் தயாரித்து விட்டார்கள். இதனால் விதம் விதமாகத் துணிகளுக்குச் சாயம் போடுவது சாத்தியமாயிற்று. கதர் ஆடையையும், மில் துணியையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்று முயன்றுவரும் காங்கிரஸ் சர்க்கார்கள் ஆங்காங்கே சாயத் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும். அது சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு வசதிகளை விஞ்ஞானிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

இது அவர்களின் கடமையாகும்.

கோபுவின் தாய்

எஸ். கிருஷ்ணன்

கோபுவின் தாத்தா ராமச்சந்திரஐயர் அன்று தம் பேரனைப் பார்க்க வந்திருந்தார்.

நடுப்பகல். கோபுவும் அவனுடைய தாத்தாவும் இலைமுன் உட்கார்ந்தார்கள். சமையற்காரி அம்மாள் பரிமாறிக்கொண்டிருந்தாள். கோபு சட்டென்று, "அம்மா, அம்மா, எத்தனை நாளாய் என்னை ஏமாற்றுகிறாய்? இன்றைக்கு நீதான் எனக்குச்சாதம் ஊட்டவேணும்" என்றான். அடுத்த அறையிலிருந்த ஹமீதா "நீ தாத்தாவை ஊட்டச்சொல்லு" என்றாள்.

"முடியாது" என்றான் கோபு பிடிவாதமாய்.

ராமச்சந்திர அய்யர், "ஹமீதா, நான் தவறாய் எண்ணமாட்டேன், என் பெண் சகுந்தலா போகவில்லை; உன்னில்தான் இருக்கிறாள் என்றுதான் நான் எண்ணியிருக்கிறேன்." என்று கூறுகையில் அவர் தொண்டை இடறியது.

அடுத்த அறையிலிருந்து ஹமீதா கோபு முன் வந்து உட்கார்ந்ததும் அவர், "பன்னிரண்டு வருஷமாய் மனப்பூர்வமாக ராகவனை நேசித்துக்கொண்டிருக்கும் நீ, கோபுவின் தாய்தானே அம்மா?" என்றார்.

கோபுவுக்குச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்த ஹமீதாவின் மனதில் ராமச்சந்திர ஐயருடைய வார்த்தைகள், பல பழைய ஞாபகங்களைக் கிளறி விட்டன.

* * *

ஹமீதாவினுடைய தகப்பனார் பிஸ்மில்லா ஸேட் அந்த ஊரிலேயே பெரிய ஜவுளி வியாபாரி. அவளுடையதாய் அவளுக்கு இரண்டு வயதிருக்கையிலேயே காலம் சென்றிருந்தாள். பிறகு ஹமீதாவை வளர்த்தது பிஸ்மில்லாஸேட்தான்.

அன்று அவளுக்கு வயது பன்னிரண்டு. தினமும் மத்தியானம் சாப்பிடப்போகும்போது பிஸ்மில்லா ஸேட் பணப்பெட்டியின் சாவியை ஹமீதாவிடம் கொடுத்துவிட்டுப் போவார். கடையில் துணிமணிகளைக் காக்கும் பொறுப்பை ராகவனிடம் விட்டுவிடுவார். கடையில் பத்துப் பையன்கள் வேலைசெய்தார்கள். அவர்கள் எல்லோரினும் பிஸ்மில்லா ஸேட்டின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் அதிகமாய்ப் பாத்திரமானவன் ராகவனே. பொய் சூது வாது ஒன்றுமே அறியாதவன் ராகவன். கடையில் வேலைபார்த்து வந்த மற்றப்பையன்களுக்கு ராகவனிடம் பொறாமை ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

பிஸ்மில்லா ஸேட் பணப்பெட்டியின் சாவியை ஹமீதாவினிடம் ஒப்படைத்தால் ஹமீதா, சாவியை ராகவனிடம் ஒப்படைத்துவிட்டு, கடையின் உட்புறம்போய்ப் படுத்துத் தூங்குவாள்.

ஒரு நாள் மத்தியானம் பிஸ்மில்லாஸேட் வழக்கம்போல் சாப்பிடப் போயிருந்தார். ராகவனைத்தவிர மற்ற வேலைக்காரர்களும் சாப்பாட்டுக்குப் போயிருந்தார்கள். ஊரில் ஹிந்து முஸ்லீம் கலவரம் மும்முரமாய் இருந்தகாலம்.

திடீரென்று கடையின் பின்புறம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. நெருப்பின் சூட்டினால் தூக்கம் கலைந்து எழுந்த ஹமீதா பார்த்தபோது நாலுபக்கத்திலும் துணிகள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டாள். "அப்பா! அப்பா!" என்று கதறினாள். கடைக்கு வெளியே கும்பல் கூடியிருப்பதையும் அவர்கள் குடத்தில் தண்ணீர் நிரப்பிக் கடையின் முன்பாகத்தில் கொட்டிக் கொண்டிருப்பதையும் ஹமீதா கண்டாள். ஆனால் சூழும் நெருப்பிலிருந்து அவளைக் காப்பாற்ற முன் வருவோர் எவரையும் காணவில்லை. ஆனால் அதோ ஒருவன் ஓடிவருகிறான். வாசலில் எரியும்தீயைப்பொருட்படுத்தவில்லை. உள்ளே வந்து ஹமீதாவை அணைத்துக்கொள்கிறான். ஹமீதா அவன் பாசத்தில் போனதுதான் நினைவு.........

கண்களைத்திறந்து பார்த்தாள். அவள் படுத்திருந்த கட்டில் பக்கத்தில் அவளுடைய தகப்பனார் நின்றுகொண்டிருந்தார். அவள் கண் விழித்ததும் எங்கேயிருக்கிறாள் என்று தெரியவில்லை. "அப்பா நான் எங்கேயிருக்கிறேன்?" என்றாள்.

"ஆஸ்பத்திரியில்." என்றார் பிஸ்மில்லா ஸேட். ஒரு நிமிஷத்துக்குப்பின், "அசங்காமல் படுத்திரு; இல்லாவிட்டால் தோளி

விருக்கும் கொப்புளம் உடைந்துவிடும்.'' என்று அவர் சொன்னபோதுதான் தன் தோளில் பெரிய கொப்புளம் ஒன்றிருப்பதை ஹமீதா உணர்ந்தாள். சட்டென்று ராகவனுடைய நினைவு வந்தது. ''ராகவன் எங்கே?'' என்று அவள் கேட்டாள் தந்தையிடம். அடுத்த அறையில் படுத்திருப்பதாகச் சொன்னார் அவர். அவனுக்கு நெஞ்சிலும் முகத்திலும் பெரிய நெருப்புப் புண்களாம். இன்னும் பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் அவனால் எழுந்து நடமாடமுடியுமாம்.

மூன்று நாட்களுக்குப்பின் ஹமீதா எழுந்து விட்டாள். அடுத்த அறையில் ராகவனைப் பார்க்கச் சென்றாள். அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாதவிதம் அவன் முகம் மாறியிருந்தது கொப்புளங்களால். ஹமீதாவைக் காப்பாற்றுவதற்காகத்தானே இவன் இந்தமாதிரி ஆபத்தை வரவழைத்துக் கொண்டான் என்று எண்ணும்போதே ஹமீதாவின் கண்கள் நிறைந்து விட்டன. அவளுடைய தந்தை ராகவனிடம், ''இனிமேல் பயமில்லை என்று விட்டார் டாக்டர். நீ கவலைப்படாதே ராகவா!'' என்றார்.

டாக்டர் எதிர்பார்த்ததை விட அதிக நாட்கள் இருந்துவிட்டு ஒரு மாதத்துக்குப் பின் ராகவன் ஆஸ்பத்திரியிலிருந்து வெளி வந்தான். ஹமீதாவின் தந்தை, ''ராகவா, இனிமேல் உனக்குக் கடையில் வேலையில்லை. உன்னைப் பள்ளியில் சேர்த்து விடப்போகிறேன். உனக்கு எவ்வளவு படிக்க முடியுமோ அவ்வளவும் படி. நாளைக்கே ஹாஸ்டலில் சேரவேண்டும்'' என்றார்.

தாய் தகப்பனார் இருக்கையில் ஐந்தாவது வரை படித்திருந்த ராகவன் இப்பொழுது முதல் பாரத்தில் சேர்க்கப்பட்டான்.

தினமும் மாலையில் பிஸ்மில்லா ஸேட் வீட்டுக்கு வருவான். ஹமீதாவுடன் பள்ளியில் நடப்பதையெல்லாம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விளக்குவைத்ததும் போய் விடுவான்.

வருஷங்கள் நான்கு உருண்டோடி விட்டன இப்படியே, ஹமீதாவின் கலகலத்த

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேட்ட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாயச உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

சிரிப்பு மறைந்து விட்டது. அதற்குப் பதில் அழகில் கலந்த தனி கம்பீரம் ஒன்று அவள் முகத்தில் துலங்கத் தொடங்கிற்று. அவள் கடைக்குப் போவதை விட்டு விட்டாள். முன்போல் மாலையில் அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு வாசற் புறத்தில் நிற்கமாட்டாள். ஆனால் ராகவனுக்கு அந்த வீட்டில் சகல சுதந்திரமும் உண்டு.

சில சமயம் ஹமீதா, "உன் பள்ளி விஷயங்களை எல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறாய் ராகவா!" என்பாள்.

"வேறு சொல்ல யார் இருக்கிறார்கள் ஹமீதா? நான் அனாதையாயிற்றே." என்பான் ராகவன்.

ராகவனுக்குத் தாய்தகப்பன் யாரும் இல்லை. அவன் தன் மனதை வேறு யாரிடம் சொல்ல முடியும் என்று எண்ணிக் கொள்வாள் ஹமீதா.

ராகவன் எஸ். எஸ். எல். ஸி தேறினான். அவனுக்குப் பதினெட்டு வயது பூர்த்தியாகி விட்டது. கோடை விடுமுறைக்குப் பின் சென்னையில் காலேஜில் சேரவேண்டும்.

விடுமுறையின்போது ஒருநாள் ராகவன் எங்கோ போயிருந்தான். மத்தியானம் வீட்டுக்குத் தகப்பனார் சாப்பிட வருகையில் அவருடன் இன்னொரு மனிதர் வந்தார். தகப்பனார் சாப்பிட்டு முடிந்ததும் இருவருமாய்ப் பேசிக்கொண்டது ஹமீதாவின் காதில்விழுந்தது. அந்த மனிதர் ராகவனுக்குப் பெண் தருவதற்காகப் பேசவந்திருந்தார். அவர் ராகவனுடைய மாமனாம். தாயும் தந்தையும் ஜ்வரத்துக்கு இரையானதும் அனாதையாய் ராகவன் பிஸ்மில்லா ஸேட்டின் கடைக்கு வந்தபோது அவனைப் பற்றி எந்த மாமனும் கவலை எடுத்துக் கொள்ளவில்லை. இன்று பெண் கொடுக்க வந்திருந்தார் மாமன். அவளுடைய தந்தை, ராகவன் நல்ல பையன்தான் என்றும் அவனைத் தாம் மேலே படிக்கவைக்கப் போவதாகவும் கூறிவிட்டு, ராகவன் கலியாணம் செய்துகொள்வதில் தமக்குத் தடை ஒன்றும் இல்லை என்றார். அத்துடன் நிற்காமல், "அவன் படித்து மனைவிக்குச் சாதம் போடவேணும் என்பதில்லை. என் சொத்தில் பாதியை அவன் பெயருக்கு எழுதிவைத்திருக்கிறேன்" என்றார்.

அந்த மனிதர் பரமதிருப்தியுடன் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஆனால் ஹமீதா? அவள் மனம் ஏனோ இதைக் கேட்டு வேதனையுற்றது? அன்று வரை அவள் இன்னதென்று உணர முயற்சிக்காத ஓர் உணர்ச்சி அன்று உருக் கொண்டது.

அன்று மாலை ராகவன் ஹமீதாவிடம் பேசுவதற்காக முயற்சித்தபோது அவள் ஒதுங்குவதைக்கண்டு, "ஏன் ஹமீதா, என்னிடம் ஏன்பேசப் பயப்படுகிறாய்?" என்று கேட்டான்.

"உன்னிடம் பேசிக்கொண்டிருக்க நான் குழந்தையா? நீ எனக்கு யார்? ஏதோ என்னை ஒரு தடவை காப்பாற்றினதற்காக என் தந்தை உனக்கு உதவுகிறார், அவ்வளவு தானே?" என்றாள் கடுப்புடன்.

ராகவனுடைய முகம் வெளுறி விட்டதை அவள் கவனித்தாள். அவன், "நிஜமாய் நீ அப்படியா எண்ணுகிறாய், ஹமீதா? அப்படியானால் இனி நான் இங்கே வரவில்லை." என்று கூறிக்கொண்டு எழுந்தான்.

"நிஜம் எது, பொய் எது, என்று ஆண்டவனுக்குத்தான் தெரியும்." என்று கூறிக் கொண்டு தன் கண்களில் நிறைந்த நீரை மறைப்பதற்காக எழுந்து சென்றாள் ஹமீதா.

வருஷங்கள் ஏழு ஓடி மறைந்து விட்டன. ராகவன் இதற்குள் வெறும் ராகவனாயில்லாமல் டாக்டர் ராகவன் எம். பி. பி. எஸ் ஆகியிருந்தான். ஹமீதாவின் தகப்பனார் கொடுத்திருந்த பணத்தைக்கொண்டு ஒரு நல்ல ஆஸ்பத்திரியைச் சொந்தத்தில் ஆரம்பித்தான். பிஸ்மில்லா ஸேட் தம்முடைய பெரிய பங்களாவை ராகவன் வாழ்விற்காகக் கொடுத்திருந்தார். அங்கே தான் ராகவன், அவன் மனைவி சகுந்தலா, அவர்களுடைய இரண்டு வயதுப்பிள்ளை கோபாலன் மூவரும் வாழ்ந்து வந்தார்கள்.

சென்ற ஏழு வருஷ காலமாய் ராகவனை ஹமீதா பார்க்கவில்லை. ஆனால் அடிக்கடி ராகவனுடைய மனைவி வந்து அவளுடன் பேசிக்கொண்டிருப்பாள். ராகவனுக்குக் குழந்தை பிறந்தபின் குழந்தையை ஹமீதா பகல் முழுதும் வைத்துக்கொண்டிருப்பாள்.

அமைதி நிறைந்த அந்த நகரத்தில் ஒரு சிலருடைய வகுப்புத் துவேஷ உணர்ச்சியால் கலவரங்கள் ஏற்படலாயின. மனிதனை மனிதன் காரணமில்லாமல் வெறுப்பதைப் பார்த்த பிஸ்மில்லா ஸேட் நகரம் மறுபடியும் சாந்தமாவதற்காக இரவு பகலில்லாமல் உழைக்கலானார். அவருடைய நண்பர்கள் சிலர், "முன்பு கலவரத்தினால் உங்கள்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ஆடிட்டர் யாதாஸ்து (சுருக்கமானது) 31—12—46 வரை

பொறுப்புகள்		ரூ. அ. ப.
செலுத்திய மூலதனம்	...	18,75,000—0—0
ரிஸர்வ் நிதி	...	7,75,000—0—0
கன்டிஞ்சன்ட் நிதி	...	16,525-13-11
வரிகளுக்கு ஒதுக்கியது	...	76,182-15—0
டிபாஸிட்டுகள் அண்டு மற்றும் பொறுப்புகள்	...	5,49,01,266—3—3
வசூலிக்க பில்கள் அண்டு கமர்ஷியல் கிரடிட்கள்	...	39,00,258-12—2
டிராப்ட்ஸ் அண்டு டி. டி-கள் செலுத்தவேண்டியது	...	2,99,196—2—8
சில்லறை இனங்கள்	...	79,311—0—3
பிராஞ்சு கணக்குகளில் கொடுபட வேண்டியதுகள்	...	17,26,806-10—8
லாப, நஷ்ட கணக்குகள்		
முன் வருடப் பிரகாரம் இருப்பு: 3,588—7—1		
இவ்வருட நிகர லாபம் **8,14,606—11—3**		
8,18,195—2—4		
30—6—46-ன் பாலன்ஸ் ஷீட் படி ஒதுக்கியது 3,86,469—1—0		4,31,726—1—4
		6,40,81,273-11—3

ஆஸ்திகள்		ரூ. அ. ப.
கடன்கள் & அட்வான்ஸ்கள்	...	3,23,61,983—6—8
பாங்க் பில்டிங்ஸ்	...	1,98,510-10—0
கஜானு பெட்டி அண்டு பர்னிச்சர்கள்	...	1,05,425-13—8
புத்தகங்கள் அண்டு ஸ்டேஷனரி	...	53,684-15—1
வசூலிக்கவேண்டிய பில்லுகள் அண்டு கமர்ஷியல் கிரடிட்கள் (பக்கத்தில் உள்ளபடி)	...	39,00,258-12—2
சில்லறை இனங்கள்	...	6,75,515-14—5
இன்வெஸ்ட்மெண்ட்கள் (கவர்ன்மெண்ட் பிராமிஸரி நோட்டுகள் முதலியன)	...	1,56,74,768—3—0
கையில் இருப்பு 59,49,363-11-10		
பாங்கியில் இருப்பு 51,61,762—4—5		1,11,11,126—0—3
		6,40,81,273-11—3

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அண்டு கம்பெனி,
ரிஜிஸ்டர்டு அக்கௌண்டெண்ட்ஸ், அண்டு ஆடிட்டர்கள்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

கடை எரிந்து லக்ஷம் ரூபாய் நஷ்டமாயிற்றே. அப்படியும் நீங்கள் ஏன் இப்படி துவேஷமில்லாமல் இருக்கமுடிகிறது? அதிசயம்தான்'' என்றார்கள். அப்பொழுது பிஸ்மில்லா ஸேட், ''அதேசமயம் அன்பு மதம் ஜாதி ஒன்றையும் அறியாது என்ற உண்மையை உணர்த்த அந்த ராகவன் தீக்குளித்து என் பெண்ணைக் காப்பாற்றினதையும் கண்டேன். அதனால் மதத்துக்கும் இந்தச் சண்டைகளுக்கும் சம்பந்தமே இல்லை என்கிறேன்'' என்றார்,

ஹிந்துக்கள் இருந்தபக்கமே முஸ்லிம்கள் வரப் பயந்தகாலத்தில் பிஸ்மில்லா ஸேட் நிர்ப்பயமாய் ஹிந்துப் பிரமுகர்களைப் பார்க்க வருவார். அவர்களிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு இரவில் தனியாய் நடந்து போவார் வீட்டுக்கு.

ராகவன் இருந்த பங்களாவுக்கு அடிக்கடி வந்து சகுந்தலாவிடம் பேசிவிட்டுப் போவார். சகுந்தலாவின் குழந்தை கோபுவுக்கு அவருடைய நரைத்த தாடியைப் பிடித்து இழுத்து விளையாடுவதில் தனியான மகிழ்ச்சி.

இப்படியிருக்கையில் ஒரு நாள் பிஸ்மில்லா ஸேட்டின் வீட்டு முன்புறத்துச் சுவரில், ''இனி நீ டாக்டர் ராகவன் வீட்டுக்குப் போனால் உன்னைக் கொன்றுவிடுவேன்'' என்று ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. இதைப் பார்த்த பிஸ்மில்லா ஸேட் சிரித்தார்.

அன்று கோபுவுக்கு மூன்று வயது நிரம்புகிறது. பிஸ்மில்லாஸேட் நிறையப்பொம்மைகள், சாக்கலேட்டுகள் எல்லாம் வாங்கிக்கொண்டு சாயங்காலம் கோபுவைப் பார்க்கப் புறப்பட்டார். ஹமீதா, ''அப்பா, ஊரெல்லாம் கலவரம்; உங்களைவேறு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இன்னொரு நாள் போங்கள்; இல்லாவிட்டால் காரிலாவது போங்கள்'' என்றாள்.

பிஸ்மில்லாஸேட் சிரித்துக்கொண்டே ''சாயங்காலம் நடக்காவிட்டால் எனக்கு ராத்திரித் தூக்கம் வராது ஹமீதா. நீ பயப்படாதே.'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

ராகவன் ஏதோ நோயாளியைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தான். பங்களாவின் முன்புறத்துத் தோட்டத்தில் கோபு விளையாடிக் கொண்டிருந்தவன் பிஸ்மில்லா ஸேட்டைப் பார்த்ததும் ''தாத்தா'' என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடிவந்தான் அவர் அருகில். அவர் குழந்தையைக் குனிந்து எடுத்துக்கொண்டு பங்களாவுக்கு வந்தார். வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து பொம்மைகளை எடுத்து, கோபு முன் வைத்துக் கொண்டிருக்கையில், ''ஐயோ'' என்ற குரல் கேட்டது. சகுந்தலாவின் தலையில் ஒரு கத்தி ஆழமாய்ப் பதிந்திருந்தது. அவள் தரையில் ரத்தவெள்ளத்தில் கிடந்தாள். பிஸ்மில்லாஸேட் அந்தக் கத்தியால் குத்தினவனைப் பார்த்தார். அவன் ஒரு ஹிந்து. பலதடவை அவனை அவர் எச்சரித்திருக்கிறார் முன்பு. பஞ்சாயத் கோர்ட் ஹானரரி மாஜிஸ்திரேட் என்ற முறையில் அவனைத் தண்டித்திருக்கிறார் இரண்டுதடவை. அவன் நினைக்காதது நடந்துவிடவே ஓடவும் திறமையற்று நின்றிருந்தான் அவன்.

பிஸ்மில்லா ஸேட் சட்டென்று சகுந்தலாவின் தலையிலிருந்து கத்தியை எடுத்தார். அவர் அவனிடம், ''துரோகி, இதுதான் ஹிந்துமதம் கற்பித்ததா? இதனால் உன் மதத்துக்கு என்ன லாபம்? இந்தக் கத்தியை உன்மேல் வீச எனக்குத் தெரியும். ஆனால் அதனால் என்பெண் பிழைக்கமாட்டாள். போ. நீ செய்த குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது,'' என்றார்.

அந்தக் கொலையாளி அங்கிருந்து நகர்ந்தான்.

சகுந்தலா, ''குழந்தையை ஹமீதாவிடம் ஒப்படைத்து விட்டேன். இனி அவள் தான் அவனுக்குத்தாய், நான் போகிறேன்'' என்று கூறிக்கொண்டு உயிர் விட்டாள்.

* * *

வெகு காலத்துக்குப் பின் ஹமீதா ராகவனை அன்று தான் பார்த்தாள். அவள் இடுப்பில் குழந்தை கோபாலன் இருந்தான்.

ராகவன் தொண்டை இடற, ''இனி கோபு உன்னிடம்தான் வளரவேண்டும், ஹமீதா! என் இஷ்டப்படி நடத்திருந்தால் கோபு உன் வயிற்றில் பிறந்த பிள்ளையாயிருப்பான்......ஆனால்......'' என்று நீண்ட பெருமூச்சு விட்டான்.

ஹமீதாவின் கண்கள் நிறைந்து விட்டன. அவள் கண்களைத் துடைத்துக்கொண்டே, ''அதனால் என்ன, உங்கள் குழந்தையை, நான் என் குழந்தையாய் ஏற்றுக்கொண்டு விட்டேன். என்று கோபுவைக் கவனிக்க ஒருத்தியை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ அன்று அவனை நீங்கள் அழைத்துக் கொள்ளலாம்,'' என்றாள்.

"அதற்காக இனி யாரையும் நான் தேடப் போவதில்லை ஹமீதா. நீ இருக்கிறதே போதும்"

அவன் மேலே பேசுவதைத் தடுப்பதற்காக ஹமீதா குறுக்கிட்டாள். "குழந்தை பொறுப்பைத்தவிர வேறு எந்தப் பொறுப்பையும் என்னால் ஏற்கமுடியாது. எவ்வளவோசிரமப்பட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். அந்த உறுதியைக் கலைக்காதீர்கள். வேறு எதையும் எதிர்பார்க்காதீர்கள்."

"இல்லை, ஹமீதா! நான் வேறு எதையும் எதிர்பார்க்க வில்லை. கோபு உன்னிடமே வளர்ந்து உன்னைப்போல் மனோதிடம் பெறட்டும்," என்று கூறிக்கொண்டு வெளியே சென்றான்.

இரண்டு மாதங்களாகி விட்டன ராகவன் சீமைக்கு மேல் படிப்பிற்காகப் போய்.

சகுந்தலாவின் தகப்பனார் தம் பேரனை மாதம் இருமுறை வந்து பார்த்து விட்டுப் போவதுண்டு. அன்றும் அதற்காகத்தான் வந்திருந்தார்.

* * *

சாப்பிட்டுக் கொண்டிருந்த கோபு, "அம்மா இனிமேல் தினமும் நீதான் ஊட்டுவாயா?" என்றான்.

அதற்கு அவனுடைய பாட்டனார் தான், "ஆம் கோபு, இனி உன் அம்மா தினமும் சாதம் ஊட்டுவாள்." என்று மறுமொழி கூறினார்.

நமாஸ்

டி. சேஷாத்திரி

"ஸையத் டெயிலர்'' ஒரு மாதிரியான ஆள். முன் கோபி. சொன்ன பேச்சுப்படி நடக்கமாட்டான். "நாளைக்குச் சாயந்திரம் தாரேனுங்க'' என்று சொல்லித் துணியை வாங்கிப் போவான். நாளைக்குச் சென்று கேட்டால், "நூல் வாங்கிவர இன்னும் போகலீங்க. நாளைக்கு அனுப்பிச்சுப் போடறேன் போங்க'' என்பான். "போங்க'' என்று வாயால் கேட்டுக்கொள்வதுடன் நிற்கமாட்டான். நாம் நிற்பதில் ஏதோ அவன் கால் வலிப்பதுபோல் நம்மைத் துரத்திவிட்டே மறு வேலை பார்ப்பான். அவன் அகராதியில் "நாளை'' என்ற பதத்துக்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தமும் கிடையாது. ஒரு வேளை அர்த்தமே கிடையாதோ என்னவோ!

"அப்பா உண்மையைச் சொல்லப்பா. எப்பொழு தருவாய்?'' என்றால், "அதுதான் சொன்னேனுங்களே. நாளைக்கு அனுப்பி விடுகிறேன்'' என்று 'ஸீல்' வைப்பான். எவ்வளவுநாள் இப்படி ஸால்ஜாப்பு சொல்வான். அப்பப்பா! துணி எந்த உருப்படிக்காக வாங்கிக்கொண்டு போனான் என்பதையே மறந்து சட்டைக்குப் பதில் கௌனும் கௌனுக்குப்பதில் குழந்தையின் தாயாருக்கு ரவிக்கையும் தைத்துக் கொண்டுவந்து விடுவான். எவ்வளவோ தடவை பெரிய பெண்ணிற்கு என்று தைத்த கௌன் சிறிய பெண்ணுக்குப் போடும்படி ஆகிவிடும். சிறிய பெண்ணுக்குத் தைத்த பாவாடையை அதைப் பாகற்காய்க் கறி போல் கருதும் பெரிய பெண்ணே கட்டிக் கொள்ள நேரிடும்.

ஆனால் ஒரு விஷயம். அவன் 'நமாஸ்' படிக்கமட்டும் தவறமாட்டான்.

அந்த 'ஸையத் டெயிலர்'' ஒரு நாள் மாலை 5-மணி இருக்கும். ஒரு வேலையைக் கையில் எடுத்துக்கொண்டு யந்திரத்தின் பக்கத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது அவன் நண்பன் கறுப்பண்ணனும் வந்தான்.

"என்ன ஸையிது! மழை வரும் போல இருக்கே?'' என்றான் கறுப்பன்.

"மழை ஒண்ணும் வந்துடாது. இது எப்ப வாங்கினது தெரியுமா? நான் முன்னே கோயமுத்தூர் போனேனல்ல? அப்ப வாங்கியது. 'அர்ச்சென்டாத்' தாரேன்னுட்டு, இதுவரையில் சும்மா போட்டுட்டேன். இனித் தாளாது.''

என்று ஸையத் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இருவர் காதுகளும் யாரோ கடுகி வரும் நடையின் சப்தத்தைக் கேட்டன. ஒருவர் வெகு வேகமாகக் கடையை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

"வாங்க, வாங்க'' என்று வரவேற்றான் ஸையது வந்தவரை. ஆனால் உடனேயே "நீங்க ஏன் வந்தீங்க?'' என்று ஒரு குண்டையும் தூக்கிப் போட்டான்.

வந்தவர் இவனிடம் மரியாதை பெறவோ அவமரியாதையை லக்ஷியம் செய்யவோ வந்தவராகத் தென்படவில்லை. அவர் முகத்தில் கோபமா, வருத்தமா என்று சொல்ல முடியாமல் இருந்தது.

ஆனால் அவர் ஆத்திரமாகவே பேசினார்.

"ஏன் ஸையத்து? உனக்குக் கொஞ்சம்னாலும் பொறுப்புக் கிறுப்பு ஒண்ணும் கிடையாதே? என்னிக்குத் தாரேன்னு சொல்லி வாங்கியாந்தே? இன்னுமா ஆகவில்லே?''

ஸையத் சாவதானமாய்ச் சொன்னான்: "இன்னம் வெட்டக்கூட இல்லிங்களே?''

"வெட்டக்கூட இல்லியா? அடபாவி! நீ நாசமாய்ப்போக. ஏண்டா இப்படி அநியாயம் பண்றே.''

ஸையத்துக்கு அந்த வார்த்தை பொறுக்கவில்லை. எழுந்திருந்து தன் அலமாரியில் தேடிக்கொண்டே "சரிதான் நிறுத்து ஐயா! இப்படி எக்கச் சக்கமாய் பேசுவேன்னு உங்கிட்ட நான் வாங்கியே இருக்க மாட்டேன். சரி எடுத்துக்கிட்டுப் போய்யா உன் நாத்தத்துணியை'' என்று சொல்லி விட்டான்.

வந்தவர் நிலையை அவன் அறிந்திருந்தால் ஸையத் அப்படிப் பேசியிருக்க மாட்டான். வந்தவரும் கொஞ்சம் பொறுமையுடன் விஷயத்தைச் சொல்லியிருக்கலாம்.

ஆனாலும் அவர் கோபித்துக்கொள்வதற்குக் காரணம் வேறு ஒன்றுமே வேண்டாம். சரியாக ஒரு மாதத்துக்கு முன்

"நாளைக்குத் தருகிறேன்" என்று வாங்கி வந்த ஸில்க் கௌன் துணியைக் குழந்தைக்குச் சட்டை தைக்க, வெட்டக்கூட இல்லை என்றால் கோபம் வராதா என்ன?

அவர் பெண் குழந்தை மீனா நீண்ட நாளாகவே தன் மழலை மொழியில் ஸில்க் கௌன் வேண்டுமென்று திவிரமாகச் சொல்லிக்கொண்டு வந்தாள். அவரும் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு கஜம் பட்டுத்துணி வாங்கினார். அவருக்கு இன்னம் மாதம் பத்து ரூபாயாவதுகூடச் சம்பளம் வந்து கொண்டிருந்தால் அந்தத் துணியைச் ஸையத்திடம் கொடுத்திருக்க மாட்டார். ஸையத் எது கொடுத்தாலும் வாங்கிக் கொள்வான். துணியைத் திருடமாட்டான்.

கொடுக்கும்போதே அவர் கேட்டார் "ஸையத், நீ எப்பொழுதும் செய்வதுபோல செய்யாதே. இந்தச்சட்டை குழந்தை ரொம்ப ஆசைப்பட்டது. அது வெள்ளிக் கிழமையன்று மாமாவீட்டுக்குப் போகிறது. அதற்கு உபயோகமாகும்படி தைத்து வா. எனக்கும் அடிக்கடி உன் கடையில் உட்கார நேரம் கிடையாது. என்ன, வருகிறாயா? முடியுமா? இல்லாமற்போனால் சொல்லிவிடு" என்று.

"இது ஒரு பிரமாதங்களா? வெள்ளிக் கிழமைதான் இன்னும் ஆறுநாள் கிடக்குங்களே. அம்மாம் நாள் எதுக்குங்க? நாளை சாயந்தரமே அனுப்பிச்சுப் பிடறேனுங்க."

நம்பினார் ராமசாமி அய்யர். மகிழ்ந்தாள் மீனா. 'நாளை' சாயந்தரமும் ஆயிற்று. வெள்ளி சாயந்திரமும் ஆயிற்று. "மீனா போய்க் கேட்டுவருகிறேன்" என்று துடியாய்த் துடித்தாள். ராமசாமி அய்யர் தாமே போனார். ஸையத் இருந்தால்தானே. அவன் கடையைப் பூட்டிக்கொண்டு கோயமுத்தூர் போயிருந்தான்.

குழந்தை தாயாருடன் மாயவரம் போய் வந்தாள். ராமசாமி அய்யர் சமையல் செய்வாரா? ஆபீஸ் போய் மாரடித்துக் கொள்வாரா? அல்லது ஸையத் கடையில் பழி கிடப்பாரா? அவருக்குப் போகவே ஒழியவில்லை.

குழந்தை திரும்பிவந்தாள். அவள் அங்கேயே ஸில்க் கௌன் உருப்போட்டுக் கொண்டிருந்தாள். வந்ததும் ஜபம் அதிகமாயிற்று. எப்பொழுது பார்த்தாலும் ஞாபகம் வந்தபோதெல்லாம் அழுகையும் முனகலும் தான். ராமசாமி அய்யரும் அதட்டியோ வேறு வழிகளில் திருப்பியோ குழந்தையை

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ செண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்ஸா	கும்பகோணம்	திருநெல்வேலி ஜங்ஷன்	ராமநாதபுரம்
அனகாபள்ளி	சாலூர்	திருச்சிராப்பள்ளி	மதுரை
அம்பாசமுத்திரம்	சிதம்பரம்	திருவாரூர்	மாருடேரு
ஆம்பூர்	சித்தூர் (கொச்சி)	தென்காசி	விழுப்புரம்
ஈரோடு	சீயாழி	நாகப்பட்டணம்	விருதுநகர்
கடலூர் N. T.	தஞ்சாவூர்	பரமக்குடி	விஜயநகரம்
கடலூர் O. T.	தாடபள்ளிக்கூடம்	பாலக்காடு	வேலூர்
காஞ்சீவரம்	திலாறு R. S.	பார்வதிபுரம்	வேதாரண்யம்
காரைக்குடி	திருநெல்வேலி டவுன்	புதுக்கோட்டை	

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% வீதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/ வாங்கக்கூடியது ரூ. 5000/ வரை வட்டி $2\frac{1}{2}$% ,,
கரண்ட் கணக்கு .. .. .. $\frac{1}{4}$% ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

மறக்கச் செய்து கொண்டுவந்தார். ஆனாலும் அவர் அதைஸையத்தினிடமிருந்துபெற ஏதோ தம்மாலான முயற்சிகளில் ஒன்றும் குறைக்கவில்லை.

இதனிடையில் ஒரு அனர்த்தம் நடந்துவிட்டது. மீனுவை அழைத்துக் கொண்டு அவள் தாயார் ஒரு நாள் மாலை கோவிலுக்குப் போனாள். வரும் பொழுது திடீரென்று மழை பெய்தது. குழந்தை நனைந்துவிட்டது. எவ்வளவோ மழை பெய்ததில்லையா? எவ்வளவோ குழந்தைகள் நனைந்ததில்லையா? எல்லாம் காலம்! யாரைச் சொல்வது? குழந்தைக்கு ஜ்வரம் வந்து விட்டது. இரண்டு நாள் ஏதோ சாதாரணமாய் 'லொள் லொள்' என்று இருமிற்று. சாப்பாடு இறங்கவில்லை. கடைசியில் நெற்றிக் கட்டில் கைவைக்க முடியாதபடி ஜ்வரம் விசிறி அடிக்கக் குழந்தை படுத்த படுக்கையாய் விட்டது. முதலில் கொஞ்சநாள் தாய்தந்தையர் கவனிக்காமல் இருந்து விட்டார்கள். மறுநாள் ஜ்வரவேகம் அதிகம். குழந்தை பிதற்றவும் ஆரம்பித்து விட்டது. ராமசாமி அய்யர் மனைவியை வைதார்; "பீடை! இப்படிக் குழந்தையை மழையில் நனைத்துக் கொண்டாவது என்ன கோவில் வேண்டிக் கிடக்கிறது. இப்பொழுது யாரிடம் இருக்கிறது டாக்டரிடம் கொட்டி அழுவதற்கு?" என்று அங்கலாய்த்தார்.

மனைவிக்கும் செய்தது பிசகு என்று தெரியும். ஆனால் எதிராளி திடீரென்று படை எடுப்பு ஆரம்பித்த பிறகு யார்தான் தன் குற்றத்தைக் கவனிக்கிறார்கள்? "ஆம் வாழ்ந்தது! எதுக்காக இப்படி எரிஞ்சு கொட்டறேள்? படுத்துக்கொண்டிருக்கற குழந்தைக்கு ஒரு மருந்தைக் காணும். என்னை வறுத்தால் குழந்தைக்கு வந்தது போய்விடுமாக்கும்?"

அதுவும் சரிதான். இருவரும் குழந்தைக்கருகில் வந்தார்கள். குழந்தைக்கு ஜ்வரம்; சளிக்கட்டு; மூச்சுவிட முடியவில்லை; திண்டாடிக் கொண்டிருந்தது. "சரி. வேறு எதற்கு இதெல்லாம் வருகிறது? பணச்சிலவுக்குத் தானே! அதைப் பார்த்தால் குழந்தை பிழைக்குமா? கூப்பிட்டு வருகிறேன் டாக்டரை! என்று சொல்லிக் கொண்டே ராமசாமி அய்யர் வெளியே போனார்.

டாக்டரும் வந்தார். பார்த்தார். மருந்து கொடுத்தார். நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. தாயும்தந்தையும் மாறி மாறி, குழந்தையருகில் உட்கார்ந்து கண்ணீர் உகுத்தார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. குழந்தைக்கு ஜ்வரம் வந்து பதினைந்தாவது நாள். அன்று மிகக்கடுமை. 4-மணிக்கு வந்த டாக்டர் "இன்னும் 4-மணி நேரம் போனால்தான் ஏதாவது சொல்லலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

குழந்தை மயங்கிப் படுத்துக் கொண்டிருந்தது, திடீரென்று புரண்டு படுத்தது. "அப்பா!" என்று கூப்பிட்டது. "ஏன் அம்மா" என்று ஆர்வத்துடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கீழே குனிந்தார். "அப்பா ஸில்க் கௌன்" என்று முனகினதைக் கேட்டு அய்யர் திகைத்தார்.

அம்மாவும் இந்த முனகலைக் கேட்டாள். முன் யோசனையில்லாமலே "அதுக்கு ஏது துப்பு? சாகிற சமயத்திலேகூடக் குழந்தைக்குப் போட்டுக்கொள்ள ஒரு சட்டை கிடைக்காதுபோலிருக்கிறது! காசோடே சாகறவாளுக்கு வேறு என்ன கிடைக்கும்? ஸையத் தான் காப்பாற்றப்போறான்" என்று பொரிந்து கொட்டிவிட்டாள்.

வார்த்தைகள் சுடச்சுட வந்தன. அய்யர் அயர்ந்துவிட்டார். உடல் எரிய ஆரம்பித்து விட்டது, ஒன்றும் சொல்லவும் வாயில்லை. கோபமெல்லாம் ஸையத்திடம் பாய்ந்தது.

* * *

அந்தச் சமயத்தில்தான் அவர் ஸையத்தினிடம் சென்றது; இரைந்தது. அவருக்கு அதிக நேரமுமில்லை. ஆகவே ஒன்றும் சொல்லவோ கோபத்தைக் குறைக்க முயலவோ இயலவில்லை. ஏக்கம் நிறைந்த குரலில் "உனக்குத் தெரியாது, ஸையத்! தந்தை மனது என்ன என்று" என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குப் போய் விட்டார்.

ஸையத்தின் வரட்டுக் கோபம் அடங்கி விட்டது. தேடுவதை நிறுத்தி, கறுப்பண்ணனிடம் சாவதானமாக "என்ன அய்யரு இப்படிக் கத்தறாரு?" என்று கேட்டான். கறுப்பன் சொன்னான்." இல்லை ஸையத், அவர் வீட்டிலெ குளந்தைக்கு ரொம்ப சுரம். இப்பவோ அப்பவோன்னு கிடக்கு. நான் வாரப்பகூட டாக்டரு போனாரு';

"எத்தனை வயசிருக்கும்?"

"போடா அசடு, அவருக்கு ஒரே குளந்தைதாண்டா. 5 வயசிருக்கும்"

ஸையத் எழும்பிக் குதித்தான். "ஆ!" உடனே அவன் கைகள் தையல் மிஷினி லிருந்த துணியைக் கீழே தள்ளிவிட்டன. புள்ளியும் பூவும் போட்ட ஒரு ஸில்க் துணி அதன்மேல் ஏறிற்று. ஸையத் அதன் மூலை யில் சேப்புப் பென்சிலால் எழுதப்பட் டிருந்த ஏதோ ஒரு அளவைப்பார்த்து முண முணத்தான். 'டக் டக்' என்று கத்திரிக் கோல் வேலை செய்தது. காலும் கையும் மும்முரமாக வேலை செய்தன. பதினைந்து நிமிஷங்கள்கூட ஆகியிருக்காது. அழகிய ஒரு சின்னஞ் சிறு சட்டை தயாராகிவிட் டது.

ஒரு படுக்கை. அதற்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி. அதன்மேல் டாக்டர்களின் மருந்துப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படுக்கையில் தலையில் ஐஸ் மூட்டை யுடன் மீனு படுத்திருந்தாள். கால்மாட்டில் தாய் உட்கார்ந்திருந்தாள். அடிக்கடி அவள் குழந்தை முகத்தைப் பார்ப்பதும் உடலைத் தொடுவதும் பெருமூச்செறிவதும் படுக்கை, போர்வைகளைத் திருத்துவதுமாய் இருந் தாள். டாக்டர் அடுத்த தாழ்வாரத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். ராம சாமி அய்யர் அங்குமிங்குமாக நிலை கொள் ளாமல் அலைந்துகொண்டிருந்தார்.

ஸையத் முதலில் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தான். அப்பொழுது குழந்தை ஒரு தடவை விழித்துக் கொண்டது. ஏதோ மிகவும் மெல்லிய குரலில் சொல்லிற்று. தாய் குனிந்து கேட்டாள். அவளுக்கு "சட்டை" என்று காதில் விழுந்தாற்போல் இருந்தது. "என்னம்மா? என்னம்மா?" என்று கத்தினாள். டாக்டரும் ராமசாமி அய்யரும் உள்ளே ஓடிவந்து பார்த்தார்கள். டாக்டர் மறுபடியும் சொன்னார், "இன்னும் அரைமணி நேரம் போகவேண்டும்"

தாயார் "ஐயோ குழந்தை சாவதற்குள் 'சட்டை, சட்டை' என்று எவ்வளவுதரம் சொல்லுமோ? எனக்கு இது பொறுக்கப் போகல்லியே!" என்று அலறினாள். டாக்டர் ஆசுவாசப் படுத்தினார். கணவிழித்து கண் ணீர் உகுத்து அன்ன ஆகாரமில்லாமல் கஷ்டப்படும் தாய் உள்ளத்தின் சீற்றத்தை யார் தடுக்க முடியும்?

ஸையத் இதைப் பார்த்துக் கொண்டிருந் தான். கண்களில் தண்ணீர் வந்தது.

"ஓ அல்லா! என்ன பாவம் பண்ணிட் டேன்" என்று சொல்லிக் கொண்டான். மணி ஆறு. நமாஸ் படிக்கும் நேரம். அவன் சட்டையை உள்ளே கொடுப்பதில் என்ன லாபம் என்று எண்ணினானோ, என்னவோ? அப்படியே சப்தம் செய்யாமல் படி இறங் கினான். வீட்டின் பக்கத்து வழியாகக் கொல்லைப்புறம் சென்றான். முகத்தையும் தலையையும் கையாலேயே துடைத்து விட்டுக்கொண்டான். துணியை விரித்துப் போட்டுத் தொழ ஆரம்பித்தான்.

* * *

அவன் அல்லாவை என்ன வேண்டினான், எவ்வளவு வேண்டினான்? என்று அவன்கூட அறிய மாட்டான். அல்லாதான் அறிய வேண்டும்.

நமாஸ் முடிந்தது. அவனுக்கு என்ன தோன்றிற்றோ? தான் செய்த பிசகை அல்லா மன்னித்து விட்டார் என்று எண்ணி னானோ என்னவோ? சட்டையுடன் மள மள என்று உள்ளே வந்தான்.

ராமசாமி அய்யர் பாய்ந்து ஓடி வந்தார். ஆசையால் கையில் வாங்கினார். ஆனால் அடுத்த நிமிஷம் தலையைக் கீழேபோட்டார். கண்ணீர்த்துளிகள் பல பல என்று உதிர்ந் தன. ஸையத் புரிந்து கொண்டான். "அட பாவி, இப்பொழுது கொண்டுவந்து என்ன லாபம்?" என்று அவர் உதடுகள் முணு முணுத்ததை அவன் நன்றாய்க் கேட்டான்.

"அம்மா! என்சட்டை!" என்று சொன் னாள் மீனு "அய்யோ அந்தப் பாவி இன்னம் தச்சுத் தரலியேடா கண்ணு" என்று அலறினாள் தாய்,

"யார் சொன்னா? சையத்துதான் அதோ தைத்துக் கொண்டு வந்திருக்கிறானே" என்று சொன்னாள் குழந்தை.

தாய் என்ன கண்டாள்? "ஐயோ பேத்த றதே குழந்தை" என்று ஓலமிட்டாள்.

உள்ளே சென்ற டாக்டர் குழந்தை முகத்தைப் பார்த்து "அம்மா பயப்படாதீர் கள், குழந்தை பிழைத்து விட்டாள்" என்றார். அவர் முகத்தில் ஜயக்குறி பிரதி பலித்தது.

குழந்தையும் "ஆமாம், அம்மா! சையத்தி னாலே தானே அம்மா நான் புழைச்சேன்" என்று நலிந்த குரலில் சொல்லிற்று.

ஆச்சரியத்தினால் ஒன்றும் தெரியாது திகைத்த ராமசாமி அய்யர், "இதோ இருக்கு சட்டை. கொண்டு வந்துவிட் டான் ஸையத்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடிவந்தார். குழந்தை சொன்னதைக் கேட்டதும் அவர் மனம் அழுந்திற்று.

சட்டையை மனைவி கையில் கொடுத்துவிட்டு வாசற்பக்கம் ஓடினுர் அய்யர்.

ஸையத் கொஞ்ச தூரம் போய்விட்டான். அய்யர் ஆர்வத்தால் தழுதழுத்த குரலில் ''ஸையத், ஓ ஸையத்! வா அப்பா; கூலியை யாவது வாங்கிக்கிட்டு போ'' என்று கத்தினுர்.

''கூலிவாண்டாங்க. அல்லா புண்ணியத்திலே குளந்தை புளேச்சதே போதுங்க'' என்று சொல்லிக் கொண்டே போய்க் கொண்டிருந்தான்.

அய்யர் அப்படியே அசந்து நின்ருர்.

உள்ளே தாயார் ''ஐயா டாக்டர்! நீங்கள்தான் என் குழந்தையைக் காப்பாத்தினீர்கள்'' என்று சொல்லியது அவர் காதில் விழுந்தது.

விமானக் குறிப்புகள்

எஸ். ஆர். பாலசுப்ரமணியன்

ஆகாய விமானத்தைப்பற்றிப் பொதுவான சில விஷயங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். தேசம் முழுவதிலும், ஒருபட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்திற்கு ஆகாய விமானத்தில் ஜனங்கள் செல்வதற்கு வசதி ஏற்படப்போகிறது. ஆகையால், கீழே தரப்பட்டிருக்கும் விபரங்கள் சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாக இருக்கும்.

ரயில், கப்பல் முதலியவை பூமியில் பளுவை இழுத்துச் செல்கின்றன; தூக்கிச் செல்லவில்லை. ஆனால் ஆகாயவிமானத்திற்கோ, ஆகாயத்தில் மிதப்பதற்குள்ள சக்தியும் பளுவைத் தூக்குவதற்குள்ள சக்தியும் வேண்டும். ஒவ்வொரு பத்து ராத்தலையும் தூக்கிக்கொண்டு காற்றில் மிதப்பதற்கு, ஆகாயவிமானங்களுக்கு ஒரு குதிரைக்குள்ள சக்தி வேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ரயில்வண்டிக்கு ஒரு குதிரையின் சக்தியில் நாற்பதில் ஒரு பாகமும், கப்பல்களுக்கு அறுநூற்றில் ஒரு பாகமும் இருந்தால் போதுமாம்.

பம்பாயிலிருந்து, மதராஸிற்கு ஆகாய விமானத்திற்குக் கட்டணம் ரூபாய் 135. ரயிலில் பிரயாணம் செய்வதாயிருந்தால் முதல் வகுப்பிற்கு ரூபாய் 95-ம் மூன்றாம் வகுப்பிற்கு ரூபாய் 20-ம் கட்டணம். விமானத்தின்மூலம் சென்றால் 643-மைல்கள் பிரயாணம் செய்திருப்போம். ரயிலில் சென்றால் 794-மைல்கள் பிரயாணம் செய்யவேண்டும். இதன்படி ஒரு மைலுக்கு விமானப்பிரயாணத்திற்கு 0-3-6 அணுவும், ரயிலில் முதல் வகுப்புப்பிரயாணத்திற்கு ஒரு அணு பதினொரு தம்பிடியும், மூன்றாவது வகுப்புப் பிரயாணத்திற்கு ஐந்து தம்பிடியும் ஆகிறது. விமானத்தில் நெருக்கடிக்கு இடமில்லை. நான்கு மணி நேரத்தில் மதராஸ் போய்ச் சேர்ந்துவிடலாம். ரயிலில் இடி, குத்து, உதை இவைகளை வாங்கிக்கொண்டு முப்பதுமணி நேரம் உட்கார்ந்திருக்கவேண்டும்.

ஆபத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் விமானச் சட்டங்கள் திருப்தியளிக்கக் கூடியனவே. விமானங்கள் இறங்குவதற்கு வேண்டிய வசதிகள், ஆகாயத்தில் பறக்கும்பொழுது அனுஷ்டிக்க வேண்டிய விதிகள், விமானத்தைப் பராமரிக்க வேண்டியதில் ஏற்படுத்தியிருக்கும் முன்னெச்செரிக்கையான ஏற்பாடுகள், இவைகள் யாரையும் திருப்தி செய்யக் கூடியவையே. ஒலிபெருக்கும் கருவிகள் மூலம் வீமானம் உயரப் பறப்பதையும் இறங்குவதையும் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். இரவில் விமான நிலையத்தில் இறங்கும் பாதை தெரிவதற்காக வர்ண விளக்குகள் அமைத்திருக்கிறார்கள். ஆகாயத்தில் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் இருக்க, ஒரு குறிப்பிட்ட பாதையிலிருந்து எவ்வளவு தூரம் இடதுபுறமோ, வலதுபுறமோ விலகிச் செல்லவேண்டுமென்று விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். விமானங்கள் பறக்குமுன் ஒவ்வொரு தடவையும் பறப்பதற்கு லாயக்குள்ளனவாஎன்று வெகு ஜாக்ரதையாகப் பரீக்ஷை செய்த பிறகே பறக்கமுடியும்.

சர்க்காருக்கு எல்லாவிதமான போக்குவரத்து சாதனங்களிலும் சிரத்தையுண்டு. யுத்த காலங்களில் ரயில், ஆகாய விமானம், கப்பல் இவைகள் உபயோகமாக இருக்கின்றன என்கிற காரணமன்றி, வியாபாரம், ஜனங்களின் பண்பு இவைகள் இந்தச் சாதனங்களால் உருவகப்படுத்தப் படுகின்றன. ரயில் விபத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சர்க்கார் கை கட்டிக்கொண்டு சும்மா இருந்துவிட முடியாது. இவைகளை ஓட்டும் கம்பெனிகளின் லாப நஷ்டங்களில் சர்க்காருக்கு அக்கரையுண்டு. ஆரம்பகாலத்தில் இந்தக் கம்பெனிகளுக்கு ஏற்படுகிற நஷ்டத்தை எல்லாத் தேச சர்க்கார்களும் ஈடு செய்திருக்கிறார்கள். 1936-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் "இம்பீரியல் ஏர்வேஸ்" என்னும் கம்பெனிக்கு ரூபாய் 50,85,631 மான்யமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கம்பெனிக்கு மொத்தச் செலவில் நூற்றுக்கு எழுபத்தாறு ரூபாய் தான் வரும்படி கிடைத்ததாம். அதே மாதிரி "ஏர் பிரான்ஸ்" எனனும் கம்பெனிக்கு நூற்றுக்கு முப்பதுரூபாய்தான் வரும்படியாம். பிரஞ்சு கவர்மெண்டார் இந்தக் கம்பெனிக்கு அதே வருஷத்தில் (1936) ரூபாய் 1,66,53,001 மான்யமாகக் கொடுத்திருக்கிறார்கள். நமது தேசத்தில் இப்

பொழுது புதிதாக ஏற்படும் ஒவ்வொரு கம்பெனிக்கும் சர்க்கார் இவ்விதம் பொதுப் பணத்திலிருந்து மான்யம் கொடுக்க வேண்டியிருக்கும். ஒரு மைல் ஒன்றுக்கு ரூபாய் 2-8-0 செலவும், ரூபாய் 1-8-0 யிலிருந்து ரூபாய் 2-0-0 வரையில் வரும் படியும் வருவதுதான் நஷ்டத்திற்குக் காரணம்.

நம் தேசத்தில் 100-க்கு 95-பேருக்கு மேல் விவசாயிகள். இவர்கள் விமானத்தில் செல்லக்கூடியவர்கள் அல்ல என்றே சொல்லலாம். யாரோ சில பணக்காரர் கள்தான் இப்பொழுது இருக்கும் நிலையில் விமான வசதியை உபயோகப் படுத்திக் கொள்ளமுடியும். இவர்களுக்காக ஏன் பொதுப்பணத்திலிருந்து சர்க்கார் லக்ஷக் கணக்கில் செலவழிக்க வேண்டும்? டாக்டர் வார்னர் என்னும் அமெரிக்க ஆராய்ச்சி யாளர், யுத்தகாலத்திற்குப் பிறகு ஏற்படும் விமானசாதனங்கள் சாதாரண ஜனங் களின் செல்வம், வியாபாரம், கலைமுதலிய வைகளை விருத்தி செய்தால்தான் பிரயோ ஜனம்; தேசத்தின் கியாதியை மாத்திரம் விருத்தி செய்தால் போதாது என்று அபிப்ராயப்படுகிறார். விமானப் போக்கு வரத்தால் நம் தேசத்தில் இவ்விதமான முன்னேற்றம் ஏற்பட வெகு நாட்கள் பிடிக்கும் என்றே தோன்றுகிறது. ஆனால் பிறநாட்டினருடன் நாமும் முன்னேறியே ஆகவேண்டும். ஆகையால் சர்க்கார் விமா னம் ஓட்டும் தொழிலை ஏற்று நடத்தி, சாதா ரண ஜனங்களும் செல்லக்கூடிய அளவில் கட்டணங்களை ஏற்படுத்தலாம்.

அமெரிக்காவில் போஸ்டன் என்னும் நகரத்திற்கும் நியூயார்க் என்னும் நகரத் திற்கும் ஒரு நாளைக்கு ரயில் வண்டி 23 தடவை போய் வருகிறதாம். ஆகாய விமானம் 22 தடவைகள் போகின்றது. எக்மோருக்கும் தாம்பரத்திற்கும் இடை யில் எலக்ட்ரிக் ரயில் அடிக்கடி போய் வரவில்லையா? அதேமாதிரி ஆகாயவிமான மும் போய் வரக்கூடிய நிலை ஏற்படும். அதற்குத் தகுந்த விமானங்களும், விமான நிலயங்களும் ஏற்படுவதற்குள்ள சூசனங் கள் இருக்கின்றன. "எலிகாப்டர்ஸ்" என்னும் விமானம் இம்மாதிரியான பிரயாணத்திற்குத்தகுந்ததாக இருக்கலாம்.

இந்தியாவில் "தகோடா" என்னும் விமானம் தான் அட்டவணைப்படி (Regular Service) செல்லும் விமான சர்விஸில் உப யோகப்படுத்தப் படுகிறது. இது ஒரு தடவையில் 18 லிருந்து 21 பேர்வரை ஏற்றிச் செல்லக்கூடியது. யுத்தகாலத்தில் இந்த விமானத்தைத்தான் சாமான்களையும் யுத்த தளவாடங்களையும் ஏற்றிச்செல்ல, பிரிட்டிஷ் ராணுவத்தினரும், அமெரிக்க ராணுவத்தினரும் உபயோகப்படுத்தினர். இப்பொழுது இந்தியக் கம்பெனிகள் யுத் தத்தில் உபயோகப் படுத்தப்பட்ட இந்த விமானங்களைத்தான் வாங்கி மாற்றி யமைத்து, ஜனங்களை ஏற்றிச்செல்ல உப யோகித்து வருகின்றனர். இவ்விதம் மாற்றி யமைத்துத் தரக்கூடிய தொழிற்சாலை பங்களூரில் மாத்திரம் தான் இருக்கிறது. இந்த வேலைக்கு ரூ 85,000-த்திலிருந்து ரூ 1,00,000 வரையில் ஊதியமாக வாங்கு கின்றனர். ஆனால் இதற்கு ரூ 25,000 க்கு மேல் பிடிக்காது. இந்தத் தொழிற் சாலையில் ஏற்படும் தாமதத்தினால், விமா னங்கள் புதிதாக ஆரம்பித்திருக்கும் கம்பெனிகளுக்குக் கிடைப்பதில்லை. மற்ற எல்லாவிதத்திலும் வேலையைத் துவக்கத் தயாராக இருக்கும் பல கம்பெனிகள், மாதம் லக்ஷக்கணக்கில் வீண்செலவு செய்து கொண்டு வாளா விருக்கும்படி நேரிட்டிருக் கிறது.

பத்திரிகைகளில் இந்த "தகோடா" விமா னங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவதைப் பற்றிச் சமீபகாலத்தில் செய்திகள் பல தேசங்களிலிருந்தும் கிடைத்திருக்கின்றன. இதற்குக் காரணம் இன்னும் யாருக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் சரி யான பாகங்கள் (spare parts) கிடைக்கா ததுதான் காரணம் என்று ஊகிக்கப்படு கிறது. எந்தப் பாகம் பொருத்தப்பட வேண்டுமோ அதற்கு ஒப்பாக அதே போன்ற வேறு பாகத்தை விமான யந்திரங் களிலோ மற்றப் பாகங்களிலோ பொருத்தி விடப் படுவதால்தான் இம்மாதிரி விபரீதங் கள் ஏற்படுகின்றனவாம்.

"தகோடா" விமானம் செய்பவர்கள் இப் பொழுது உற்பத்தி செய்வதை நிறுத்திவிட் டார்களாம். ஆகையால் அதனுடைய பாகங்கள் செய்வதையும் நிறுத்திவிடுவார் கள் என்று எதிர்பார்க்கலாம். இந்நிலையில் இந்த விமானத்தை நம்பி வேலை துவக்கி யிருக்கும் நம்மவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மெண்ட்
தயாரிப்பு
கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றூர்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)	...	ரூ 4

(வி. பி. அணு 12 கூட)

: தயாரிப்பவர்கள் :

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

(1) HARRY & SONS, 93, China Bazaar Road, Madras.
(2) RAGHAVAN & Co., Sri Narasimharaja Road, Bangalore City.
(3) Miss D. D. PANDE, Harinivas, Kingsway, Dadar, Bombay.
(4) J. TIRATH & Co., Mahatma Gandhi Road, Karachi.
(5) NATHAM & Co., Mattancheri, Cochin.
(6) L. M. MOOKERJEE & Sons Ltd., 167, Dharmatola Street, Calcutta.

குழந்தையின் கேள்வி

நா. கி. நாகராஜன்

நேற்று ஒரு குழந்தை கேட்ட கேள்வி ஒரு விநாடி என்னைத் திகைக்க வைத்துவிட்டது. "மாமா, நாம் ஏன் சாப்பிடவேண்டும்?" என்று அது கேட்டது. "போடா அவரைத் தொந்தரவு செய்யாதே" என அதன் தகப்பனார் அதை விரட்டிவிட்டார். அப் புத்திசாலிக் குழந்தையின் தகப்பனாருக்கு இக்கேள்விக்கு விடை தெரியாது. அதனால் எனக்கும் அது தெரிந்திராது என எண்ணியே அவர் அவ்வாறு செய்திருக்கவேண்டும்.

குழந்தை தன் கேள்வியை மறந்திருக்கலாம். ஆனால் அதன் விடையை மட்டும் நாம் ஒவ்வொருவரும் அறிந்துதான் ஆகவேண்டும். நம் உடலின் அவயவங்கள் எப்போதும் வேலை செய்த வண்ணமே உள்ளன. அதனால் அவை தேய்ந்து போகின்றன. இளமையில் அவை வளருகின்றன. அவயவங்கள் வளரவும், இயங்கவும், அவை தேய்ந்துபோனால் மீண்டும் செப்பனாகவும் சக்தி தேவை. இதை நாம் உணவிலிருந்து பெறுகிறோம்.

உணவில் உள்ள சக்தியெல்லாம் சூரியனிடமிருந்து கிடைத்ததுதான். தாவரங்கள் கதிரொளியைப் பெற்று அதன் சக்தியைத் தம் இலைகளிலும், தண்டு வேர்களிலும் சேமித்து வைக்கின்றன. இவற்றைத் தின்று வாழும் மனிதரும் விலங்குகளும் சக்தியைப் பெறுகிறார்கள். கதிரவன் இன்றி உலகில் உயிர்கள் இருக்க முடியாது என்பதை நம் முன்னோர் அறிந்தே, அவனைக் கடவுளாக வழிபட்டனர்போலும்.

நிற்க, உணவு வகைகளுள் கொழுப்புகளில் தான் சக்தி அதிகமாகப் பொதிந்து கிடக்கிறது. எண்ணெய், நெய் முதலிய கொழுப்புகள், சர்க்கரை முதலிய இனிப்பு வகைகளைப்போல் சுமார் இரண்டரை மடங்கு சக்தியை அளிக்கவல்லன. ஆகையால் கொழுப்புகள் நம் உணவில் முதன்மையான பகுதியாக இருத்தலவசியம்.

ஆனால், நம்நாட்டில், பசிப்பிணி தலைவிரித்தாடும் இந்நாளில் நெய்யையும், எண்ணெயையும் எளியவர்கள் கண்ணால் காண்பதும் அரிதாய்விட்டது. நகரங்களிலோ, பாலும் பாலிலிருந்து பெறும் பொருள்களும், செல்வவந்தரேயன்றிப் பிறர் வாங்க முடியாத விலைக்கு விற்று வருகின்றன. ஆகையால் எளியவர்கள் பயன்படுத்தும் கொழுப்பு எண்ணெய் ஒன்றே. ஆனால் எண்ணெயை அவ்வாறே பயன்படுத்துவதில் சில குறைகளுண்டு. அது வெகு விரைவில் கெட்டுச் சிக்குநாற்றம் எடுத்துவிடுகிறது. மேலும் எண்ணெயில் செய்த பண்டங்களின் சுவையும் சிலருக்குப் பிடிப்பதில்லை.

ஆனால் தற்காலத்தில் எண்ணெய்களிலிருந்து எடுக்கப்படும் தாவர நெய்யில் இக் குறைகள் இல்லை. இந் நெய் வனஸ்பதி என்றே பொதுவாய் அழைக்கப்படுகிறது. இதைச் செய்யும் தொழிற்சாலையொன்று சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் இருந்து வருகின்றது. எண்ணெய் வித்துக்கள் அதிகமாக விளையும் நம் நாட்டின் பல இடங்களிலும் இத்தகைய தொழிற்சாலைகளை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் தீர்மானித்து, பல கம்பெனிகளுக்குப் பொருளுதவியும் மற்ற உதவிகளையும் அளிக்க முன் வந்துள்ளது. அதன் பயனாய் நாட்டின் பல பகுதிகளில் வனஸ்பதி தொழிற்சாலைகள் ஏற்பட்டு, ஏழை எளியவரும் இதை வாங்கியுபயோகிக்குமாறு குறைந்த விலைக்கு இந் நெய் விற்கப்படலாம். ஏனெனில், நம் நாட்டில் விளையும் எண்ணெய் வித்துக்களில் பெரும்பான்மையானவை ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தன. அங்கு அவை வேறு உருவங்கள் பெற்று ஒன்றுக்கு நான்கு விலையுடன் நமக்கே திரும்பி வந்தன. ஆனால் நம்நாட்டில் சவர்க்காரத் தொழில் ஏற்பட்ட பின்னர் எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. இனி வனஸ்பதி

தொழிலும் ஏற்பட்டால், வித்துக்கள் இன்னும் அதிகமாகப் பயன்பட வழியுண்டு. கதிரவன் நமக்கு உவந்து அளிக்கும் சக்தியை வேற்றுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு நாம் உடல் மெலிந்து வாழவேண்டாம்.

அதிலும் தமிழ்நாட்டில் பருத்தி விளையும் பகுதிகளில் ஏராளமான பருத்திக் கொட்டை வீணாகிறது. மாடுகளுக்குத் தீனியென்பதைத் தவிர தற்சமயம் இதற்கு வேறொரு பயனும் இல்லை. ஆனால் பருத்திக்கொட்டையைச் செக்கிலிட்டு ஆட்டினால் நல்ல எண்ணெயைப் பெறலாம். கொட்டையில் கொழுப்பைத் தவிர பிசித வகைகளும் (Proteins) உண்டு. பிசிதங்களே உடல் வளர்ச்சிக்குக் காரணமான உணவுப் பொருள்கள். பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெயை நீக்கிய பின் உள்ள பிண்ணாக்கில் இவை உள்ளன. ஆகையால் இப் பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீனியாக அளித்தாலும், அதன் சத்து குறைவதில்லை. சென்ற யுத்தத்தின் போது அமெரிக்காவில் நன்றாகப் பொடித்த இப் பிண்ணாக்கை ரொட்டிமாவுடன் கலந்து பயன்படுத்தினார்கள். இதனால் ரொட்டியின் சுவை சிறிதும் கெடாததோடு கூட, அதன் உணவுச் சத்தும் மிக அதிகரித்தது. பருத்தி விளையும் நாடுகளில் முதன்மையான அமெரிக்காவிலிருந்து ஒரு காலத்தில் ஏராளமான பருத்திக்கொட்டை ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தது. ஆனால் இப்போதோ இது பல வகைகளில் நாட்டிலேயே பயன்படுகிறது. உணவுப் பொருள்களுக்காக வேற்று நாடுகளை எதிர்பார்த்து நிற்கும் நம் நாட்டிலும் இத்தகைய புது வகை உணவு வகைகளைப் பரப்பப் போதுமான ஆராய்ச்சியும், இவற்றின் நன்மைகளைப் பொதுமக்கள் அறியுமாறு தகுந்த பிரசாரமும் தேவை. நாட்டு நலனையே குறிக்கோளாகக் கொண்ட நம் மந்திரிகள் இதுபோன்ற விஷயங்களையும் கவனித்து, உணவுப் பிரச்னையில் தமக்கு உதவி செய்ய, வேதி நூலறிஞரின் ஒத்துழைப்பைக் கோரவேண்டியதவசியம்.

இது நிற்க, பருத்திக்கொட்டையிலிருந்து கிடைக்கும் எண்ணெய் ஒருவிதச் செந்நிறமும், நாற்றமும் கொண்டதாகவிருக்கும். இரசாயன முறைகளால் நிறத்தை நீக்கி அதன் மணத்தையும் மாற்றிச் சுத்தப்படுத்தலாம். இப்போது இது மஞ்சள நிறங்கொண்டு, உணவுக்குகந்த ஒலிவ எண்ணெய் (Olive Oil) போலாய்விடும். மேனாடுகளில் இது ஒலிவ எண்ணெய்க்குப் பதில் உணவாகப் பயன்படுகிறது.

ஆனால் சுத்தப்படுத்திய பருத்திவிதை எண்ணெயையே வனஸ்பதியாக மாற்றிவிட்டால் இது இன்னும் விரும்பத் தக்கதாய்விடும். இது எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை யறியுமுன், பொதுவாய் கொழுப்புகளின் தன்மைகளை நாம் சிறிது அறிதலவசியம். கொழுப்புகள் மூன்று தனிப் பொருள்களால் ஆனவை. இவை தீயகம் (Oxygen), நீரகம் (Hydrogen), கரியம் (Carbon) என்பன. ஆனால் இவை பல கொழுப்புகளில் பல வேறு அளவுகளில் உள்ளன. இதற்குத் தகுந்தவாறு கொழுப்புகளின் தன்மையும் மாறுபடும். உதாரணமாக வெண்ணெய், நெய் முதலிய பொருள்கள் கட்டிப் பொருள்கள் (Solids). எண்ணெய்கள் நீர்மங்கள் (Liquids). ஒரு கொழுப்பில் நீரகத்தின் விகிதம் சற்றுக் குறைந்திருந்தால் அது நீர்மயமாகவிருக்கும். நீரகத்தின் விகிதம் அதிகமாயின் கொழுப்பும் கட்டிப் பொருளாகவிருக்கும். ஆதலால் இவ்விருவகைக் கொழுப்பு வகைகளை முறையே "மிருதுவான கொழுப்புகள்" (Soft Fats), "கடினமான கொழுப்புகள்" (Hard Fats) என அழைக்கின்றனர்.

நீரகம் குறைவாகவுள்ள கொழுப்புகள் சமயம் வாய்த்தால் நீரகத்தை யேற்றுக் கடினமாகின்றன. நீரகம் கிடைக்காமலிருந்தால் வேறு பொருள்களையும் இவை ஏற்கலாம். ஆளிவிதை எண்ணெய் (Linseed Oil) சாயத்தில் பயன்படுவது எல்லோரும் அறிந்ததே. சாயம் பூசிய சிறிது நேரத்திற்குள் அது உலர்ந்து கெட்டியாகிவிடுகிறது. இது மிருதுவான கொழுப்பு வகையைச் சேர்ந்தது. ஆகையால், இது பூசப்பட்டதும், காற்றிலுள்ள தீயக வாயுவைப் பெற்றுக் கடினமாய் விடுகிறது. இதையே சாயம் உலர்ந்து போகிறது என்கிறோம். இவ்வாறு வேறு பொருள்களை ஏற்கும் தன்மைகொண்ட கொழுப்புகளைத் "தெவிட்டாத கொழுப்புகள்" (Unsaturated Fats) என்றும்,

நீரகத்தை முழுதும் ஏற்று மேலும் ஏற்க முடியாத கொழுப்புகளைத் "தெவிட்டிய கொழுப்புகள் (Saturated Fats) எனவும் கூறுவார். எண்ணெய்கள் தெவிட்டாத கொழுப்புகள். அதனால் தான் அவை காற்றுப்பட சிலநாள் வைத்திருந்தால், காற்றிலுள்ள தியகத்தைப்பெற்று, கெட்டுப்போய் நாற்றமடிக்கத் தொடங்குகின்றன, அதனால் தான் அவைகளுக்கு நீரேகமேற்றிக் கடினமாக்கினால் அவை கெடுவதில்லை.

ஆகையால் தெவிட்டாத கொழுப்புகளான எண்ணெய்களை, நீரகத்தையேற்குமாறு செய்து நீரகமேற்றினால் அவை நெய்யையொத்த தெவிட்டிய கொழுப்புகளாக மாறும். இதைச் செய்யும் முறையை, கொழுப்புகளுக்கு "நீரகமேற்றல்" (Hydrogeneation) என்றோ கடினமாக்கல் (Hardening) என்றோ கூறுவர். குறிப்பிட்ட ஒரு சூட்டில் எண்ணெயை இருத்தி அதனுள் நீரகவாயுவைச் செலுத்தினால் அது நீரகத்தையேற்றுக் கடினமாகிறது. ஆனால் இதைச் செய்ய ஒரு தூண்டுகோல் வேண்டியிருக்கிறது, இத்தூண்டுகோலை நுகைப்பான் (Catalyst) எனக் கூறுவார். இப்பொருளை வாழ்க்கையில் தரகர்களுக்கு ஒப்பிடலாம். தரகர்களின் உதவியால் நாமாகவே செய்ய இயலாத பலகாரியங்களைச் செய்து முடிக்கலாம். ஆனால் இக்காரியங்களின் விளைவு தரகர்களைப் பாதிக்கிறதோ எனில் அதுதான் இல்லை. இதேபோல் நுகைப்பான் என்னும் 'இரசாயனத் தரகனும்', சிறு அளவில் இருந்துகொண்டு பல இரசாயன விளைவுகளை நிகழ்விக்கும். ஆனால் இவ்வித விளைவுகளால் நுகைப்பான் சிறிதும் மாறுபடாமல் இருக்கும். எண்ணெய்களுக்கு நீரகமேற்ற நன்றாகப் பொடித்த நிகலம் (Rickel) நுகைப்பானாகப் பயன்படுகிறது.

நுகைப்பான் சரியாகப் பயன்பட அது மிக நுண்ணிய தூளாக இருத்தல் அவசியம். இதைத் தயாரிக்க ஒரு இரசாயன முறை பயன் படுகிறது. முதலில் நிகலம், செம்பு இவ்விரு உலோகங்களின் கரிசகைகள் (Formates) என்னும் உப்புக்களை யெடுத்துக்கொண்டு, நீரகத்தின் உதவியால் அவற்றை மறுபடி உலோகங்களாக மாற்றுகிறார்கள். இப்போது இவை நுண்ணிய பொடியாக விருக்கும். எண்ணெய் பெரிய தொட்டிகளில் எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன் மேற்கூறிய உலோகங்களின் பொடியைக் கலந்து விடுவார்கள். அமுக்கம் நிறைந்த நீராவியினுதவியால் எண்ணெய் 120°—176° வரை காய்ச்சப்படும். இச் சூட்டில் எண்ணெயை இருத்தி, தொட்டிகளின் கீழிருந்து நீரகம் எண்ணெய்க்குள் செலுத்தப்படும். இப்போது எண்ணெயை விடாமல் துழாவிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது நீரகம் எண்ணெயுடன் கலந்து அதைச் சிறிது சிறிதாகக் கடினமாக்கிவிடும். நீரகமேற்றல் எவ்வளவில் உள்ளது என்பதையறிய அடிக்கடி எண்ணெய் பரிசோதிக்கப்பட்டு அதன் நிறம், மணம் முதலியவற்றிலிருந்தும், வேறு இரசாயன விளைவுகளைக்கொண்டும், சரியான அளவுக்கு நீரகம் அனுப்பப்பெறும். எண்ணெய் சரியானபக்குவத்தையடைந்ததும் நீரகம் அனுப்புவது நிறுத்தப்படும். நீரகமேற்கும்போது அதிகமான வெப்பம் தோன்றி எண்ணெய் மிதமிஞ்சிக் காய்ந்துபோகலாம். இதைத் தடுக்க, தொட்டிகளின் வழியே குழல்களில் குளிர்ந்த தண்ணீர் பாய்ச்சப்படும்.

இம்முறைக்குத் தேவையான நீரகத்தைத் தண்ணீரிலிருந்து பெறலாம். தண்ணீர் நீரகம், தியகம் என்ற இருவாயுக்களாலானது. ஆகையால் அதன் வழியே மின்சாரத்தைப் பாய்ச்சினால் அதை இவ்விரு வாயுக்களாகப் பிரிக்கலாம். இதில் கிடைக்கும் நீரகத்தையே, எண்ணெய்களுக்கு நீரகமேற்ற உபயோகிக்கின்றனர்.

இவ்வாறு நீரகமேறிய எண்ணெயில் ஒருவித வாசனை இருக்கும். இதை நீக்க அதை நீராவியினால் வாலை வடித்துக் குளிர்விப்பார்கள். பின்னர் இதை ஒருவித மண்ணுடன் கலந்து, வடிகட்டிப் பெரும் சேமிப்புத் தொட்டிகளில் குளிர்வித்தால் அது இறுகி நெய்யைப் போன்றாகிவிடும். வனஸ்பதியில் சிறிதளவு நிகலம் கரைந்திருக்கலாம். ஆனால் அது உடலுக்குத் தீமையைத் தராது. இச் செய்முறையில் செலவாகும் நீரகத்தின் அளவு மிகக் குறைவு. நுகைப்பானான நிகலத்தையோ பன்முறை பயன்படுத்தலாம்.

ஆகையால் இதைச் செய்யத் தேவையான செலவு மிகக் குறைவு.

கடலை எண்ணெய் தமிழ்நாட்டில் மிக அதிகம். இதையும், நல்லெண்ணெயையும் வனஸ்பதியாக மாற்றி இவை நம்நாட்டில் அதிகமாகப் பயன்படுமாறு செய்ய வசதியுண்டு. இதைத் தவிர, மீனெண்ணெய் நம் நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் சிறிதுகாலமாக ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இதன் நாற்றத்தினால் இதை அவ்வளவாகப் பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் இதைச் சுத்தப்படுத்தி நீரகமேற்றினால் இது பலவாறு பயன்படும். இதைச் சவர்க்காரம், மெழுகுவத்தி முதலியன செய்யப் பயன்படுத்தலாம். இதனால் மீன் பிடிக்கும் தொழிலே முன்னேறலாம்.

நம் நாட்டில் மலிந்துள்ள தாவர எண்ணெய்களையும், மிருகக் கொழுப்புகளையும் சரியானவாறு பயன்படுத்த இம்முறை இன்றியமையாதது என்பது திண்ணம். நீரகமேறிய கொழுப்புகள் நெய்யைவிடச் சிறந்தன எனக்கூறல் உண்மையல்ல. நெய்யிலுள்ள உயிர்ச் சத்துக்கள் (Vitamins) வனஸ்பதியில் இல்லை. ஆகையால் இதை நெய்க்குப் போலியாக வியாபாரிகள் விற்காது அரசாங்கம் தடைசெய்ய வேண்டும். ஆனால் கெட்ட நெய்யையும், பழைய, அழுக்கு நிறைந்த எண்ணெயையும்விட இது சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஆகையால் இதன் நன்மை தீமைகளை மக்கள் நன்றாக உணர்ந்து இதைப்பயன்படுத்தப் போதிய பிரசாரம் செய்யப்பட வேண்டும்.

நீரகமேற்றிய எண்ணெய்கள் சவர்க்காரத் தொழிலிலும். தோல் பதனிடுந் தொழிலிலும், வழுப்புப் பொருள்களாகவும் (Lubricants) பயன்படும். இவ்வெண்ணெய்களிலிருந்து சாராயம் போன்ற பொருள்கள் செய்யப்பட்டு அவை, நெசவுத் தொழிலிலும், பற்பசை, கூந்தல் தைலம் முதலியன செய்யவும் பயன்படுத்தப்படலாம். ஆகையால் நாட்டில் நீரகமேற்றுந் தொழிலினால் நன்மை விளையுமே தவிர எப்போதும் தீமை விளையாது என்பது உறுதி.

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம், அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு — இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளி விபரங்கள்:-

வருஷம்	புதியபாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடை முதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 41 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 87 லக்ஷத்திற்குமேல்

1945 புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

போனஸ் விகிதம் :-

ஆயுள் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 10

எண்டௌமெண்ட் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 8

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:- 4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

198079
சென்னை-600 008

"சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

'சாரி'

'ரேஷன் ஆபீசர்' குமாரசாமி வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே அன்று வீட்டிற்குத் திரும்பிய பொழுது, கொல்லை வழியாகப் பிச்சையம்மா வெளியே செல்வதைக் கண்டான்.

அவள் அவ்வூரில் பேர்போன வம்புக்காரி; விபசாரவிடுதி சம்பந்தமான ஒரு வழக்கில் சிக்கிக்கொண்டு, முன்பு ஒரு முறை தண்டிக்கப்பட்டவள். எனவே தனதிளம் மனைவியை இவள் விஷயமாக, குமாரசாமி எச்சரித்திருந்தான். பிச்சையின் சகவாசம் எவ்விதத்திலும் தகுதியற்றதென்பது அவனுடைய அபிப்ராயம்.

எதிர்பாராமல் இன்று அப்பேர்ப்பட்டவளைத் தன் வீட்டிலேயே கண்டதும் அவனுக்குக் கோபம் பிறந்தது. "வேலூ......" என்று கடுமையான குரலில் தன் மனைவியை அழைத்தபடி உள்ளே நுழைந்தான்.

சமையலறையில் அவசர அவசரமாக வேலைசெய்து கொண்டிருந்த வேலம்மா, "ஏன் அத்தான், இதோ வருகிறேன்" என்று குரல் கொடுத்தாள்.

குமாரசாமி மேற்சட்டையைக் கழற்றிக் கொண்டே உள்பக்கம் காலைவைத்தான். அதை எதிர்பார்த்தவள்போல் வேலம்மா பலகாரமும், காப்பியும் எடுத்துக்கொண்டு வெளியே வந்து, பலகையில் வைத்துவிட்டு அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

பாதம் ஹல்வாவும், மைசூர்போண்டாவும் தங்களை ருசிபார்க்கும்படி அவனைக்கூவி அழைத்தன; டம்ளரில் பொங்கப் பொங்க இருந்த காப்பியோ, 'ஜம்' மென்று தன் மணத்தை அங்கெல்லாம் பரப்பிற்று.

குமாரசாமி மனைவியைப் பார்த்தான். அடுப்படியில் நின்ற சிரமத்தினால் வாடியிருந்த அவள் முகம் அழகுடனேயே விளங்கிற்று, கட்டுப்படாமல் முன் நெற்றியில் புரளும் அந்தச் சுருட்டைமயிர்கூட இன்று வியர்வையில் நனைந்துபோய், படிமானமாய்க் காட்சிதந்தது.

"எல்லாம் தயார் செய்துவிட்டேன், அத்தான்! ஸ்டேஷனிலிருந்து அவர்களை அழைத்துவருமுன் சமையல் முழுவதுமே முடிந்துவிடும்." என்று சொல்லி ஒரு ஹல்வா துண்டை அவன் வாயில் திணித்தாள். 'கல கல' வென்ற அவள் சிரிப்பின் ஒலியில் குமாரசாமி சுய நினைவு பெற்றான்.

"இவளிடம் இந்தச் சமயத்தில் என் அதிருப்தியை எப்படிக் காண்பிப்பது?" என்று நினைத்தான்.

சீச்சி, பாவம்! இன்று மாமனின் கடிதம் வந்தபொழுது இந்த விருந்து செய்ய அவள் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளவில்லை? "வேலூ, மாமனும் அவருடைய நான்கு நண்பர்களும் இன்று மாலை நம்ம வீட்டிற்கு வருகிறார்களாம். காப்பி, டிபன், இரவு விருந்து எல்லாம் ஜமாய்த்துவிட வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்று சொல்லி அவள் கன்னத்தை விளையாட்டாய் கிள்ளிய சமயம் அவள் எவ்வளவு உத்சாகத்துடன் சம்மதித்தாள்!

ஆனால் விருந்தாளிகள் மறுநாள் பகற்போஜனம் முடிந்த பிறகே ஊருக்குத் திரும்புவார்களென்றறிந்ததும் அவளே மலைத்துப்போனாள். எல்லாம் இந்தஅரிசித் திண்டாட்டம்தான், காரணம்.

இந்தக்கவலையே இல்லாதமாதிரி குமாரசாமி, "வேலூ, நாளைக்காலை பலகாரத்திற்கு இட்டிலி செய்துவிடு; பகல் சாப்பாட்டிற்குச் சர்க்கரைப் பொங்கலும், சித்ரான்ன வகைகளும் செய்து, நல்ல அவியல் பொரியல் எல்லாம் செய்து விட்டால் மாமா பூரித்துப்போய் விடுவார்......" என்று அடுக்கிக் கொண்டே போனான்.

வேலம்மாவுக்குப் பொறுக்கவில்லை "ஐயோ, அத்தான், இதெல்லாம் செய்ய அரிசி வேண்டுமே? வீட்டில் அரைப்படி தானே இருக்கிறது. நாலைந்து விருந்தினர்க்கு இரண்டு மூன்று வேளை சமைத்துப் போட எப்படிப்போதும்?" என்று அவள் சொல்ல ஆரம்பிப்பதற்குள், குமாரசாமி கோபத்தோடு அவளை அடக்கினான்.

"பொறு பொறு, வேலு! உன் கையால் பண்ணிப் போடும் விருந்தை உண்டு உங்கள் சிற்றப்பா என்ன செய்வார் தெரியுமா? அந்தநாற்பது செண்டு நிலத்தை உனக்கு மஞ்சள் காணியாக இங்கேயே எழுதித்தந்து விடுவார்; பெரியவரைக் காக்காய் பிடிக்க நீ என்னவோ கசப்பாக இருப்பதுபோல் ஆக்ஷேபனை செய்கிறாயே?" என்று அவளை உற்று நோக்கினான்.

வேலம்மாவுக்குச் சந்தோஷம் பிறந்தது.

அரிசியில்லை யென்கிற கவலையைக் கண நேரம் மறந்துபோய், வெகுநாளாக அத்தான் ஆசைப்படும் நிலம் நமக்குக் கிடைத்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மனக்கோட்டை கட்டினாள்.

இதுதான் சமயமென்று குமாரசாமியும் பரக்கப் பரக்க ஆபீசுக்கு நழுவிவிட்டான். இன்னும் இங்கே தாமதித்தால் அரிசியில்லாதபிரச்னையை மனைவி மீண்டும் கிளப்புவாளென்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதற்குப் பதில் கூறவோ அவனால் முடியாது. வெளியே போய்விட்டால் அவள் எங்கேயாவது கடன் வாங்கி நிலைமையைச் சமாளித்துக் கொள்வாளென்கிற தைரியம் அவனுக்கிருந்தது.

வாஸ்தவமாக, முன்பு எவ்வளவே தடவை அவள் அம்மாதிரி செய்திருக்கிறாள். ஆனால், அதெல்லாம் ஒரே வேளை விருந்திற்குத்தான்.

குமாரசாமி சிலவிஷயங்களில் மிக்க கண்டிப்பான பேர்வழி. ரேஷன் ஆபீசராக அந்த உத்யோகத்தை வெகுகண்யமாய்ப் பார்த்துவந்தான். பிறர்சீட்டில் ரேஷன் வாங்குவது, ஊருக்குச்சென்ற நபர்களைத் தெரியப்படுத்தாமல் மறைப்பது, இவை போன்ற தப்பு வியவகாரங்களை அவன் சகிக்கவேமாட்டான். அவைகளைக் கண்டித்துத் தண்டிப்பதில் அவனுக்குச் சிறிதும் தயக்கம்கிடையாது. கள்ளமார்க்கெட் என்பதை அடியோடு அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான்.

இத்தகைய மனிதன் தன் வீட்டில் மாத்திரம் கண்டிப்புக் குறைவாக நடந்துகொள்வானா? புருஷனுக்கும் மனைவிக்குமாய்க் கிடைக்கும் 2¾படி அரிசிக்குள்ளாக அந்த வாரத்துச் செலவை முடித்துக் கொள்ள வேண்டுமென்பது, அவனுடைய உத்தரவு. இந்த ரீதியில் ஒழுங்காய்க் குடித்தனம் நடத்திய பெருமை அவ்வளவும் வேலம்மாவுக்கே உரியது என்று நான் சொல்ல அவசியமில்லை.

அரிசி தட்டிப்போகும் நேரத்தில் அடுத்த வீட்டு முத்து என்கின்ற பெண்ணிடம் கடன் வாங்கி, பிறகு திருப்பித்தருவது வேலம்மாவின் வழக்கம். ஆனால் அப்படி யாசிக்கும் போதெல்லாம், முத்து இவளைக் கேலி செய்யாமல் அரிசி கொடுத்ததில்லை.

"என்னடியம்மா, வேலு! பெரிய ரேஷன் ஆபீசர் மனைவியாக இருந்துமா இவ்வளவு தரித்திரம்?" என்று குத்தலாய்க் கேட்பது இவளுக்குக் கஷ்டமாக இருக்கும். இன்று என்ன செய்வது?

வேறுவழியில்லாமல், வேலம்மா இரண்டு படி அரிசி கொடுக்குமாறு அடுத்த வீட்டில் போய் வழக்கப்படி யாசித்தாள். ஆனால் இன்று அவளுக்கு அதிர்ஷ்டமில்லை. தன்னிடம் ஒரு மணி அரிசிகூட அதிகப்படியாக இல்லையென்று முத்து பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

வேலம்மாவின் கவலை அதிகரித்தது. அரிசிகிடைக்கவில்லை யென்பதைக் கணவனிடம் தெரிவிப்போமென்றாலோ, அவர் மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புவார். அதற்குள் இட்டிலிக்கு மாவு அரைத்து வைக்கவேண்டும்; இரவு சாப்பாட்டிற்கும் பாதி ஏற்பாடுகள் முடிந்திருக்க வேண்டும்! முக்யமான பதார்த்தம் இன்றி இவை எல்லாம் எப்படி ஆகும்?

முத்துவின் வீட்டில் அச்சமயம் பிச்சையம்மா உட்கார்ந்திருந்தாள். அத்தானுக்கு அவளைப் பிடிக்காதென்பதை உணர்ந்திருந்ததால், வேலம்மா பிச்சையுடன் அதிக உறவு கொண்டாடுவதில்லை.

இன்று இவளுடைய சங்கடத்தைக் கண்டதும் அந்தக் கிழவி, "ஏம்மா வேலு, உனக்கு எவ்வளவு அரிசி வேண்டும்? சொல்லு. மாலை 5-மணிக்கு நான் கொணர்ந்து தருகிறேன்" என்று மெதுவாய்ச் சொன்னாள்.

எதிர்பாராத இந்த உதவி வேலம்மாவுக்கு மிக்க உத்சாகத்தைக் கொடுத்தது, "பாட்டி பாட்டி, நீ மகராசியாக இருக்கவேணும். எனக்கு இரண்டுபடி கொண்டுவந்துகொடு, போதும். பின்னாடி அரிசியாகவே திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவளை நயந்து கேட்டுக்கொண்டாள்.

"இந்தாம்மா, எனக்கு, பதிலுக்குப் பணம்தான் வேண்டும். அரிசி கிரிசி நீ தரவேண்டாம்; நான் இப்பொழுதே சொல்லி விடுகிறேன்" என்று கிழவி பதில் சொன்னாள்.

வேலம்மாவுக்கு இதுவும் சம்மதமாக இருந்தது. அடுத்தவாரம் கிடைக்கும் தங்களுடைய ரேஷனில் இரண்டுபடியைக் கடனுக்குத் திருப்பிவிட்டு மீண்டும் இதே மாதிரி திண்டாடுவதைவிட, ரூபாகொடுப்பதேமேல் என்று நினைத்தாள்.

இதைக் கேட்டபொழுது முத்து களுக்கென்று சிரித்ததின் காரணம் வேலம்மாவுக்குப் புரியவில்லை.

வீட்டில் செய்யக்கிடந்த அனேக வேலைகளை எண்ணிக்கொண்டு அவசரமாக அவ்விடம் விட்டுப் போகுமுன், மாலை 5-மணிக்கு அவளை எதிர்பார்ப்பதாகப் பிச்சையிடம் வற்புறுத்திவிட்டுச் சென்றாள்.

* * *

அன்றுமாலை கிழவி இரண்டுபடி அரிசியை வேலம்மாவிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்பியதும், குமாரசாமி உள்ளே நுழைவதும் ஒத்துக்கொண்டன.

அச்சமயம் அடுப்பில் உலை நீர் தளைத்துக் கொண்டிருந்தது. வேலம்மாவோ வீட்டிலிருந்த சொற்ப அரிசியை இட்டிலி மாவாக்கி வைத்துவிட்டு, ஒருவேளை கிழவி தனது வாக்குப் பிரகாரம் வராவிட்டால் என்ன செய்வதென்று தவித்துக்கொண்டிருந்தாள்.

"பாட்டி உங்களுக்கு ஆயிசு நூறு! அடே, அரிசி நல் முத்து மாதிரி இருக்கிறதே! இப்படியே களைந்து போடவேண்டியது தான்" என்று கூறி, சந்தோஷத்துடன் ஒரு ரூபாயை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

கிழவி கோபத்தைப் பார்க்க வேண்டுமே! "எண்டி பெண்ணே! என்ன இது? ரூபாய்க்கு இரண்டுபடி அரிசி எந்த நாளில் உன் அவசரத்திற்குக் கிடைக்கும்? இந்த அரிசியின் விலை ஒருபடி 1½ ரூபாய்! இஷ்டமிருந்தால் வைத்துக்கொள்ளு; கஷ்டமானால் திருப்பிக்கொடு" என்று இரைந்தாள்.

கள்ளமார்க்கெட் என்கிற சொல் வேலம்மாவின் மனதில் தைத்தது. ஏதடா வம்பாக அல்லவா இருக்கிறது?

கணவனின் கண்டிப்பும், இந்தக் கிழவியிடம் நெருங்கக் கூடாதென்று முன்பு

நான்கோ பிரிண்ட் இங்கி

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

அவர் எச்சரித்ததும் அவளைப் பிய்த்தெடுத்தன. வேலம்மா பதைத்தாள்.

அரிசியைத் திருப்பிவிட்டு. அவர் வந்ததும் கையை விரித்துவிடுவோமேயென்று ஒரு கணம் நினைத்தாள். ஆனால் மணி இப்பொழுது ஐந்தாகப் போகிறதே; அவர் வந்ததும் வராததுமாக விருந்தாளிகளை அழைக்க ரயிலடிக்குப் போவாரா, அரிசியைத் தேடிக்கொண்டு அலைவாரா? தன்னைத்தான் எவ்வளவு கோபிப்பார்? என்றும் எண்ணமிட்டாள்.

''பாட்டி, உங்களுக்குமாத்திரம் இந்த அரிசி எது?'' என்றது அவள் குரல், பலவீனமாக.

''அதெல்லாம் உனக்கென்ன கவலை? இன்னும் பத்துப்படி வேணுமானாலும் சொல்லு. இதே விலைக்கு ஒரு நொடிப் பொழுதில் கொண்டு வருகிறேன்'' என்று கிழவி பெருமையடித்துக் கொண்டாள்.

வேலம்மாவுக்குச் சகிக்கவில்லை. உலையில் நீர் கொதித்து ஆரவாரம் செய்தது. செய்யாமல் கிடந்த வேலைகளோ மண்டைக்குள் குழப்பத்தை யுண்டாக்கின. கணவன் வீடுவருமுன் இந்தக்கிழம் தொலைந்தாற் போதுமென்று நினைத்து வாய் பேசாமல் இன்னும் இரண்டு ரூபாய்களை எடுத்து அவளிடம் கொடுத்துப் போகச் சொன்னாள்.

அதே சமயம் குமாரசாமியும் உள்ளே நுழைந்தான். அவள் உடல் பதறிற்று. இருந்தாலும், பிச்சையை அவன் கவனித்து அது விஷயமாகத் தன்னைக் கேட்டாலொழிய அவனிடம் ஒன்றும் சொல்வதில்லையென்று தீர்மானித்தாள்.

குமாரசாமிக்கோ, பிச்சை வந்துபோனது பிடிக்காத விஷயமென்றாலும், அந்தச்சமயத்தில் மனைவியை வம்பு அளந்த குற்றத்திற்காகக் கோபிக்க மனம் வரவில்லை; ஆனால் பிச்சை ஒரு கள்ள மார்க்கெட் வியாபாரி என்று அவன் ஸ்வப்பனத்தில் கூட நினைக்கவில்லை!

காப்பியைப் பருகியதும், ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுவிட்டான், சிறிது தாமதித்தால் அரிசியில்லையென்கிற பிரலாபத்தை மனைவி மீண்டும் தொடங்குவாளோ என்று அவனுக்குப் பயம்.

வேலம்மா அப்பாடா வென்று ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டாள். ''நல்ல வேளை. பிச்சையை இவர் கவனிக்கவில்லை போலிருக்கிறது; சாவகாசமாக நான் இவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.'' என்று எண்ணிக் கொண்டு வேலையிற்புகுந்தாள்.

இருந்தாலும், இவ்வித சங்கடங்களை அவளே சமாளிக்க விட்டுவிடுகிற அவருடைய அழுத்தத்திற்காகச் சிறிது கோபம் கொண்டு, அவள் மனம் வருந்தினதில் ஆச்சரியமில்லை.

* * *

விருந்தினர்கள் வந்தார்கள்; விருந்தை உண்டு களித்தார்கள். வேலம்மாவின் சமயல் ருசியைக் கணக்கில்லாமல் புகழ்ந்தார்கள்.

''அடாடா! தேவாமிருதமாக இருக்கிறது; வாயில் போட்டதும் கரைகிறது.'' என்று இட்டிலியைப் புகழ்ந்து உள்ளே தள்ளினார்கள்.

தட்டுகளில் குவிந்திருந்த சித்ரான்னங்களை ஒரு நொடியில் காலிசெய்து, ஏப்பம்விட்டார்கள். விருந்துபசரணையில் அவளும் பாவம், களைத்துப் போனாள்.

குமாரசாமியோ அவர்களிடம் தன் மனைவியைச் சாமானியமாய்ப் புகழவில்லை. அவளுடைய திறமையை அவன் சிலாகித்ததினால் அவளுக்குப் பெரும் ஆறுதல் ஏற்பட்டது. தான் பட்ட சிரமமெல்லாம் வீணாகவில்லை யென்று அவள் கருதினாள்.

ஆனால் கடைசியாக, ''இல்லை மாமா, உண்மையைச் சொல்கிறேன். ரேஷன் விஷயத்தில் நான் எவ்வளவு கரார் பேர்வழி என்பதை நீங்கள் அறிவீர்கள். என் ஒழுங்குக்கு மீறி உங்கள் மகள் ஒருபொழுதும் நடந்தது கிடையாது. சில பெண்களைப் போல் அரிசி போதவில்லை யென்றெல்லாம் என்னிடம் குறை கூறியதேயில்லை. வாஸ்தவத்தில் அவள் எப்படி சமாளிக்கிறாளோ, எனக்குத்தெரியாது. அவள் ஒரு மந்திரவாதிதான். என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது?'' என்று அவன் பெருமைப்பட்டுக்கொண்டபொழுது அவள் வெட்கிப்போனாள்.

அன்று அவள் செய்திருந்த காரியம் குற்றமுள்ள அவளுடைய நெஞ்சுக்கல்லவா தெரியும்? ஆனால் அவருக்குத்தான் என்ன இவ்வளவு அகந்தை? எனக்குமட்டில் மாயமாக அரிசி வரவழைக்க முடியுமாக்கும். இவர்கள் திரும்பிப்போகட்டும்; பிறகு நடந்ததைச் சொல்லி இவரை அவமானப்படுத்துகிறேன், என்று வேலம்மா தன் மனதிற்குள் சொல்லிக்கொண்டாள். ஆனால்

அந்தப் பாழாய்ப்போன மனது ஏனோ சமாதானமடையாமல், துடித்தது!

விருந்தினர் ஊருக்குக் கிளம்பினார்கள். வேலுவின் சிற்றப்பா, வெகு நாட்களாய்க் குமாரசாமி ஆசைப்பட்டுக்கொண்டிருந்த அந்த நாற்பது செண்டு நிலத்தை அவளுக்கு ஸ்த்ரீ தனமாகச் சாஸனம் செய்துகொண்டு வந்திருந்தார்; புறப்படும் சமயத்தில் தம்பதிகளை ஆசீர்வதித்து வேலம்மாவிடம் பத்திரத்தைக் கொடுத்து விட்டுச்சென்றார்.

எல்லாம் வெற்றிகரமாக முடிந்ததில் குமாரசாமிக்கு அளவற்ற சந்தோஷம்.

* * *

அன்றிரவு வேலையை முடித்தபிறகு வேலம்மா கணவனருகில் வந்து அமர்ந்தாள். வெற்றிலை பாக்கு மென்று கொண்டிருந்த குமாரசாமிக்குப் பெருமை தாங்கவில்லை.

"வேலூ, நீஎங்கேயடி இவ்வளவு அழகாய், பதார்த்தங்கள் செய்யக் கற்றுக் கொண்டாய்?" என்று அவன் சொன்ன பொழுது மனைவியின்பால் அவனுக்குப் பெரிய அன்பும் ஆர்வமும் அச்சொற்களின் மூலம் வெளிப்பட்டன.

அவள்கரங்களைப்பற்றினான்; சில்லென்று இருந்தது! கணவனிடம் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டிய சமயம் வந்து விட்டதென்கிற உணர்ச்சியில் வேலு நடுங்கினாள்.

"என்டி வேலூ, ஏன் பயப்படுகிறாய்?" என்று குமாரசாமியின் குரல் அவள் காதில் சரியாக விழவில்லை. வெகுதூரத்தில் யாரோ பேசுவதுபோல் இருந்தது.

"ஆஹா, உண்மையைச் சொன்னதும் இவ்வளவு அன்பும் அவருக்கு என் பேரில் வெறுப்பாக அல்லவா மாறிப் போகும்?" என்று நினைத்தாள். ஆனால் கூடவே ஒரு தைரியம் பிறந்தது. "சீ, இதென்ன கோழைத்தனம்? எப்படியும் ஒரு நாள் அவருக்குத் தெரிந்துதானே ஆகவேண்டும். இப்பொழுதே சொல்லிவிடலாம்" என்று. "அத்தான்......பிச்சை......"என்று ஆரம்பித்தாள்.

குமாரசாமிக்கு விஷயம் புரிந்துவிட்டது. அதாவது புரிந்துவிட்டதாக அவள் நினைத்தாள்! "ஓஹோ, பிச்சையிடம் வம்புவளர்த்ததை நான் கண்டிக்கப்போகிறேனென்று பயப்படுகிறாள் போலிருக்கிறது. சீ, இதென்ன அவ்வளவு பெரிய குற்றம்? அவளுக்கு இன் மொழிகூறி இதோ ஒரு நொடியில் தைரியப்படுத்தி விடுகிறேன்" என்ற கருணை அவன் மனதிற் பிறந்தது. அவள் செய்த குற்றம் இதுவல்ல என்பதை அவன் கண்டானா?

"கண்ணே, வேலூ! நீ பயப்படாதே. இவ்வளவு அழகாய் நீ வேலைசெய்திருக்கும் போது, இவ்வற்ப குற்றத்திற்காக உன்னை நான் கோபிப்பேனா? போனால் போகட்டும் போ, நீ வருந்தாதே" என்று அவளை அணைத்துக் கொண்டான்.

வேலம்மாவுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. கண்களை அகலத் திறந்து நோக்கினாள். என்ன இது? அத்தானா இவ்விதம் பேசுகிறார்? கள்ளமார்க்கெட் என்கிற பேச்சை எடுத்தாலே, சுட்டுச் சாம்பலாக்கி விடுவாரே? இவரிடமா இந்தக் கனிவு? உலகமே தலைகீழாக மாறி விட்டதாக அவளுக்குத் தோன்றிற்று.

தன்னை மனப்பூர்வமாக அவர் மன்னித்து விட்டதாக எண்ணியதில் அவளுக்குத் தைரியம் பிறந்தது. அம்மாடி! பயம் நீங்கிற்று. இவரிடம் உண்மையைச் சொல்ல நான் தயங்கினேனே என்று தனக்குள் சிரித்துக்கொண்டு, சலுகையுடன் அத்தானுடைய தோளில் சாய்ந்தாள்.

"அத்தான், நீங்கள் இவ்வளவு நல்லவங்க என்று எனக்குத் தெரியவில்லையே! பிச்சை அந்த இரண்டுபடி அரிசியை, படி ஒன்றரை ரூபாய் வீதம் சமய சஞ்ஜீவிபோல் நமக்கு அளித்திராவிட்டால். நாம் விருந்து செய்வது எங்கே? மஞ்சள்காணி நிலம் நம் கைக்கு வருவதுதான் எங்கே?" என்று துணிச்சலுடன் கூறி அவனைப் பார்த்தாள்.

இப்பொழுது குமாரசாமி 'சட்'டென்று நிமிர்ந்து உட்கார்ந்தான். இதென்ன ஐயா, கிணறு வெட்டப் பூதமல்லவா புறப்படுகிறது?

அடடா! என்ன அநியாயம் நடந்து விட்டது இந்த வீட்டில்! என் லக்ஷ்யமெங்கே? இதுகாறும் பாதுகாத்த கண்ணியமான என் நடத்தையெங்கே? ஒருநொடியில் அவ்வளவும் வழுவிப் பாழாகி விட்டதே.

சீ, என்ன பெண் இவள்! ஒரு சுடுசொல் அவன் வாயில் எழுந்தது. தலை நிமிர்ந்து மனையாளின் கண்களைச் சந்தித்தான்; அச்சொல் வெளியே வரவில்லை. ஆஹா, இவளையா இப்பொழுது கோபிப்பது என்கிற உணர்ச்சி மேலிட்டது.

குமாரசாமியின் உடல் வியர்த்துப்போய் நனைந்தது! அவனைச் சேர்த்துப் பிடித்துக் கொண்ட வேலம்மா, "அத்தான் உங்களுக்கு என்ன செய்கிறது?" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, வேலூ, வெற்றிலை நெஞ்சில் செருகிக்கொண்டது. குடிக்க ஒரு தம்ளர் ஜலம் கொண்டு வா!" என்ற அவனுடைய பதிலில் தென்பேயில்லை. எப்படியிருக்கும்?

ஆம், அச் சிறிய பொய் - வேலம்மாவை ஏமாற்றி அவனுடைய கோபத்தை அவள் அறியவொட்டாமல் செய்ய உதவிய அந்தப் பொய்-அதுவே அவனுடைய தோல்விக்கும் அறிகுறியாக விளங்கியது.

எதிர்பாராத விதத்தில் நமது செயலுக்கும் புறம்பாய் லக்ஷ்யங்களிலிருந்து வழுவுதல்கூடும் என்கிற உண்மையைக் குமாரசாமி உணர்ந்தான்.

திருக்குறளின் இவ்வடிகள் அவன் மனதில் எழுந்ததும், ஏனோ குமாரசாமி தனக்குள் சிரித்துக்கொண்டான்! அதில் வெறுப்பும் ஏளனமும் கலந்திருந்தன.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"



பெரீஸ் பிஸ்கட்ஸ்
ஆரோக்கிய உணவு
PERRY & Co., USILAMPATTI.

Agent for Tanjore Dt.
K. ராகவேந்திர ராவ்,
சந்திர விலாஸ்,
கும்பகோணம்.

தொடர் கதை

சித்ரா

கே. சுந்தரம்மாள்

12

"விண்ணோர் வணங்கும் எந்தன் சௌதாவின் பெண்மணியே; கண்ணே என் கண்மணியே கற்பகமே தாலேலோ" என்று பாடியவாறு தொட்டிலை ஆட்டினுள் சித்ரா. தூங்குவதற்குப் பதிலாக வாய் விட்டுச் சிரித்தது குழந்தை.

"அட போக்கிரி, தூங்கமாட்டாயா?" என்று குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு, "ஊருக்குப் போகப்போகிருயா? அப்பாவைப்பார்க்கப் போகிருயா?" என்று கேட்பதற்குப் பதில் சொல்லுவதுபோல் 'இங்கோ' என்று சிரித்தாள் சந்திரலேகா.

இவளையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்த சௌதாமினியின் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, "இதைப்பார் சௌதா, இதற்குக்கூட அப்பாவிடம் போகிருயா? என்ருல் சந்தோஷம் பொங்குகிறது. உனக்கும் அதைவிட ஆனந்தமாகத்தானிருக்கும் ஆனல் எனக்கு" என்று சொல்லும் போழுதே கண்களில் நீர் நிரம்பிற்று.

"வருந்தாதே சித்ரா! கூடிய சீக்கிரம் நீயும் இப்பாக்யத்தை அடைய ஈசன் அருள்புரிவார்" என்று தன் தலைப்பினுல் அவள் கண்களைத் துடைத்தாள்.

"இப்பாக்யம்!" என்று குழந்தையை முத்தமிட்டுவிட்டு, "சௌதா! நான் வீண் கனவு காண வில்லை. இவள்தான் என் பாக்கியம். ஈசன் கருணுகரன்தானென்பதைச் சந்திரலேகாவினல் தான் நம்பிக்கை கொண்டேன். எதிர்பாராத இடிகளினல் தாக்குண்டு செய்வதறியாமல் திகைக்கும் சமயம் எதிர்பாராதவிதமாக நீ வந்துசேர்ந்தாய். நமது நட்பின் உண்மையன்பு எவ்வளவு நிச்சயம்? உன்னைக் கண்டதுமே கரை தெரியாமல் தவித்த கப்பலுக்குத் திடீரென்று கரைதட்டுப்பட்டமாலுமியின் தன்மை என் மனதிற்கு ஏற்பட்டது. இருண்டு போன எனது வாழ்க்கை வனத்தில் ஜோதி உதயமானது போலிருந்தது உன் வரவு. இந்தப் பத்துமாத காலமும் எவ்வளவு ஆனந்தமாகவும் நிம்மதியாகவும் கழிந்தது. அதிலும் சந்திரலேகாவின் குறுநகையும், தளிர்க்கையின் ஸ்பர்சமும் என்னை ஆனந்த சாகரத்தில் மிதக்கச் செய்தன. என் தாயார் மறைவிற்குப்பின் உன் தமையனின் அன்பு அளவிற்கு மிஞ்சுகின்றது என்றே சொல்ல வேண்டும். அவர் பக்கத்திலிருக்கும் பொழுது உலகையே, ஏன்? என்னையே நான் மறந்துவிடுகிறேன். நான் ஒரு சிறிய வேலை செய்வதைக்கூட அவர்மனம் சஹிக்கவில்லை. ஒரு நாள் உன் அம்மா ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர் எடுத்து வைத்தேன். விளாவுவதற்குக் கிணற்றில் ஜலமிறைத்துக்கொண்டிருந்தேன். அவ்விடம் வந்தவர், "நீ ஏன் ஜலமிறைக்கவேண்டும்? அவனெங்கே?" என்று சொல்லிவிட்டு "அடேய்!" என்று அவனைக் கூப்பிட்ட சப்தம் எனக்குப் பகீரென்றது. அவன் கடைக்குச் சென்றிருக்கிருன். ஜலமிறைத்தால் என்ன கெட்டுப்போச்சு?" என்றேன்.

"நீ ஜலமிறைப்பது என் ரத்தம் சிந்துவது போல் தோன்றுகிறதே, என்னசெய்வேன்" என்று என் கையைத் தள்ளிவிட்டு, பல் துலக்க ஜலமிறைக்காதவர் பத்துப் பன்னிரண்டு வாளி இறைத்துக் கொட்டினுர். நல்லகாலம் அந்தச் சமயம் ஒருவரும் வரவில்லை. இது ஒரு உதாரணம். இன்னும் அநேகம். அவ்வித அன்பின் செய்கையைச் சொல்லினுற் சொல்ல எனக்குப் பதம் அகப்படவில்லை. ஆனல் என்ன பிரயோஜனம்?" என நீண்ட மூச்சு விட்டாள்,

"சித்ரா! இது என்ன பேதைமை? நீண்ட மூச்சிற்கு அவசியமேயில்லை. ஒரு பெண்ணிற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? கணவனது இப்பிரேம பாசம் முன்செய்த தவப்பயனல்தான் கிடைக்கிறது. ஒவ்வொரு பெண்கள் அன்புப்பிச்சைக்கு ஏங்கித் தவங்கிடக்கிருர்கள். உன் குணத்திற்கு ஈசன் இவ்விதம் அமைத்தார், நீ ஏன் வருந்துகிருய்?" என்று அவளை அணைத்துக் கொண்டாள்.

"சௌதா! எல்லாமறிந்த நீயே இப்படிச் சொன்னல் என்னசெய்வது? 'கணவன்' என்ற பந்தம் ஹ்ருதயத்துடன்தான் நிற்க வேண்டும். காரியத்தில் நடக்க முடியாதே, இதுதான் என் வருத்தம்"

"இதைப்பார் சித்ரா! திரும்பத் திரும்ப அதையே பாராயணம் செய்யாதே, அம்மா இனிமேல் அவனுக்கு விரோதமாக ஒன்றும் செய்யமாட்டாள். அப்படி ஏற்பட்டால்,

" மான் என அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக்கில்லை
மீன் விழி உடையாளென்றால்
மீனிலே கருமை இல்லை "
—நாமக்கல் கவிஞர்

கண்களுக்குகந்த கருமையும் மருளுதலுடன் கூடிய கவர்ச்சியும் தருவது "ஐடெக்ஸ்" கண் மை.

"ஐடெக்ஸ்" ரஸாயன முறைப்படி தயாரிக்கப்பட்டது. கண் எரிச்சலற்றது.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.
விலை அணா 12.

அரவிந்த லாபரெடிரீஸ் தயாரிப்பு

விநியோகிப்பவர்கள்:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி - மதராஸ்

சிலோனுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவிற்கும் ஏஜண்டுகள்:
நாஷனல்ஸ் (இந்தியா) லிமிடெட்
கண்டோன்மெண்ட் - திருச்சினாப்பள்ளி

சாமதான பேததண்டம் என்ற முறைப்படி செய்யவேண்டியதுதான். இன்னும் மூன்றே மாதம், பரீக்ஷை முடிந்துவிடும். அண்ணா வந்து விடுவான். ஒருசமயம் அவன் முயற்சியினால் சித்திரை, வைகாசியில் கல்யாணம் முடிந்து விடலாம். பிறகு உன் படிப்பு விஷயம் எப்படியோ? வேண்டாமென்றால் அதை மட்டும் உன் இஷ்ட விரோதமாக விட்டுவிடு. ஒருசமயம் அவன் தன்னுடன் டாக்டர் வேலை செய்யவேண்டுமென்று முயன்றால் இருவரும் ஆனந்தமாகப் பட்டணத்தில் குடும்பம் நடத்தலாம். அப்படியில்லையென்றால் ரஜா முடியுமட்டும் அண்ணா கூடவிருப்பான். பிறகு மெடிகல் காலேஜில் சேர்ந்து விட்டாயானால் கடைசி "தண்டோபாயம்" இருவரும் ரிஜிஸ்டர் மணம் செய்துகொண்டு விடலாம். ஈசனருளால் சீக்கிரமே தாய்மை ஸ்தானம்பெற்றுவிட்டால், உன்னைப் பிரிக்க திரிமூர்த்திகளாலும் முடியாது. அம்மா பூர்ணகும்பம் வைத்து உன்னை வீட்டிற் கழைப்பாள்; தெரியுமா? அசடே, வீண் பிரமைகொள்ளாதே. தைரியமாகநட, எந்த ஆபத்திலும் தைரியத்தைக் கைவிடாமல் நடந்தோமானால்வெற்றிநிச்சயம்" என்றாள்.

"ஆஹா! என்ன சஹோதர ஒற்றுமை? அண்ணாவின் ஆலோசனையில் ஒரு அக்ஷரங் கூடத் தவறாமல் தங்கையும் சொல்லி விட்டாயே. எந்த விதமான சமாதானம் செய்து கொண்டாலும், என் மனதில் இவ்வளவு பாக்கியத்தை அடைய நான் கொடுத்து வைத்தவள் தானா? என்ற ஏக்கம் குடிகொண்டே இருக்கிறது."

"அசடே! அதைரியப்படாதே. நீதான் கொடுத்துவைத்த பாக்யசாலி. அண்ணாவின் சொற்படி நடந்துவா, யாவும் நன்மையாக முடியும்" என்று சொல்லும் பொழுது ஸீதாலக்ஷ்மி அவ்விடம் வந்தாள்.

"வாயில் விரலைப் போட்டுக் கொண்டு சித்ராவின் பின்னலை ஒரு கையில் பிடித்துக் கொண்டு ஆனந்தமாகச் சித்ராவின் மடியில் படுத்துக் கொண்டிருக்கும் சந்திரலேகாவைப் பார்த்து "சௌதா? நீ பெற்றாயே தவிர, பாடெல்லாம் சித்ராவிற்குத்தான். அவளில்லாமல் நீ எப்படித்தான் குழந்தையைப் பார்த்துக்கொள்ளப் போகிறாயோ?" என்று நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"பாடு என்ன, மாமி! எனக்கு ஆறுதலாக வன்றோ இருக்கிறது "என்றாள் சித்ரா.

"அண்ணா சம்மதிக்கமாட்டான். இல்லையானால் அவ்விடத்திலேயே சித்ரா படிக்க வசதி செய்து கொடுப்பேன்" என்றாள் சௌதா.

"நன்னருக்கே, அண்ணு என்ன? நான் சம்மதிப்பேனு அங்கெல்லாம் அவளை அனுப்ப? இப்பவே தனியாக விட்டுவிட்டு எப்படிப் போகிறது என்று தயங்கறேன், சித்ரா! சமையல்காரனை நான் திரும்பிவருமட்டும் நிறுத்திவிட்டு, ஒரு அம்மாவை ஏற்படுத்தலாமென்று நினேச்சு நாராயணவாத்தியாரிடம் சொன்னேன். எட்டுநாள்கழித்து விட்டால் ஒரு அம்மா வருவாளாம்; அதுவரை, வேதம் துணையுடன் இரு. அவள் வந்ததும் இவளைப் போகும்படி அவரிடம் சொல்லி விடுகிறேன். ஒரு சமயம் லீவிற்குப் பிரபாகரன் வந்தாலும் வரலாம். நாராயணவாத்தியார் அவனைக்கண்டால் நடுங்குகிருர். அதனுல் இந்த விஷயங்களை அவன்வரை விடாமல் நீயே பார்த்துக்கொள்ளு" என்ருள்.

"வேண்டாம் மாமி, சமையலுக்கு ஆளே வேண்டாம். மாமா நான் வேதம் மூவருந் தானே! நானே சமையல் முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு பள்ளிக்கூடமும் போக முடியும். நீங்கள் இருக்கும்பொழுதே அவளை நிறுத்திவிடுங்கள். நாராயணவாத்தியாரும் நீங்கள் வருமட்டும் இவ்விடம் வர வேண்டாம்" என்ருள்.

"உனக்குப் படிக்கவேண்டாமா?"

"போன வருஷம் படித்தவைகள்தானே" ஒன்றும் கஷ்டமில்லை. பஸ்டிலே பாஸ் செய்து விடுவேனென்ருள்" சித்ரா.

ரயில் புறப்படும்வரை சந்திரலேகா சித்ராவினிடமே இருந்தாள். கடைசி மூச்சுடன் ரயில் குழந்தையை அவளிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்றது. தன் சந்தோஷத்தை அப்பாமும் ரயில் இழுத்துச் செல்வது போன்ற உணர்ச்சி தோன்ற, ரயில் சென்ற திக்கையே பார்த்தவண்ணம் நின்ருள். அன்று சௌதாவை அனுப்பி விட்டுச் செல்லும் பொழுது மனது மிக்க வேதனையடைந்தது. அவளை மறுபடியும் பார்க்கும்பொழுது தனது நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது. இப்பொழுது மனம் சஞ்சலமடைகிறது. மறுபடி அவளைக் காணும்பொழுது எப்படியோ? என்ற சிந்தனை ஓட்டத்தை, "சித்ரா, பெண்களென்ருல் இப்படித்தான்; நீயும் ஒருகாலத்தில் இப்படிச் செல்லுவாய்; வருத்தப்படாதே; வா போகலாம்" என்ற ராதாகிருஷ்ணய்யரின் சொல் தடைசெய்தன.

சாயங்காலம் ஆறுமணி "அல்லலுறும் திவினைகள்திரு, அன்புகொண்டு என்னை வந்து ஆளு" என்று பாடிய வண்ணம் அடுப்பங்கரையில் உருளைக்கிழங்கின்தோல்களைப் போக்கிய வண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்த சித்ராவின் கண்களை இருகரங்கள் மூடின.

"யாரது?" என்று பதறியவளாகக்கேட்ட வண்ணம் கையிலிருந்த உருளைக்கிழங்கைக் கீழே போட்டுவிட்டு இரண்டு கைகளாலும் இரண்டு மணிக்கட்டுகளைப் பிடித்தாள். தடித்த கோட்டிங் துணி தட்டுப்படவே "ஓஹோ?" என்று கையை எடுத்துப் பிடித்தவாறே நோக்கி, "பதறிப்போய் விட்டேன் தங்களது திடீர் விஜயம் எதிர்பாராததினுல்; இதுஎன்ன?" என்ருள்.

"இது என்னவென்ருல் நீ சொன்னதைச் செய்தேன்"

"உங்கள்வரவே தெரியாத நிலைமையில் நான் என்ன சொல்ல முடியும்?"

"அன்புகொண்டு என்னைவந்து ஆளு' என்று நான் வரும்பொழுது சென்னுயல்லவா?" என்ருன்.

"என்ன குறும்பு" என்று லேசாக அவன் கன்னத்தைத் தட்டினுள்.

"உன்னைவிடவா?" என்று அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

"உங்களுக்குக் காலேஜ் மூடியாய் விட்டதா? அம்மாவும் சௌதாவும் சௌகரியமாகப் பிரயாணம் செய்தார்களா? சந்திரலேகா என்ன சொன்னுள்? நீங்கள் இப்படிப் புறப்பட்டு வருவது அம்மாவுக்குத் தெரியுமா?"

"சந்திரலேகா இந்தப்பூவை உன் தலையில் வைக்கச்சொன்னுள்" என்று வாஸனை மிக்க மல்லிகைச் செண்டை அவள் தலையில் வைத்துவிட்டு, "அம்மா என்ன சொன்னுள் தெரியுமா? காலேஜ்டே நான்குநாள் இருந்தாலுமே பரவாயில்லை. லீவு எடுத்துக்கொண்டு உடனே புறப்பட்டுப்போ. சித்ரா தனியாக இருக்கிருள். சமையல்காரன்கூட இல்லை. நீ உதவிக்குப் போ என்ருள்" என்று புன்சிரிப்புடன கூறியபடியே உருளைக்கிழங்கின் தோலைப்போக்கினுன்.

"போனதும் உருளைக்கிழங்கை உரித்துக் கொடு என்று சொன்னுர்களா?" என்ருள்.

"ஆமாம். அதுமட்டுமா? சித்ராவைக்கூட ரஜா எடுத்துக்கொள்ளச் சொல்லு. இன்னும் எட்டு நாள்கள்தான் பள்ளிக்கூடம். அதற்காகப் போகவேண்டாம். வீட்டில் ஒருவர்க்கொருவர் துணையாக இருங்கள். மறந்துபோகாமல் இதையும் கொடுக்கச்

சொன்னாள்'' என்று அவள் கன்னத்தில் மு...... விட்டு, இன்னும் சொல்லட்டுமா?'' என்று சிரித்தான். அவளும் அடக்கமுடியாமல் குபீரென்று சிரித்துவிட்டாள். இருவரும் சிரித்து ஓய்ந்ததும் "சரி. உங்கம்மா சொன்னபடியெல்லாம் நாளை சாவகாசமாகச் செய்யலாம். அப்பா வரப்போகிறார் எழுந்து செல்லுங்கள். எனக்கு ரயிலுக்குச் சமையலாகவேண்டும். நீங்கள் இப்படி விஷமம் செய்தால் ஒரு காரியமும் நடவாது'' என்றாள்.

''யார் ரயிலுக்குப் போகப்போகிறார்கள்?''

"உங்கள் அப்பா பட்டணம் போகப்போகிறார்களாம்''

''என்ன விசேஷம்? அம்மா ஒன்றும் சொல்லவில்லையே''

''ஏதோ கவர்னர் டிபார்ட்டியாம்; தனியாக இருக்கவேண்டுமே நீ என்று கவலைப்பட்டார்'' என்று சிரித்தாள்.

''அச்சா! பகுத்குஷி'' என்று அவள் முதுகில் தட்டிவிட்டு, ஒன்று கொடு போய் விடுகிறேன்.''

''முடியாது; யாராவது வரப்போகிறார்கள். தயவு செய்து எழுந்துபோக மாட்டீர்களா?''

''மாட்டேன்; கொடுத்தால்தான்''

''அப்பா! இப்படியே சாதனை செய்து என்னை ஆட்டுவிக்கிறது. பெயர் பெண்ணிற்கே வெற்றி. நான் கொடுக்கமாட்டேன். வேண்டுமானால் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.''

''அப்படியே ஆகட்டும் மஹாராணி!'' என்று எடுத்துக்கொண்டு "இது உன் வெற்றியா? என் வெற்றியா?'' என்று எழுந்து நின்று "சீக்கிரம் வேலையை முடி'' என்று திரும்பியதும் தகப்பனார் வாசற்படிக்கு வந்ததும் ஒன்றாய் நிகழவே திடுக்கிட்டு நின்று விட்டான்.

''ஏன் தந்தி கொடுக்கவில்லை? ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பியிருப்பேனே, அவர்கள் ஸெளகரியமாகப் போனார்களா?'' என்றார்.

"பஸ்கிளாஸில் போவதற்கு ஸெளகரியக் குறைவென்ன? நமது முத்துஸ்வாமியையும் கூட அனுப்பியிருக்கிறேன்,''

''உனக்கு லீவு விட்டுவிட்டார்களா?''

''இன்னும் எட்டு நாள் இருக்கிறது. எனக்கு இரண்டு நாளாய் வயிற்று வலி. 'கிளப்புச்சாப்பாடு வேண்டாம்; ஊருக்குப் போ' என்று அம்மா சொன்னாள். அதனால் தான் திடீரென்று புறப்பட்டேன்''

''சரி சித்ரா! எட்டுமணிக்கு இலை போட்டால் போரும்; அவசரப்பட வேண்டாம்.'' ''சமையல்காரி வரட்டும் என்கிறேன். வேண்டாமென்கிறாள். நல்லசமயத்திற்கு நீ வந்து சேர்ந்தாய். ஒப்படிக்காக வேலாண்டி நேற்றே வந்து விட்டுப்போனான். இரண்டு நாளைக்குக் கிராமத்திற்குப் போய்விட்டு வா. மாடிக்குவா, அந்த விபரங்களை எழுதித்தருகிறேன். சித்ரா! வேதம் எங்கே? நீ தனியாகக் கஷ்டப்படாதே'' என்றார் பிள்ளையின் மனப்போக்கிற்குப் பயந்தவர் போல்.

''தன் செய்கைகளை கவனித்திருப்பாரோ?'' என்ற மனப்பான்மையால் சற்று பயந்தான். அதேசமயம் "சமையலுக்கு என்ன உதவி வேண்டும். அவளுக்குப்பழக்கம் தானே'' என்றான்.

இரவு இருவரும் சாப்பிடும்பொழுது ''சித்ரா சமையல் ஒண்ணாங்கிளாஸ். எந்த விஷயத்திலும் அவளைக்குறைகூறமுடியாது. இப்படி எல்லாம் பொருந்தியிருப்பதனால் தான் அதிருஷ்டப் குறைவாய்ப் போச்சு'' என்றார் கடைக்கண்ணால் புதல்வனை நோக்கியவாறு.

''அந்த அதிருஷ்டத்தை நாம் அவளுக்கு அளித்து விட்டால்?'' என்றான் குனிந்து ரஸம் விடும் சித்ராவை மேல்கண்ணால் நோக்கியவாறு.

''அளிப்பது எனக்கு ஆக்ஷேபனையேயில்லை. பெண்கள் சுதந்திரம், பெண்கள் வெற்றி, அவர்களுக்கு மதிப்புக் கொடுத்துத்தான் நடக்கவேண்டுமென்று நீதானே சொல்லுகிறாய். நானே அதற்கு விரோதமாக நடக்கலாமா?''

''சமய சந்தர்ப்பத்தை உத்தேசித்து, நியாயங்கேட்க இருவருக்கும் உரிமையுண்டு என்பதை நான் ஆக்ஷேபனை செய்யவில்லையே''

"கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் இன்று சாயங்காலத்துடன் தீர்ந்து விட்டது. என்னாலான முயற்சியைச் செய்கிறேன். திருச்செந்தூரில் அன்றைய இரவை நினைக்க இன்றும் என்மனம் நடுங்குகிறது. அதை நினைக்கும்பொழுது சித்ராவிற்காக நான் என்னவேண்டுமானாலும் செய்யக் கடமைப்





லக்ஸ் டாய்லட் சோப்பினால் கண்ணாம்பா தினந்தோறும் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே



☆ சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப் ☆

கண்ணாம்பாவிற்கு, அவருடைய அருமையான சருமத்தை குளுமையாகவும், அப்பழுக்கற்றதாகவும் செய்துகொள்ள ஒழுங்கான பாதுகாப்பு அவசியம் என்பது தெரியும். நீங்களும் உங்கள் சருமத்தை சீர்படுத்துவதில் சிரத்தையெடுத்துக் கொள்ளுகிறீர்களா? இந்த சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள். இவ்வெண்மையான. சிறந்த சோப்பின் குளிர்ந்த பரிமளத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், இதன் தாராளமாயுண்டாகும் நுரை உங்கள் சருமத்தை சுத்தமாக்கி பளபளப்பை யளிக்கும். உங்கள் சருமத்திற்கு அதற்கு வேண்டிய பாதுகாப்பை யளியுங்கள். உண்மையான அழகையளிக்கும் லக்ஸ் டாய்லட் சோப்பைப் பயன்படுத்துங்கள்.



LTS. 152-23-40 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

பட்டவன் என்பதை என் நெஞ்சம் அறிவுறுத்திக் கொண்டே இருக்கின்றது. ஆனால் விதி?''

''உண்மை அன்பிற்கு விதி வழிவிட்டுத்தான் ஆகவேண்டும்''

''அதெல்லாம் சரி. நான் வருமட்டும் வீட்டையும் சித்ராவையும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள். நான் உனக்குச் சொல்ல வேண்டியது அனுவசியம்'' என்று சொல்லிவிட்டு, மோர் பரிமாறவரும் சித்ராவைப் பார்த்து, ''என்ன சித்ரா! நான் சொல்லுவது சரி தானே. உன்பாடு அவன்பாடு'' என்ருர் புன்சிரிப்புடன்.

நாணமும் ஆனந்தமும் ஒருங்கே வதைக்க, பதில் பேசாமல் தலைகுனிந்தவாறு உள்ளே சென்ருள்.

தகப்பனுரை அனுப்பிவிட்டு ஸ்டேஷனிலிருந்து வந்து வீட்டுக்குள் நுழையும் பொழுது, ''வேலைத் தாங்கும்பிள்ளை தன்னைப் பெற்ற தெய்வமே'' என்ற பாட்டு வீணுநாதத்துடன் சித்ராவின் மதுர கானமும் சேர்ந்து மிதந்துவந்து, அவன் காதில் ரீங்காரம் செய்யவே ஆனந்தபரவசனுக நடு ஹாலில் அவள் உட்கார்ந்து வாசிக்கும் மிடத்தில் அவன் எதிராக விருந்த சோபாவில் சாய்ந்து கொண்டான். இவனைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டு, சுவரின், மேல் பார்வையைச் செலுத்திப் பாடினுள்.

அவள் பார்க்கும் திசையை அவனும் நோக்கினுன். ராதாகிருஷ்ணய்யரின் படம் அவள் லக்ஷ்யமாய் இருப்பதுகண்டு'' ஓஹோ வரமா? ஸ்துதியா?'' என்ருன் சிரித்தவாறு.

பாட்டை முடித்து வீணையைக்கீழே வைத்துக் கொண்டு ''இரண்டும்தான்'' என்ருள்.

''சரி பிடிலை எடுத்துக்கொண்டுவா; நான் பிடிலும் நீ வீணையும் சேர்ந்து வாசிப்போம்; நீ பாடு, சரிதானு?'' என்ருன்.

''ஓ ரைட்'' என்றுஎழுந்து சென்று எடுத்து வந்தாள். பன்னிரண்டு மணிவரை இருவரும் வாசித்துப் பாடினுர்கள். பன்னிரண்டு மணி அடிக்கும் சப்தத்தைக் கேட்டதும் வீணையைக் கீழே வைத்துவிட்டு, ''நேரமாகி விட்டது. பால் கொண்டு வருகிறேன். சாப்பிட்டுவிட்டுத் தூங்கச்செல்லுங்கள்'' என்று எழுந்து உள்ளே சென்று பாலைஎடுத்துக் கொண்டு வந்து பார்க்கும்பொழுது அவனைக்காணவில்லை யாதலால், ஒவ்வோரிடமாகப் பார்த்துவிட்டு அவன் படுக்கை அறைக்கு வந்த பொழுது. கட்டிலின் மீது படுத்திருப்பதைக் கண்டாள். பாலை வாங்கிச் சாப்பிட்டானதும் லோட்டாவைக்கையிலெடுத்துக்கொண்டு திரும்பும் சமயம் அவள் பின்னலை எட்டிப் பிடித்துத் தன் பக்கமிழுத்து,'' என்ன அவசரம்?'' என்ருன்.

''அவசரமா? மணி பன்னிரண்டு. தூங்க வேண்டாமா?''

''என்னைத் தூங்கப்பண்ணின பிறகுதான் நீ போகலாம்''

''உங்களை எப்படித் தூங்க வைக்கணும்? தொட்டிலில் தாச்சிக்கிங்கோ; லொள்ளொளாயி பாடுகிறேன்'' என்று சிரித்தாள்.

''அந்தமுறை தானு? வேறு'' என்று நிமிர்ந்து நோக்கினுன். சுகன்யா சியவனருக்குக் கால்பிடிக்கும் காட்சி காலண்டரில் திட்டப்பட்டிருந்தது. சித்ராவின் கண்களும் அதில் சென்றன. லோட்டாவைக் கீழேவைத்துவிட்டு ''அவளைப் போன்ற பாக்கியவதியாவனே?'' என்று சொல்லிய வண்ணம் கால் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கால்களை வருடிக்கொண்டே, ''உங்கள் அப்பா சாயங்காலம் உங்களுடைய திருவிளையாடலைப் பார்த்துவிட்டிருப்பாரோவெனச் சந்தேகமாக இருக்கிறது''

''ஏன்?''

''சாப்பிடும் பொழுது அவர் செல்லியவை?''

''அதனுலென்ன நல்லதாகப் போய்விட்டது. அவர் சம்மதம் பூர்ணமாகக் கிடைத்துவிட்டது,'' என்ருன். பிறகுசற்று நேரம் உல்லாஸ சம்பாஷணையில் சென்றது. சற்றுப் பொறுத்துக் கண்களை மூடினுன். அரை மணிசாவகாசம் சென்றது. அவன் அயர்ந்து நித்திரை செய்வதாகத் தோன்றவே, எழுந்து பக்கத்தில் நின்று அவன் முகத்தையேஉற்று நோக்கினுள். ''என்னதேஜஸ்! எவ்வளவு சாந்தம்! இவரின் பூர்ண அன்பிற்கும் நான் பாத்ரவதி'' என்ருள். ''எவ்வளவு பாக்யசாலி'' என்றது மனம். சட்டென முகத்தருகில் குனிந்தாள். சே, வேண்டாம் என்று நினைத்தவண்ணம் நிமிர்ந்தாள். திரும்பி இரண்டடி நடந்தாள். மறுபடி திரும்பி இரண்டடி நடந்தாள், மறுபடி திரும்பி நோக்கினுள். மனம் தயங்கிற்று. மறுபடி முகத்தருகில் குனிந்தாள். லஜ்ஜை தடுத்தது. நிமிரும் சமயம் சட்டென்று இரு கைகளையும் கழுத்தில் போட்டு அணைத்து முத்......ன்

''பொய்த் தூக்கமா?'' என்ருள்.

''உன் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகக்கண்ணைமூடினேன்: சாயங்

காலம் கேட்டது இப்பவாவது கிடைக்கும் போலிருக்கிறது என்று சந்தோஷப்படும் சமயம் பயந்து ஏமாற்றி விடுவா யென்று தோன்றவே......''

''சரிதான் விடுங்கள் போகட்டும்''

''போவானேன்......''

''ஆஹா! அச்சா! பலே! வெரிதாங்கஸ் குட்பை! உறக்கம் உங்கள் கண்களைத் தழுவட்டும்'' என்று அவன் கைகளைக் கண்களில் ஒற்றிவிட்டு, மான்குட்டிபோல் துள்ளிச் சென்றுவிட்டாள். நீண்ட மூச்சுடன் படுக்கையில் புரண்டான்.

சித்ராவின் பள்ளிக்கூடம் மூடுமட்டும், தினசரி பத்து மணிக்குள் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு அவன் கிராமம் செல்லுவான். இவள் பள்ளிக்கூடம் சென்றுவிடுவாள். சாயங்காலம்வந்து டிபன் காபி தயார் செய்துவிட்டு, நிலைக்கண்ணாடி முன் நின்று அவள் அலங்காரம் முடிவதும் அவன் வருவதும் சரியாக இருக்கும். இருவருமாகவே டிபனை முடித்துவிட்டு இரவு சாப்பாட்டையும் தயார் செய்து வைத்துவிட்டு வண்டியில் உலாவச் செல்வார்கள், அல்லது தோட்டத்தில் கொடி வீட்டிலும் பளிங்குக்கல் மண்டபத்திலும் உட்கார்ந்து மணிக்கணக்காய்ப் பேசுவார்கள். அல்லது வீணையும் பிடிலும் வைத்துக்கொண்டு பாடுவார்கள். அல்லது அவளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பான். சாப்பாடு முடிந்ததும், வேதத்தை அவள் புருஷன் வந்து அழைத்துச்சென்றுவிடுவான். வேலைக்காரக் கிழவி முருகாயிக்குப் பிரபாகரன் ஒருபீடா கொடுப்பான். ஆனந்தமாக அதைப்போட்டுக் கொண்டதுமே நிம்மதியாகத் தூங்கி விடுவாள் சித்ராவின் படுக்கை அறையில்.

பிறகு இவர்கள் இருவரும் தோட்டத்திற்குச் சென்று விடுவார்கள். வீட்டு வேலையில், சித்ராவுடன்கூடவே உதவிசெய்வான். சிலசமயம் அவன் உதவி அவளுக்குச் சங்கடமாகவேதோன்றும். அந்தச்சமயங்களில் ''தயவு செய்து சற்று வெளியில் சென்று வாருங்கள். இப்படி ஆண் பிள்ளைகள் அடுப்பங்கரையைச் சுற்றினால் பெண்களின்வேலை ஒழுங்காக நடைபெறாது''

''சமையல்காரன் வேஷ்டியுடுத்தியபெண் பிள்ளையோ?''

''சமையல்காரன் வேலையில் பெண்கள் குறுக்கிடுவதில்லை'' என்று தர்க்கம் செய்வார்களே தவிர, அவன் அவளை விட்டு அகலுவதே அருமை. இரவு பன்னிரண்டுமணி வரை தோட்டத்தைச் சுற்றி உலாவுவதும் பளிங்கு மண்டபத்தில் உட்கார்ந்து பேசுவதுமாகக் கழிப்பார்கள். பிறகு இருவரும் பிரியாமனதுடன் அவரவர் அறைக்குப்படுக்கச்செல்லுவார்கள்.

அன்று சித்ராவுக்குப் பள்ளிக்கூடம் விடுமுறை ஆரம்பம். சாப்பாடானதும் மாடிக்குச் சென்று பிரபாகரன் அறையை எட்டிப் பார்த்தாள். சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தவன் இவளைக் கண்டதும் ''வா! உன்னைத்தான் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''ஏன் இன்று கிராமத்திற்குச் செல்லவில்லை'' என்று அவனருகில் வந்து நின்றாள்.

''வேண்டாமென்றுதான்''

''எல்லாம் முடிந்து விட்டதா?''

''அதற்குள்ளாகவா? இன்னும் எட்டு நாள்களுக்கு மேலாகும்''

''பின் ஏன் போகவில்லை?''

''அவர்களாகவே பார்த்துக்கொள்ளுவார்கள்''

''திருடிவிட்டால்?''

''போனால் போகட்டுமே. ஐயோபாவம்! நெற்றி வேர்வை நிலத்தில்விழப் பாடுபடுகிறவர்கள் அவர்கள்; சுகம் அனுபவிப்பவர் நாங்கள். அவர்கள் திருப்தியாக எடுத்துக் கொண்டு மிச்சத்தைக் கொடுத்தால் போதுமானதே.''

''ச்ச்ச், இந்தக் கருணை ஒருவாரமாகக் காணவில்லையே, இன்று திடீரென உதயமாயிற்று?'' என்று சிரித்தாள்.

''நான் உன்னுடன் விளையாடுவதற்காகச் சொல்லவில்லை. நீயோ பள்ளிக்கூடத்தை விடமாட்டாய். வீட்டில் பேய்போல் உட்கார்ந்திருக்கவேண்டும், பொழுது போக்கிற்காகச் சென்றேனே தவிர காவலல்ல, ஒவ்வொருவருக்கும் குடும்ப நிலையை விசாரித்து வேண்டுமளவு தானியங்களைப் பங்கிடு செய்து வரும்படி முதல் நாளே ஏற்பாடு செய்து விட்டேன். அவர்கள் என்னைத் தெய்வமென்று கொண்டாடுகிறார்கள். சென்ற வருஷமே, விவசாயக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி விட்டேனல்லவா? அதனால் நன்மையடைந்த அவர்கள் என்னிடம் உண்மையாக நடந்து கொள்ளுவது வியப்பல்லவே'' என்று அவள் கையைப் பிடித்துத் தன்பக்கத்தில் உட்காரவைத்து விட்டு, ''சத்தியாகப் பகவான் நிறையக்

கொடுத்திருக்கிறார் ஏழுதலைமுறை கஷ்டமில்லாமல் சாப்பிடலாம். எதற்காகக் கணக்கு வழக்கு' என்று பிராணனை விட வேண்டும்'' என்றான்.

"இந்த நோக்கமுடையவர் மெடிகல் காலேஜில் ஏன் சேரவேண்டும்? என்னையும் படிக்கத் தூண்டவேண்டும்?''

''நான் ஜீவனத்திற்காகவா படிக்கிறேன். சக்தியில்லாதவர்களே, வயிற்றின் நிமித்தம் கல்வியைத் தொழிலிற்காக உபயோகித்து அடிமைஉத்யோகம் செய்யவேண்டியிருக்கிறது. டாக்டர்தொழில் எவ்வளவு பரோபகாரமானது தெரியுமா? முன் சொன்னபடி வறுமையின் மடியில் வளர்பவர்களேதான் சம்பளத்திற்கு ஊழியம் செய்ய வேண்டும். நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?''

''நீங்கள் ஜோஸ்யம் கற்றுக்கொள்ளும்படி சொல்லவில்லையே; நான் எப்படிச் சொல்லுவேன்?''

''பேச காசு கேட்டுக்கொண்டிருந்தவள் இப்பொழுது வாயாடியில் முதல் பரிசு கொடுக்கலாம் போலிருக்கிறதே'' என்று முதுகில் தட்டினான்.

"இதற்குக் குரு யார் என்பது நான் சொல்ல வேண்டாமே?''

"வேண்டாம்! வேண்டாம்!! நான் சொல்லுவதைக்கேள், படிப்பு முடிந்ததும் இவ்வூரில் சொந்த டிஸ்பென்ஸரி வைக்கப் போகிறேன்''

" பணமில்லாமல் தர்மவைத்யம் செய்வீர்கள். ஆனால் வருமான மில்லாமல் எப்படி நடத்தமுடியும்?''

" நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டுவா. இப்பொழுது எங்களுக்கு வருஷத்தில் அப்பா சம்பாத்யம் தவிர. வருகிற வருமானத்திலேயே சகல செலவுகளும், செய்து கொண்டாலும் வருஷத்தில் இருபத்து ஐயாயிரத்திற்குமேல் மீதமாகிறது. கௌரவத்திற்காகச் செய்யும் செலவு நீ அறிந்தவிஷயமே. ஏன் இதைக் கொண்டு ஏழை மக்களுக்கு உதவி புரியக் கூடாது? மேலும் நம்மூரில் ஜம்புலிங்கம் இருந்தானே, கேள்விப்பட்டிருக்கிறாயா?''

"உம். கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் திருடன்னு சொல்லுவா. அதனால்?''

(தொடரும்)

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 SUNDARI ELIXIR
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 PHOSPHORUS OIL
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 MASTANA PILLS
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

கூழும் குடியும்

வே. சாரநாதன்

"கூழும் குடியும் ஒருங்கே யிழக்கும்" என்றார் வள்ளுவர் கொடுங்கோன்மையைப்பற்றி. எச். ஜி. வெல்ஸ் என்ற ஆங்கிலப் பேரறிஞர், மனிதரின் செல்வம் (கூழ்), வினைசெயல் வகை, சுகம் Wealth, Labour and Happiness of Mankind) என்ற பேருடன் கூடிய ஒரு பெரிய, அற்புதமான கிரந்தம் செய்தார். கூழும் (செல்வமும்), குடியும் ஒருங்கே கூறப்பட்டுள்ளன. கூழும் குடியும் என்ற தொடர் ஹாஸ்யமாக உணவும் கள்ளுக் குடியும் என்றும் பொருள் படும். மது விலக்குச் சட்டங்களை மும்முரமாகக் கையாண்டுவரும் நம் நாட்டு அரசாங்கங்களுக்கும், கூழும் குடியும் என்ற தொடர் அதிக அர்த்த புஷ்டியுள்ளதாகத் தோன்றும். குடியை யொழித்தால் கூழ் சித்தமாக நம்மேழை ஜனங்களுக்கு கிடைக்கும் என்று நம் நாட்டு மந்திரிகள் பாடுபடுகின்றார்கள். ஆனால் குடியும், கூழும் அல்லது முன்னீட்டிய செல்வங்களும் கொடுங்கோன்மையில் பாழடைகின்றன என்ற கருத்தானது உலகத்தோர் போற்றும் மனித சமூகத் தத்துவங்களில் ஒன்றாகும்.

இப்பொழுது, நம் நாட்டு ஜனங்களுக்குக் கொடுங்கோன்மையின் ஆதிக்கத்தால் பல நூற்றாண்டுகளாக, குடி மாட்சியும் கூழும் ஒருங்கே நசித்துப் போயிருப்பதை நினைத்து வருந்தாதவர் எவர்? கோல் சிறத்தால் குடி தழைக்கும், அத்துடன் செல்வம் தழைக்கும் என்பது பிராசீனக் கொள்கை. கோல் கோணிற்றேயானால் குடியும் கூழும் அழியும். ஏன்? குடிகளின் பணிவிலும், உழைப்பிலும் தான் ஒரு நாட்டின் செல்வம் தங்கியிருக்கிறது. பணிவின்றி, உழைப்பு விளையாது. பணிவுக்குக் காரணம் நீதியுள்ள அரசன் என்பதும் நம் முன்னோர்களின் கொள்கையாகும். ஆனால் இப்பொழுது அரசே குடிகளுக்குரியது, செங்கோன்மை என்ற உரிமை குடிகளுடையது; அரசர்கள் அச்செங்கோன்மையின் நிர்வாகத்தைக் குடிகளின் அனுமதியினால் வகித்துவரலாமே யொழிய அரசர்களுக்குக் கோலுரிய தன்று; குடிகளுக்கே கோல்; குடிகளுக்கே கூழ்; குடிகளே அரசர்கள்; "ஆம், நாம் இந்நாட்டு மன்னர்; நாமெல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்ற கவியின் வாக்கு முற்றிலும் பலிக்கும் காலம் வந்து விட்டதல்லவா?

அரசு என்பதை விட்டு, கூழும் குடியும் எவ்விதப் பிணைப்புள்ளவை என்று யோசிப்போம். நல்ல, சாமானிய அறிவைப் பெற்று, ஆற்றலுடனும், மகிழ்வுடனும் தங்கள் நன்மைக்காகவே, சமாதான காலத்திலும், போர்நடக்கும் காலத்திலும் மெய்யுயிர் அந்தக் காரணங்களின் புஷ்டியுடன் உழைத்துச் செல்வத்தைத் தேடிச் சித்திபெறும் குடியே, நற்குணம் வாய்ந்த ஜாதியாராகும். நமது முன், இங்கிலாந்தும், ருஷ்யாவும், தோல்விக்கு முன் ஜப்பானும், மிக்க செல்வப் பெருக்கிலும் பெருமிதத்தால் அழியாத உண்மையான அமரிக்கப் பண்புடைய அமரிக்கா தேசமும் மேற்கூறிய நற்குடி, நற்குணம் பெற்ற மனித சமூகங்களாக விளங்குகின்றன. ஆகையால் "கூழும் குடியும்', என்ற சொற்றொடரைப் படைத்த தெய்வ வலிமை பெற்ற புராதானத் தமிழரின் பேரறிஞர்கள் இக்காலத்து எச். ஜி. வெல்ஸ் போன்ற நிபுணர்களுக்குப் பின் வாங்கியவர்களாகார்கள். "முயற்சி திருவினையாக்கும்"; தெய்வத்தால் வெற்றி வராமல் போனாலும் உழைப்புக்குத் தக்கவாறு நற்பயன் விளைந்தேதீரும் என்று கூறிய ஜாதியார்கள் நாம், என்பதை நினைத்து முன்னேறவேண்டும்.

"கூழுக்குமாசை, மீசைக்குமாசை" என்ற நகைச்சொல் உணவுப் பொருள் கூழுக்குச்சொல்லியதானாலும் இந்தச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். ஆம், மீசைவலிமையடைய வேண்டும், அழகாகவுமிருக்கவேண்டும். ஆனால் கூழுக்கு (கூழ் சாப்பிடுவதற்கு, அல்லது, செல்வம் சேர்ப்பதற்கு) மீசையைக் கூடப் பலிகொடுத்து விடலாமென்று

நினைக்கிறேன். எதையும் பொருட்படுத்தாமல் உழைத்தல்லவோ, சர்ச்சில் ஆதிக்கத்தில் இங்கிலாந்தானது முன்னேறிற்று. மீசையைப் பலிகொடுத்துவிட்டுக் கூட, ருஷ்யாமுன்னும், அமரிக்கா முன்னும் வெட்கத்தைவிட்டு ராசிபேசி நன்கொடைகளும், போர்ப்படைகளும் பெற்று நமக்கு எஜமானர்களான ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றார்கள். இனி, கூழ் என்ற செல்வம் குடிகள் சேர்ந்ததேயொழிய, அரசனுடையதல்ல என்ற சித்தாந்தம் எங்கும் பரவியிருக்கிறதை அரசர்களும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறதல்லவா? இந்திய மன்னர்கள் கூட, அவர்களின் ஸச்சிவோத்தமர்கள் கூட, ஒப்புக்கொண்டாக வேண்டுமல்லவா? ஆகையால் அரசனுக்குக் குடிகளின் அன்பு இருந்தாலொழிய ஒன்றும் கிட்டாது. குடிகள் தங்கள் பொருள்கள், அடிமைப் பொருள்கள் என்று மனிதர் எண்ணிய முற்காலங்களிலும் அப்படியே. இப்பொழுதோ, குடிகளே அரசப்பண்பைப் பொதுவில் உடைத்தாயிருப்பவர்கள் என்ற கொள்கையை முதன் முதலில், மூலப்பொருள் ஆக அரசியல் நிர்ணயசபைகளில் ஸ்தாபித்தாய்விட்டதே? ஆகையால் கூழ் என்பது குடியின் குலதனம், அவர்கள் சுவாதீனமாய் ஆளும் தனம் என்பது நிலைத்துவிட்டதல்லவா?

இக்கூழுக்காக, இச்செல்வத்திற்காக என்ன பாடுகள் குடிகள் படுகிறார்கள். யந்திர சாலைகளிலும், இயற்கைத் தேவியின் மர்மங்கள் அணுவும் பூட்டிய மாயக் கருவிகளை உபயோகித்திருக்கும் நம் சகாப்தத்திலும் குடிகளின் துயரம் குறைந்தபாடில்லை. உழைப்புக் குறைந்தபாடில்லை; நிர்வாக அதிகாரிகளின் கட்டளையின்படி உண்டாகும் தீய விதிகள் குறைந்தபாடில்லை. மனித அன்பு என்பது எங்கேயோ மறைந்துவிட்டது. உண்மையான, வலிமையான, பொதுவுடைமைக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட ருஷ்ய நாட்டிலும் குடிகள் கூழுக்கு உயிரையும், உணர்வையும் அர்ப்பணம் செய்யும் முறைகள் ஒழிந்தபாடில்லையே! யோசித்துப் பார்த்தால், "கூழும் குடியும்" என்று கூறும்போதே, குடியின் ஊழ்வலியைப் பெற்றுவருவதே "கூழ்" என்று கூறலாம். உழைப்பு இன்பமாகாது; உழைப்பின்றி இன்பத்தின் காரணமாகிய செல்வம் உண்டாகாது. ஆதலால் செல்வத்தில் குடிகளின் உழைப்பாகிய துயரம் குடிகொண்டிருக்கிறது. இதை மாற்றவேண்டும்.

ஆம், மனித உழைப்பின் விகாரமான இயக்கங்களின்றி மனிதரின் செல்வமும், இன்பமும், விளைவதற்கு மானிடர் இடைவிடாது முயலவேண்டும். பௌதிக சாஸ்திர அறிவை முற்றிலும் பயன்படுத்தி, அத்துடன் உலகம் முழுவதும் மனித வர்க்கத்தின் சால்பாக ஒன்றே அரசியல் சாதனம் என்று மனிதனையே பண்பார்த்து, ஸ்தாபித்தோமானால், மனிதருக்கு உழைப்பின் கண்ணீரின்றிச் செல்வம் விளைக்கலாம் என்று காலஞ்சென்ற வெல்ஸ் தாம் எழுதிய ஒவ்வொரு நூலிலும் கூறினார். இது நடைபெறாவிட்டால் மனிதவர்க்கம் 'கோல்' கோணி கூழும் குடியும் ஒருங்கேயிழக்கும் என்றும் அவர் அடிக்கடி கூறியுள்ளார். உலக யுத்தங்கள் என்றவை கூழும் குடியும் ஒருங்கேயிழக்கும் அரிய சாதனங்களல்லாவா?

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு	ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸன்ட் ரோடு, கும்பகோணம்.

ஆலயப் பிரவேசம்

— ஜி. எஸ். மணி

வீரமலை மனமுடைந்து போய் நிலையின்றி நடந்து கொண்டிருந்தான். சொல்லத்திறமற்ற வேதனை அவனைப் பிய்த்து எடுத்துக் கொண்டிருந்தது.

மலட்டாற்றுப் பாலத்தின் கைப்பிடிச் சுவரின்மீது உட்கார்ந்து ஏதோ பத்திரிகை படித்துக்கொண்டிருந்த ஏழுமலை, அந்தப் பக்கமாய் போகும் வீரமலையைக் கண்டான்.

''என்னா வீரமலையண்ணே! நாடெங்கும் நமக்காக கோயிலுகளை யெல்லாம் தொறந்து விடுறாங்களாமில்லெ? நம்ம ஊருச்சாமி கோயிலை எண்ணைக்குத் தொறந்து விடப் போறாங்களாம்?'' என்று சிரித்தபடி கேட்டுக்கொண்டே குறும்பாகக் கண்ணடித்தான்.

வீரமலைக்கு, 'சுறுக்' கென்று என்னவோ தைத்ததுபோல் பட்டது, ஏழுமலையின் அந்த வார்த்தைகள். ''அட, சரித்தான் போடா, உன் வேலையைப் பாத்துக்கிட்டு! கோயிலாம் !குளமாம்!'' என்று அவன் மீது எரிந்து விழுந்தபடியே நிற்காமல் நடந்தான்.

ஏழுமலை ஏதோ வெறுப்புடன் முணுமுணுத்தது காதிலே பட்டது. வீரமலையின் மனசில் சுழன்று கொண்டிருந்த புயலை ஏழுமலை என்ன கண்டான்? என்னவோ விளையாட்டிற்காக அப்படிக் கேட்டுவைத்தான்; அது தவறா?

ஏதோ நடப்பதைக் கொண்டு ஸாதாரணமாகக் கேட்டான்,. அவன் சொன்னதில் குற்றமில்லை யென்றுதான் வீரமலையும் கருதினான்.

அப்படியிருக்க அன்று காலையில் அவன் அதே வார்த்தைகளைச் சொன்னது மட்டும் எப்படிக் குற்றமாகும்?

அய்யரின் மேற் பார்வையின் கீழே அவனும், வேறுசில கூலியாட்களுமாக, பண்ணையின் பெரிய தோப்பைக் கொத்தி விட்டுக்கொண்டிருந்தார்கள்.

என்னென்னவோ பேசியபடியேஅவர்கள் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். அய்யர், சற்றுத் தூரத்திலே, பத்திரிகை படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

எங்கெங்கோ போய்க்கொண்டிருந்த வேலையாட்களின் பேச்சு, தற்போது அதிதீவிரமாக நடந்துவரும் ஆலயப்பிரவேசத்தைப் பற்றிக் கொண்டது.

''அந்த ஏழுமலையான் கோவிலைக்கூடத் தொறந்து விட்டுடப் போறாங்களாம்டா!'' என்றான் வந்திருந்தவர்களில் ஒருவன்.

வீரமலை சும்மாவிருந்து தொலைந்திருக்கக் கூடாதா? வாயை மூடிக்கொண்டு அவன் இருந்திருக்கும் பக்ஷத்தில் இப்போது இந்த அவஸ்தைக்கும் இடமேற்படாமல் இருந்திருக்கும்! ஆயினும் அவனுடைய வாய்க் கொழுப்பு அவனைப் பேசச் செய்து விட்டது.

''எந்தக் கோயிலு தொறந்தா நமக்கென்ன; தொறக்காட்டியுந்தான் நமக்கென்னடா? நம்ம ஊருச்சாமி கோயிலைத் தொறந்து விட்டாலல்ல நமக்கு லாவம்!'' என்று சொல்லிவிட்டான். அத்துடனாவது நின்று தொலைந்தானா? அங்கே அமர்ந்திருந்த அய்யரின் பக்கம் பார்வையைத் திருப்பிச் சிரித்தும் விட்டான், பாவி!

அவனுடைய தலைச்சுழி, அவன் வாய்க் கொழுப்பின்மூலமே, இறுக்கிச் சுழித்தது.

அந்தச் சிரிப்பிலே நெருப்பின் அலையோடுவதாக நினைத்தார் அய்யர்; அந்தப் பரிஹாஸப் பேச்சு தம்மைத் தூக்கியடிப்பதற்கென்றே பிரயோகிக்கப்பட்டதாக எண்ணினார்; அந்தக் கோவிலில் தாம் வஹித்துவரும் தர்மகர்த்தாப் பதவியைப் பற்றிக் கேவலமாகக் குறிக்கவே, துணிகரமாக வீசப்பட்ட ஒரு பாணமாகக் கொண்டு விட்டார்.

மரண அடிபட்டுவிட்டதுபோலக் குமுறினார்; பொருமினார்; திணறினார்; சீறினார்.

''பாம்பிற்குப் பால்வார்த்து வளர்த்தது போலாகிவிட்டது நான் உன்னை என் பண்ணையில் வைத்துக்கொண்டு காப்பாற்றி வந்தது. அடிமடியில் நெருப்பை வைத்துக் கட்டிக் கொண்டால் அது சுடாமல் இருக்குமா? உன்வாய்க்கொழுப்பு இப்போது

என்னையே மடக்கத் துணிந்து விட்டது. ஸந்தோஷம்! இன்றுடன்—இந்த நிமிஷத்துடன்—உன் ஸம்பந்தத்தை அறுத்துக் கொண்டு விட்டேன்; போய் வா அப்பா!'' என்று விடை கொடுத்து விட்டார்.

அத்துடன் மட்டும் நிற்கவில்லை அவரும், விட்டிருந்தால்தான் எவ்வளவோ தேவலை யென்றாகியிருக்குமே! அவனுடைய கல்யாணச்செலவிற்கென்று நூறு ரூபாய் கடனாகக் கொடுத்திருந்தார். அதைஉடனே திருப்பித் தந்தாக வேண்டுமென்றும், இனியும் அவனிடம் விட்டுவைக்க முடியாதென்றும் கண்டிப்பாக 'நோட்டீஸ்' கொடுத்து விட்டார்.

''எசமானே! என்னை இப்படிப்பண்ணினா என்னா செய்வேன்? ஏளையாச்சே! முகம் பாருங்க ராசா!'' என்று கெஞ்சினான் வீரமலை.

''நின்ற நாளைக்கு நீ வட்டி கொடுக்கா விட்டாலும் போகிறது; அசலை மட்டும் அவசியம் திருப்பியாக வேண்டும்; இல்லையென்றால் உன்னைச் சும்மா விட்டுவிட மாட்டேன்; நினைவில் இருக்கட்டும்'' என்று உறுமினார்.

''அய்யோ! அசலைமட்டும்தான் பண்ணையில் வேலை செய்தே களித்து விடலாமின்னு நம்பியிருந்தேனே? பண்ணையை விட்டும் நீக்கிப்புட்டு, பணத்தையும் கொண்டாண்ணா நான் எங்கே போவேன் சாமி?'' என்று உண்மையில் அழுதே விட்டான்.

அய்யர் வெகு அலக்ஷியமாக நகைத்தார். ''போடா, போ! நாளைக்கே நம்ம ஊர் கோயிலையும் உனக்குத் திறந்து விட்டு விடுகிறேன்; போயி உள்ளே நுழைந்து பார்த்தாயானால் சாமிகிட்டே சொளை சொளையாகப்பணம் வச்சிருக்கும்! கொண்டுவந்து கொடுத்து கடனை அடைத்து விடேன்!'' என்று சொல்லிக்கொண்டே தம் வீட்டுக் கதவைப் படீரென்று அடைத்து விட்டார். அத்துடன் அவர் உள்ளமும் அடைத்துக் கொண்டது. வீரமலையின் நெஞ்சும் அடைத்துக் கொண்டது.

நூறு ரூபாய்களுக்கு அவன் எங்கே போவான்? முழுசாக ஒரு பத்து ரூபாய்களை என்றாவது சேர்ந்தாற்போல் கண்டிருக்கிறானா? அவன் ஆயுளெல்லாம் உழைத்து, ஸம்பாதித்த போதிலும். வயிற்றைக் கழுவியது போக, நூறு ரூபாய் சேர்த்துப் பார்க்க முடியுமா?

வீரமலை பெருமூச்செறிந்தான்.

அவன் வார்த்தைகளால் விளைந்த விபரீதம், அப்பொழுதுதான், அதன் முழு உருவத்துடன் அவனுக்குப் புலனாயிற்று.

ஆனால் அவன் செய்வதறியாமல் தவித்தான். 'அய்யருக்கு எதிரில் அந்த விஷ வார்த்தைகளை ஏன் சொன்னோம்?' என்று அவனுக்கே தோன்றலாயிற்று.

உள்ளூர்க் கோயிலைத் திறந்து விடுவதினால் ஏதோ 'லாபம்' இருப்பதாக அவன் சொன்னானே? அந்த மாதிரி சொன்னதற்கே இவ்வளவு கஷ்டம் அனுபவிக்க வேண்டுமென்றால், நிஜமாகவே திறந்து விட்டபிறகு கிடைக்கப் போகும் லாபத்தில் எந்த விதத்தில் ருசி யேற்படும்? அதனால் அவன் அடையப்போகும் 'பயன்' என்ன?

'பேசுந்தெய்வமாக' நிற்கும் தன் எசமானை விரோதித்துக்கொண்டு அவன் அடைந்த 'லாபத்தைவிட' பேசாத தெய்வமாகிய ஒரு 'புதிர்' அடைந்து கிடக்கும் ஒரு கோயில் திறப்பதில் அவனுக்குக் கிடைக்கக் கூடிய லாபத்தைப்பற்றி அவனால் நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை; அந்த மாதிரி அவன், சொல் அளவில் சொல்லி விட்டதில் கூட அவர் என்ன அப்படிப் பட்ட மகத்தான 'நஷ்ட'த்தை அடைந்து விட்டார் என்பதும் அவனுக்குப் புரியவேயில்லை.

பொதுவில் அவ்வளவும் அவனுடைய வாய்க் கொழுப்பினால் நிகழ்ந்தவை யென்பது வரையில் அவனுக்கு நிதரிசனமாய்ப்பட்டது. அதன் பயனாய் அப்புறம், அடுத்தடுத்து, புறப்பட்டுக்கொண்டேயிருந்த கொடுமைகள், அவனைக்கோரமான இருளில் ஆழ்த்தி, தீவிரமாக உள்நோக்கிச் சக்தியற்றுப் போகும்படி செய்துவிட்டன.

வெதும்பிய உள்ளத்துடனே அவன் தன் சிறு குடிசையினுள் நுழைந்தான்.

வீரமலை நுழைந்து கொண்டிருக்கும் போதே அவன் வரவை எதிர்பார்த்துக் கிடந்தவள் போலே, அவன் மனைவி, அஞ்சலை, கொடிய விஷ ஸர்ப்பமெனச் சீறிக் கொண்டு, ஒரு ஆட்டம் ஆடினாள்.

''இந்தா?; நீயுமொரு ஆம்புள்ளைதானா'' என்றாள் அடக்க முடியாத ஆத்திரத்துடனே.

''யாங்?'' என்று கேட்டு விழித்தான் வீரமலை திக் பிரமை பிடித்தவனைப்போல,

"இல்லெ, கேக்குறேன்? உனக்குத்தான் வெக்கமாயில்லே?" என்று மீண்டும் சீறினாள்.

"என்னா, சொல்லேன்?"

"ஆ...மா...போ! மகா ரோசக்காரன் தான் காட்டியும்! ஒன்வாய்த்திமுறுலே எந்த எளவையாவது நீ சொல்லித் தொலெச்சுப்புட்டு ஒரே போக்கா போயிருவே? ஒன் எளவுக்காக, இங்கே கெடக்கறவ. நா வேறே அவமானப் படணுமாங் காட்டியும்?"

"என்னா நடந்திருச்சு?"

"சொன்னாக் கிளிச்சுப்புடுவையோ ரொம்ப! நாளைப்பொழுதுக்குள்ளே இந்த மனையைக் காலி பண்ணிக் குடுத்துடணுமாம்? இல்லாட்டிப்போனா, சட்டிபானை எல்லாத்தையும் வெளியே எடுத்தெறிஞ்சுப்புட்டு, என்னெயும், கையைப் புடிச்சு இழுத்து தெருவுலே வுட்டுட்டு போயிறுவேண்ணு காத்தான்வந்து இத்தினிநேரமும் 'கண்ணா பின்னா'ண்ணு பேசிவிட்டு இப்பதான் போறான். இன்னொரு ஆம்புள்ளெ வந்து என்னெப்பார்த்து இப்புடி பேச வச்சுட்டயே? நீ எம் புருசன்தானோ? ஒனக்கு வெக்கமாயில்லெ? தூ!" என்று வீரமலையின் மூஞ்சியில் இடித்தாள்.

வீரமலை வாய்திறவாமல் மீண்டும் வெளியில் வந்தான். அவன் குடியிருந்த மனையும் அய்யருடையதுதான்; காத்தான் அவர் பண்ணையில் வேலைபார்க்கும் மற்றொரு ஆள்.

'என்ன செய்வது' என்ற பிரச்னை, பண்ணையைவிட்டு நீக்கப்பட்டதுமுதல், அவனை உலுக்கியெடுத்துக்கொண்டே யிருந்தது. நெருக்கடி வரவர அதிகமாகிக்கொண்டே வந்தது. இப்போது, தவிர்க்க முடியாதபடி, உச்சநிலையை அடைந்திருக்கிறது இனி......?

அண்ணாந்து ஆகாயவெளியை நோக்கினான். நக்ஷத்திரத்தின் சிறுபொறியொன்றுகூட இல்லாமல் இருளடைந்து கிடந்தது. குனிந்து குடிசையின் உள்ளே பார்த்தான்; ஒரே அந்தகாரம். அவன் மனசும் அப்போது அதேமாதிரிதான் இருந்தது; அத்துடன் இன்னொன்றும் வீரமலைக்கு நினைவு வந்தது; அந்தஊர்க்கோயிலும்கூட அந்த மாதிரியே இருள்சூழ்ந்து இருப்பதை அவன் அநேகம் தடவைகளில் கண்டிருக்கிறானே! ஆம்! வெளியிலிருந்து பார்க்கும்போது அந்தக் கோயிலும் அந்தகாரத்தில் ஆழ்ந்திருப்பதாகத்தான் தோன்றியது; உள்ளே புகுந்து பார்த்தால்......?

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா'' இன்புளூயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும் சரி, சூடுகாரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறாவிடினும், மயிர் உதிரும்போது தக்கசிகிச்சை செய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கும் முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால்பங்காகிக் குறைந்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரீக்ஷைகளும் செய்தான பிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவந்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே!

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

சிவ, சிவ! மறுபடியும் அந்த நினைவா! சிவ, சிவா!

தூரத்திலேயிருந்து கோயில்மணியோசை காற்றிலே மிதந்துவந்தது. "பூசையாகிறது போலிருக்கிறது" என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டான் வீரமலை.

இந்த உலகத்துச் சிந்தனையே அற்றுவிட்டதுபோலே, அவன் கோயில் இருந்த திசையை நோக்கிமெதுவாக நடக்கலானான். அவனையறியாமலேயே, ஏதோ ஒரு சக்தி, அவனைக் கொண்டு சென்றது என்று சொல்வதுதான் இன்னும் பொருத்தமானது.

கோயிலை அணுகியதும் நின்ருன். காரணமின்றி, ஏனோ, அவன் நெஞ்சு 'திக், திக்' கென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. கோயிலை, அவன், கண்ணால் பார்ப்பதுகூடப் பாவமோ என்று நினைத்துக்கொண்டான்.

சின்னஞ்சிறு கோயில்தான்; தெருவிலிருந்து பார்த்தால் அம்பாள் ஸன்னிதி ரொம்ப நன்ருகத் தெரியும். வீரமலை சாலையோரத்தில் நின்றுகொண்டுதான் கோவிலை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அம்பாளின் சிலைக்குஅருகே மங்கலாக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்தச் சிலையின் கழுத்திலே ஏதோ நகையொன்று பளபளத்தபடி தொங்கியது.

அன்று வெகுநேரமாகியும்கூட, கோயில் ஏனோ திறந்திருந்தது. அதற்குமுன்னர், அநேகம் தடவைகளில், அவன் அந்தச்சாலையில் போகும்போதும், வரும்போதும், கவனித்திருக்கிருன், ஒரு பக்கம் இருட்டுவதற்கு முன்னரே, கோயில் கதவுகள் மூடப்பட்டுவிடுவதை; ஸ்வாமி தரிசனத்திற்கு வருபவர்களும் அதிகம்இல்லை; அப்படி வருபவரும் வெளிச்சத்துடனேவந்து போய்விடுவார்கள்; அப்புறம் வேலையில்லாத குருக்கள்அய்யர், இருட்டுகிறவரையில், கோயில் வாசற்படியில் 'சிவனே' யென்று உட்கார்ந்துகிடப்பார்.

இவையெல்லாம், சாதாரணமாக வீரமலை காணுபவையே.

ஆனால் அன்று இருட்டி வெகு நேரமாகிவிட்டபோதிலும் கோயில் கதவுகள் விரியத் திறந்தே இருந்ததுபற்றி அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. கோயிலுக்குள்ளே சந்தடியின்றி நிசப்தமாய் இருந்தது அவனுக்கு மேலும் வியப்பையளித்தது. கோயில் வாசலில் குருக்கள்அய்யர்கூட இல்லாமல் இருந்ததைக் கண்ட வீரமலைக்கு ஒன்றுமே புரியவில்லை.

நிர்மானுஷ்யமாய் நின்ற கோயிலைப் பார்த்தபடியே, அவன், கொஞ்சநேரம் அப்படியே நின்ருன்.

அப்புறம் என்ன தோன்றியதோ, பித்துப் பிடித்தவனைப் போலே, 'விடுவிடெ'ன்று அந்தக்கோயிலுக்குள்ளே ஓடினன்.

மஹாமண்டபத்தில் நுழைந்து, அங்கேயே நின்றபடி இங்குமங்கும் பார்த்தான். அடுத்தாற்போல், 'மள மள' வென்று அர்த்த மண்டபத்தில் நுழைந்து. சற்றும் யோசிக்காமல், நேரே அம்பாளின் கர்ப்பக்கிருஹத்திற்குள்ளேயும் பிரவேசித்து விட்டான்!

திடீரென்று அப்போது வெளியில் ஏதோ அரவம் கேட்கவே ஒரு ஆள் உயரத்திற்கு நின்ற சிலையின் பின்னே சட்டென்று ஓடி யொளிந்து கொண்டான்.

குருக்கள் கனைத்தபடியே வெளியேயிருந்து. கோவிலுக்குள் வந்தார். அவர் பின்னலேயே பெரிய பண்ணை அய்யர்வாளின் குரலும் கேட்டது.

"என்ன குருக்களே? ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டேனே? இன்றைக்கு" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

"அதனலென்ன, பரவாயில்லை; வாருங்கள்!" என்று அளவற்ற மரியாதையுடன் வரவேற்ருர் குருக்கள்.

"அப்பா இத்தனும் பெரிய கோவிலிலே இந்தக் குருக்கள் மாமா இவ்வளவு நாழி தனியாகவா இருந்தார்?" என்று ஒரு சிறுமியின் குரலும் வந்தது. அச் சிறுமி அய்யர்வாளின் கடைசிப் பெண் குழந்தை.

அய்யர்வாள் சிரித்தார், "தனி என்னம்மா? ஸ்வாமிதான் துணை இருக்காரே!" என்று அன்புடன் பதில் சொன்னர்.

"என்னமோ? இக்குழந்தை இந்தமட்டும் பிழைத்ததே, அந்த அம்பாளின் பரிபூர்ண அனுக்ரஹம்தான்" என்று என்னவோ உபசாரம் சொன்னர் குருக்கள்.

"குழந்தை புனர்ஜன்மம்தான் எடுத்திருக்கிருள் குருக்களே! ஸர்ப்பமாவது, ஸர்ப்பம்! அம்மா போட்டிருந்தால்......?" என்றபோது அய்யர்வாளுக்குப் பேசமாட்டாமல் தொண்டை அடைத்துக்கொண்டது.

"அம்பாளின் கிருபை! அம்பாளின் கிருபை!" என்ருர் குருக்கள் மீண்டும் உருக்கமாக.

"ஸரி; அர்ச்சனை நடத்தலாமா?"

"ஆஹா"

அவ்விருவருடைய குரல்களும் கோயிலுக்குள்ளே விடாமல் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

அம்பாளின் ஸன்னிதிக்கு எதிரே வந்து நின்றனர் மூவரும். குருக்கள் அர்ச்சனைக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று "அப்பா" என்ற பயங்கர மரன அலறல் அந்தச் சிறுமியிடமிருந்து வெளிப்பட்டது.

"என்னம்மா? என்ன? என்ன?" என்று துடித்துப்போனார் அய்யர்வாள்.

"அதோ! பெரிய பாம்பு மாதிரி நெளியறது!" என்று கூவிய சிறுமி தக்ஷணமே மூர்ச்சையானாள்.

கையில் தாங்கிக் கொண்டிருந்த அவளைக் கீழே கிடத்துவதற்குள்ளாக அய்யர்வாள் வெய்துயிர்த்துப் போனார்.

படபடக்கும் நெஞ்சுடனே, நிலையின்றிப் பதறும் உடம்புடனே, நடுங்கும் கரத்துடனே, அவர் தம் மடியில் வைத்திருந்த கை விளக்கையெடுத்து, விசையை அழுத்துவதற்குள்ளாக ஒரு யுகமே கடந்து விட்டது போலிருந்தது.

'பாட்டரி' விளக்கின் பிரகாசமான ஒளியில் அவர், குழந்தை காட்டிய இடத்தைப் பயத்துடன் நோக்கினார்.

ஆம்; கர்ப்பக் கிருஹகத்தின் வாயிலருகே சுருட்டி வளைத்த படி ஒரு முரட்டு ஸர்ப்பம் பெரிதாகப் படமெடுத்துச் சீறியது.

குருக்கள் கையிலிருந்த அர்ச்சனைத் தாம்பாளம் தடாலென்று பெருத்த ஓசையுடனே தரையில் விழுந்து உருண்டோடியது.

அய்யர்வாளின் ரத்தம் உறைந்து விட்டது; நாக்கு உலர்ந்து விட்டது; தொண்டை வறண்டு விட்டது.

நிலை குத்திட்டுப் போய் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, படத்தை அடக்கிக் கொண்ட பாம்பு, மெதுவாக ஊர்ந்து, ஊர்ந்து, அங்கேகிடந்த குழந்தையின் அருகே நகர்ந்தது.

அய்யர்வாளுக்கும், குருக்களுக்கும், ரோமம் குத்திட்டு நின்றது.

யாரிடமிருந்து வந்ததோ, தெரியாது-சிலிர்க்கும் குரலில் "அய்யோ! குழந்தை!" என்ற அலறல்.

சிலைக்குப் பின்னுலிருந்து இரண்டே எட்டில் பாய்ந்து வந்த வீரமலை, வந்த சுருக்கிலேயே, அஸாதாரணமான துணிவுடனே, அந்த நல்ல பாம்பின் வாலைப் பிடித்து, சடேரென்று தலை கீழாகத் தூக்கியெடுத்து, அந்தரத்திலே 'கிறு கிறு' வென்று பம்பரமாக அதைச்சுழற்றி, முழு பலத்துடன் கோவிலுக்கு வெளியே வீசி விட்டான்.

வீரமலை எங்கிருந்து வந்தான்? என்ன செய்தான்?—என்பதே சற்றும் புரியாத விதத்தில், அய்யர்வாளும், குருக்களும், ஸ்தம்பித்துப் போயிருந்தனர்.

தெய்வ ஸான்னித்யத்தில் அப்போது குடிகொண்டிருந்த மரண அமைதியை, வெளிப்பக்கமிருந்து வந்த ஆந்தையொன்றின் பயங்கரமான அலறல் ஆழமாக ஊடுருவி நின்றது.

மயக்க நிலையிலிருந்து முதலில் தெளிந்தவர் அய்யர்வாள்தான். "அப்பா, வீரமலை! என் குலதெய்வமாக எங்கிருந்து வந்தாயப்பா?" என்று நாத் தழுதழுக்க ஆர்வத்துடன் வினவினார்.

"எசமான்! நான் மகாப் பாவிப்பய எசமான்! அந்தத் தெய்வத்தாயின் கழுத்தில் இருக்கும் சங்கிலியைத் திருடி வித்து, உங்களிடம் நான் பட்ட கடனை அடைக்க வந்தேனுங்க! அய்யோ! இந்தச் சண்டாளப் பயலின் எண்ணம் அந்தக்கடவுளுக்கே பொறுக்கல்லைங்க; அதான் நல்லபாம்பைப் பூற விட்டிருக்கு? அது என்னெக்கடிச்சு நான் செத்தாலும் சாவுறேன்; நம்ப கொளந்தை நல்லாயிருக்கணுமிண்ணு ஓடியாந்து பாம்பைக் கையாலேயே பிடிச்சு வெளியே எறிஞ்சேனுங்க; தெய்வம் என்னெ தண்டிக்கல்லியே? இன்னும் கல்லுப்போல நின்னுக்கிட்டு இருக்குறேனே!" என்று சொல்லமாட்டாமல் சொல்லி 'ஹோ' வென்று கதறி விட்டான் கதறி.

அய்யர்வாள் வெகுநேரம் ஒன்றுமே பேசாமல் ஸ்தம்பமாய் நின்றுகொண்டிருந்தார்; அவரால் பேசவே முடியவில்லை; கரை கடந்த உணர்ச்சிப் பெருக்கு வெறும் வார்த்தைகளை விழுங்கி விட்டது.

"அப்பா வீரமலை! இனிமேல் நீ என்னிடம் கடன் பட்டிருக்கவில்லை; நான்தான் இனி எத்தனையோ ஜன்மாக்களுக்கு உன்

னிடம் கடன் பட்டிருக்கிறேன்! இதே தெய்வ ஸாக்ஷியைக் கொண்டு சொல்லு கிறேன்; இந்தக்ஷணம்முதல், இதோ, இரண்டே நாட்களுக்குள்ளாக இரண்டு தடவை செத்துப் பிழைத்த இந்த என் குழந்தையுடன் நீயும் எனக்கொருகுழந்தை; என் அகக்கண்ணையும் இன்று தான் தெய்வம் திறந்துவிட்டது" என்று உருக்கத்துடன் சொல்லிக் கண்ணீர் விட்டார்.

* * *

மேலே சொல்லிய விஷயம் நடந்து ஒரு வாரத்திற்குள்ளாகவே அந்தச் சிறிய கிராமத்திலே, தேசமே வியந்து போற்றும் வகையில், ஹரிஜன ஆலயப் பிரவேசம், யாதொரு விக்னமும் இல்லாமல் விமரிசையாக நடந்தேறியது. ஹரிஜனங்களின் உள்ளம் மலர்ந்தது. அய்யர்வாளின் உள்ளம் குளிர்ந்தது.

ஆனல் அன்றைய ஆலயப் பிரவேசத்திலே, என்றென்றும் அந்தக் கிராம வாசிகள் அதிசயப்படத் தகுந்த ஒரு விஷயமும் இல்லாமல் இருக்கவில்லை. அன்று நடந்தேறிய ஆலயப்பிரவேச மகோத்ஸவத்திலே, ஒரேயொரு ஆத்மா பிடிவாதமாக, கலந்துகொள்ள மறுத்து ஒதுங்கியே நின்றுவிட்டது. அந்த ஆத்மாதான் வீரமலை,

அன்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டதாவது:

"என்னைப் பைத்தியம் என்று நினைக்கும் இந்த ஜனங்கள்தான் நிஜப்பைத்தியங்கள். மனித சமூகத்தின் உள்ளம் திறக்காமல், கோயில் கதவுகள் மட்டும் திறப்பதில் உண்மையான பிரயோசனமே கிடைக்காது. கோயிலுக்குள்ளே கிடப்பதுகூட மனித உருக்கொண்ட சிலைதான்; உண்மையான தெய்வம், தன்னையறிந்து கொள்ளும் மனித உள்ளத்திலேதான் நடமாடுகிறது; பொய்த் திரைகளை விலக்கிவிட்டு உள்ளன்புடன் நோக்கும் ஒவ்வொரு ஜீவனிடமும்தான் நிஜதெய்வத்தைக் காணமுடியும்!!

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறுர்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை:— 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

விீல் பாரோஸ்



இரு சக்கரமுள்ளது

18 கேஜ் எஃகு தகடுகளைக்கொண்டு செய்யப்பட்ட உடல். 2·75 கன அடி சாமான்கள் கொள்ளும். எஃகுவினால் பற்றவைத்து செய்யப்பட்ட தட்டை பிரேம், சக்கரங்கள், டாங்கியுடன் கூடியது.



ஒரே சக்கரமுள்ளது

18 கேஜ் எஃகு தகடுகளைக்கொண்டு செய்யப்பட்ட உடல். 2·75 கன அடி சாமான்கள் கொள்ளும். எஃகுவினால் பற்றவைத்து செய்யப்பட்ட குழாய் கைப்பிடி, 16" சக்கரம் கூடியது.

CA2TM.

விலைகள், மற்ற விவரங்களுக்கு:—

ஸிம்ஸன் அண்ட் கம்பெனி, லிமிடெட்.
மவுண்ட் ரோட்,...... சென்னை.

பிராஞ்சுகள்:—பெங்களூர், உதகமண்டலம், திருச்சினாப்பள்ளி, ஹைதராபாத் (D.n.)

— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.